# ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்கள்!

*நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச்*
*செவ்வையாக்குவேன். உன்னைப் பெயர்சொல்லி அழைக்கிற*
*இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே என்று*
*நீ அறியும்படிக்கு, வெண்கலக் கதவுகளை உடைத்து,*
*இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற*
*பொக்கிஷங்களையும் ஒளிப்பிடத்தில் இருக்கிற*
*புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்...*
(ஏசாயா 45:2-4).

## வேதாகமத்தில் சங்கீதங்களில் புதைந்து இருக்கும் கிறிஸ்தவ வாழ்வுக்கான சாட்சியின் வசனங்கள்

**விஜயகுமார் சாமுவேல்**

**Ozhippidathil Irukkira Pudhayalgal**
*(Hidden Treasures of Secret Places)*
*Tamil*

First Edition : 2016
Total Copies :

© All Rights Reserved

**Vijayakumar Samuel**
**Living Water Revival Ministries**
Email : livingwaterrevivalministry@gmail.com
livingwatersam@gmail.com
Website : www.livingwaterrevivalministry.org
Mobile : 94443 13658

# பொருளடக்கம்

பக்கம்

1. தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்! ............ 5
சங்கீதம் 66

2. கர்த்தரிடத்தில் கிருபையும் திரளான மீட்பும் உண்டு ....... 18
சங்கீதம் 130

3. தேவனே உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும் ........ 31
சங்கீதம் 80

4. அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம் ............ 41
சங்கீதம் 84

5. இயேசு ஒருபோதும் கைவிடார்! ................................ 54
சங்கீதம் 22

6. உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் 69
சங்கீதம் 143

7. ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்! .................... 80
சங்கீதம் 123

8. நீ அசைக்கப்படுவதில்லை! ....................................... 92
சங்கீதம் 16

9. இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகள் .......... 104
சங்கீதம் 56

10. கர்த்தர் பெரியவர்! மிகவும் புகழப்படத்தக்கவர் .............. 115
சங்கீதம் 145

11. உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன்! .............. 126
சங்கீதம் 90

12. தேவனே உம்மைப்பார்க்க ஆசை! ............................ 137
சங்கீதம் 63

புத்தகத்தைப்பற்றி ................................................ 150

# முகவுரை

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும்
ஆட்டுக்குட்டியானவருக்கும்
ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும்
சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

இந்த விசேஷ செய்தி தொகுப்பிற்கு துவக்கமும் நிறைவும்
காரணருமான பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம் ஸ்தோத்திரிக்கிறோம்.
கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்;
இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்.

மனமுவந்து இப்பணியின் பல நிலைகளிலும் உற்சாகப்படுத்தி உதவி செய்த
கிறிஸ்துவுக்குள்ளான சகோதர, சகோதரிகளுக்கும் மனமார்ந்த நன்றி.
பிரியமானவர்களே, நீங்கள் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள
பிரயாசத்தை மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே!

ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட
பொக்கிஷங்களை வாசித்து மகிழ்ந்து
எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ள தீர்மானித்திருக்கிற உங்களிடத்தில்
தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருப்பதாக.

# 1. தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்!

*... இதோ நான் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறேன்;*
*பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத*
*அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன்;*
*உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய*
*செய்கையைக் காண்பார்கள்; உன்னோடேகூட இருந்து, நான் செய்யும்*
*காரியம் பயங்கரமாயிருக்கும்.* (யாத்திராகமம் 34:10)

நம்முடைய விசுவாச வாழ்வில் கோணலானவைகளைச் செவ்வையாக்கும்படியாக, நமக்கு முன்னே போகும் கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே, **ஒளிப்பிடத்தில் இருக்கும் புதையல்கள்** என்கிற இந்தப் புத்தகத்தில், சங்கீதங்களைச் சார்ந்த செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தி தொகுப்பின் முதலாவது பொக்கிஷமாக, 66ஆம் சங்கீதத்தைச் சார்ந்த இச்செய்தி இடம் பெற்றுள்ளது.

## சங்கீதங்களின் புஸ்தகம்

வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள சங்கீதங்கள், பழமையான ஆவிக்குரிய எபிரெய பாடல்களின் தொகுப்பாகும், பல நூற்றாண்டுகளாக சபைகூடிவரும் போதும், தனிநபரின் தியான வேளைகளிலும் இவை உபயோகத்தில் இருந்து வருகிறது. சங்கீதங்கள் இந்நாட்களிலும் அநேக தேவனுடைய பிள்ளைகளுக்கு, எல்லாக் காலங்களிலும் வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும், பேருதவியாக இருக்கிறது; எல்லோராலும் விரும்பி வாசிக்கப்படுகிறது. 700 ஆண்டுகளுக்கு மேலான காலக்கட்டத்தில் இயற்றப்பட்ட பாடல்களின் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் சங்கீதங்கள், இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் தொகுக்கப்பட்டு வரிசைப்படுத்தப்பட்டவையாகும்.

இந்தச் சங்கீதங்கள், சங்கீதக்காரன் என்று அறியப்பட்டிருக்கிற தாவீது இராஜாவினாலும், மோசே, சாலொமோன், ஆசாப் (தாவீதின் நாட்களிலிருந்த பாடற்குழு தலைவர்), கோராகின் புத்திரர் போன்றோராலும் எழுதப்பட்டவைகளாகும். புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுகிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசன வார்த்தைகளில் பாதிக்கு மேலானவை சங்கீதங்களிலிருந்து எடுக்கப்பட்டவைகளே.

முந்தைய காலங்களில், தேவ மனிதர் வாழ்வில் கர்த்தர் நடப்பித்த பயங்கரமானக் கிரியைகளின் சாட்சிகளும், வாழ்வின் நெருக்கங்களில் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களும், விண்ணப்பங்களும், கர்த்தர் நன்மை செய்தபடியால் அவரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடிய பாடல்களும் சங்கீதங்களில் இடம் பெற்றுள்ளன.

மேலும் சங்கீதங்கள், தேவனுடைய பிள்ளைகள் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், வருங் காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் போன்ற சத்தியவசனங்கள் அடங்கிய பொக்கிஷமாகவும் இருந்து வருகிறது.

## தேவனுடைய நாமத்தைத் துதித்துப் பாடுங்கள்

சங்கீதங்களின் புஸ்தகத்தில் 66ஆம் சங்கீதம், சங்கீதமாகிய பாட்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது தேவனுடைய துதியின் மகிமையைக் கொண்டாடி, தேவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் எழுதப்பட்டுள்ளது. இதினிமித்தமே சங்கீதக்காரன்: தேவனுடைய நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள் (சங்கீதம் 66:2) என்கிறார். மேலும் அவர்: பூமியின்மீதெங்கும் உம்மைப் பணிந்துகொண்டு உம்மைத் துதித்துப் பாடுவார்கள்; அவர்கள் உம்முடைய நாமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்று சொல்லுங்கள் (சங்கீதம் 66 : 4) என்றும் எழுதியிருக்கிறார்.

தேவன் மனுபுத்திரரிடத்தில் நடப்பிக்கும் பயங்கரமான கிரியைகளைக் கண்டு, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து துதிக்கும் சத்தத்தைக் கேட்கப்பண்ண, சபையாக, சமுதாயத்தின் ஓர் அங்கமாக நாம் அழைக்கப்படுகிறோம். தேவனுடைய கிரியைகளைக் கண்டு துதிக்கும் தேவனுடைய பிள்ளைகள்,



தேவனால் வெள்ளியைப் புடமிடுகிறதுபோல புடமிடப்பட்டு சோதிக்கப்பட்டு, செழிப்பான இடத்தில் கொண்டுவந்து விடப்படுகிறார்கள். நிறைவில், இவ்வண்ணமாக தனிமனிதன் பெற்ற உள்ளான ஆத்தும மீட்பின் நற்செய்தியை, புறம்பாக தேவனுக்குப் பயந்தவர்களுக்கு சாட்சியாக அறிவித்து, தேவனுடைய நாமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய கிரியைகள் எவ்வளவு பயங்கரமானவை என வாழ்வில் நாம் காண முடிகிறது. அவருடைய கிரியைகளைக் கண்டு விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளுகிற தேவஜனம், தேவனால் சோதிக்கப்பட்டு புடமிடப்பட்ட பின், தேவனுடைய கிருபை ஏற்படுத்துகிற உள்ளான மாற்றத்தை தனிமனிதன் வாழ்வில் சாட்சியாக கேட்க முடிகிறது.

தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள். தேவனுக்கு பயந்தவர்களே, தேவன் எங்களைச் சோதித்தறிந்தபின், அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன்; நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள் என்பதே இந்தச் சங்கீதமாகிய பாட்டின் மையக் கருத்தாக இருக்கிறது.

## தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்

நாம் ஆராதிக்கும் தேவனாகிய கர்த்தர், பூமியிலே தாம் நடப்பிக்கும் கிரியையில் பயங்கரமானவராயிருக்கிறார். தேவனுக்கும் அவருடைய ராஜ்யத்திற்கும், தேவனுடைய பிள்ளைகளுக்கும் அவருடைய சாட்சிகளுக்கும் விரோதமாய் எழும்புகிற சத்துருக்கள் யாவரும், தேவனுடைய மகத்துவமான வல்லமையினிமித்தம், இச்சகம்பேசி அடங்குகிறார்கள்.

இந்த உண்மையை அறிந்து அனுபவித்த சங்கீதக்காரன்: தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்; அவர் மனுபுத்திரரிடத்தில் நடப்பிக்கும் கிரியையில் பயங்கரமானவர். கடலை உலர்ந்த தரையாக மாற்றினார்; ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள்; அங்கே அவரில் களிகூர்ந்தோம். அவர் தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார்; அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக்கிறது; துரோகிகள் தங்களை உயர்த்தாதிருப்பார்களாக (சங்கீதம் 66 : 5-7) என்று சாட்சியாக எழுதி வைத்திருக்கிறார்.

தேவனாகிய கர்த்தருடைய மகத்துவங்களைத் தனிப்பட்ட வாழ்வில் கண்டு உணர்ந்து, இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரையே தெய்வமாக ஏற்றுக் கொள்ளுவோருக்கு, இது விசுவாச வாழ்வின் முதல் நிலையாக இருக்கிறது. நம்முடைய தேவனாகிய கர்த்தர், தனிப்பட்ட வாழ்வில், குடும்பத்தில், சபைகளில், சமுதாயத்தில் நடப்பிக்கிற பயங்கரமான வியக்கத்தகும் கிரியைகள், பல வேளைகளில் இவைகளைக் காணும் அநேகரது வாழ்விலும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

நவீன மருத்துவமும், மருத்துவர்களும் கைவிட்ட நிலையில் தீராத கொடிய வியாதிகளிலிருந்து பூரண சுகம் பெறும்போதும், பிள்ளைகளுக்காக காத்திருப்போருக்கு கர்த்தர் கர்ப்பத்தைத் திறந்து ஆசீர்வதிக்கும்போதும்; இன்னும் வாழ்வில் சமாதானம் இழந்து தவிப்போர், பொருளாதாரம் பாதிக்கப்பட்டு கடன் பிரச்சனைகளால் கஷ்டப்படுவோர், திருமணத்திற்காக காத்திருப்போர் போன்ற அநேகர் வாழ்வில், தேவனாகிய கர்த்தரே இடைப்பட்டு அற்புதங்களையும், பலத்தக் கிரியைகளையும் நடப்பிக்கும் போதும், தேவனுக்கே தங்கள் வாழ்வை அவர்கள் அர்ப்பணிக்கிறார்கள். இவ்வகையான சாட்சிகள் நிமித்தம் அவர்களைச் சூழ்ந்திருப்போரும் கர்த்தரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள ஏதுவாக இவை அமைகிறது. அல்லேலூயா!

## கடலை உலர்ந்த தரையாக மாற்றினார்

எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து கர்த்தருடைய பலத்த கையினால் மீட்கப்பட்ட தேவஜனம், வாக்களிக்கப்பட்ட பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை நோக்கி வனாந்திர வழியாக பிரயாணம்பண்ணி சமுத்திரக்கரையிலே பாளையம் இறங்கினார்கள். அப்பொழுது எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன்னுடைய சேனையோடு தங்களுக்கு வேலை செய்யும்படிக்கு இஸ்ரவேலரை மறுபடியும் அடிமைப்படுத்த எண்ணி, இஸ்ரவேல் புத்திரரைப் பின்தொடர்ந்தான்.

அந்த இக்கட்டான வேளையில், கர்த்தருடைய வார்த்தையின்படி, தேவனுடைய தாசனாகிய மோசே தன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டினான். கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படிச் செய்து அதை வறண்டுபோகப்பண்ணினார். ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று (யாத்திராகமம் 14:21). கர்த்தர் எகிப்தியரைக் கடலின் நடுவே கவிழ்த்துப்போட்டார். இஸ்ரவேல் புத்திரரோ, சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையின் வழியாய் நடந்துபோனார்கள். அல்லேலூயா!



இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து ரட்சித்தார். கர்த்தர் எகிப்தில் செய்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள். அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள் (யாத்திராகமம் 14:31). தேவனுடைய பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும், கர்த்தர் தாம் வாக்களித்தபடியே, இப்பேர்ப்பட்ட பலத்தக் கிரியைகளை நடப்பிக்கும்போது, நாமும் கர்த்தருக்குப் பயந்து அவரை விசுவாசிக்கிறோம்; அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளைகளாகிறோம். அல்லேலூயா!

## ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள்

அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டு, வனாந்திர வாழ்வும் நிறைவுபெற்று, வாக்களிக்கப்பட்ட தேசத்தைச் சுதந்தரிக்கச் செல்லும்போதும், இதைப்போன்றே கர்த்தர் தம்முடைய பயங்கரமானக் கிரியையை அவர்களுக்கு விளங்கச் செய்தார். இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் சித்தீமிலிருந்து பிரயாணம் பண்ணி, யோர்தான்மட்டும் வந்து ஆற்றைக் கடந்து போகுமுன்னே, அங்கே இராத்தங்கினார்கள்.

அப்பொழுது கர்த்தர் யோசுவாவை நோக்கி: நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு, இன்று அவர்கள் கண்களுக்குமுன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன். உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியரைப் பார்த்து: நீங்கள் யோர்தான் தண்ணீர் ஓரத்தில் சேரும்போது, யோர்தானில் நில்லுங்கள் என்று நீ கட்டளையிடுவாயாக என்றார் (யோசுவா 3: 7,8).

அப்படியே ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியை ஜனங்களுக்கு முன்னே சுமந்துகொண்டுபோய், யோர்தான் மட்டும் வந்தார்கள். யோர்தான் அறுப்புக்காலம் முழுவதும் கரைபுரண்டுபோம். பெட்டியை சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே, மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று ஒரு குவியலாகக் குவிந்தது. இஸ்ரவேல ரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாய்க் கடந்துபோனார்கள். அல்லேலூயா!

கடலை உலர்ந்த தரையாக மாற்றின சம்பவம், தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து கர்த்தரிடத்திலும், அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைக்கும்படியாக வழிநடத்தியது. யோர்தான் ஆற்றை தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாய்க் கால்நடையாய்க் கடந்தார்கள். கர்த்தருடைய வார்த்தையின்படி இந்தக் கிரியையின் மூலம், அந்நாளிலே இஸ்ரவேலருடைய கண்களுக்கு முன்பாக கர்த்தர் ஊழியக்காரனாகிய யோசுவாவை மேன்மைப்படுத்தினார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, செங்கடலைப் பிளந்து வழியை உண்டாக்கியவர், யோர்தானைக் கால்நடையாய்க் கடந்து செல்ல வழியை ஏற்படுத்திய நம் தேவன், தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார்; தேவனுடைய பிள்ளைகள் வாழ்வில் இந்நாட்களிலும் பலத்தக் கிரியைகளை நடப்பித்து வருகிறார். அந்த தேவனுடைய செய்கைகளை வந்து பார்த்து, அவர்மேல் விசுவாசமுடையவர்களாய் அவரை ஏற்றுக்கொள்ள கர்த்தர் உன்னை அழைக்கிறார். விசுவாசித்து காத்திருக்கிற உன்னுடைய வாழ்விலும் குடும்பத்திலும் ஊழியத்திலுங்கூட பலத்தக் கிரியைகளை நடப்பிக்க, கர்த்தர் வல்லவரும் நல்லவரும் போதுமானவருமாய் இருக்கிறார். அல்லேலூயா!

## தேவனே எங்களைச் சோதித்தீர்

தேவனுடைய பயங்கரமானக் கிரியைகளை வாழ்வில் கண்டுணர்ந்து, அவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளைகளை, வெள்ளியைப் புடமிடுகிறதுபோல கர்த்தர் புடமிட்டு சோதித்தறிகிறார். இதையே சங்கீதக்காரன்:



தேவனே, எங்களைச் சோதித்தீர்; வெள்ளியைப் புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர். எங்களை வலையில் அகப்படுத்தி, எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர் (சங்கீதம் 66: 10-12) என்று எழுதி வைத்திருக்கிறார்.

இதோ, உன்னைப் புடமிட்டேன்; ஆனாலும் வெள்ளியைப் போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன் (ஏசாயா 48:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். செழிப்பான இடத்தைச் சென்றடைய, தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் கடந்து செல்ல வேண்டியுள்ளது. நம்முடைய பிதாவாகிய தேவனும், இரட்சிப்பின் அதிபதியான தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது (எபிரெயர் 2:10) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

வலையில் அகப்படுதல் என்பதும், இடுப்புகளின் மேல் ஏற்றப்படும் வருத்தமான பாரம் என்பதும், மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் வாழ்வில் தோன்றும் நெருக்கங் களையும் பாடுகளையும் குறிக்கிறது. மீன்களைப் பிடிக்க மீனவர்கள் வலையையும், குருவியைப் பிடிக்க வேடர்கள் கண்ணியையும் பயன்படுத்துகிறார்கள். வாழ்வின் சுதந்தரம் பறிக்கப்பட்டு, தான் விரும்பினபடி வாழாமல், நெருக்கங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் உட்பட்டு இருக்கும் நிலையை இது வெளிப்படுத்துகிறது.

மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப் பண்ணினீர் என்பது, இவ்வுலக வாழ்வில் பலரும் நம்மை அடக்கி ஆளுகை செய்ய முயன்று, நிந்தைகளுக்கும் பரியாசங்களுக்கும் உட்படுத்துகிறதைக் காட்டுகிறது. நிறைவில், தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம் என்பது, கர்த்தருக்கென ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான சுத்திகரிப்பை நினைவூட்டுகிறது. யுத்தத்தில் கொள்ளையடிக்கப்பட்டவைகளை சுத்திகரிக்கும்படியாக

மோசே மூலம் அருளப்பட்ட பிரமாணத்தில், அக்கினிக்கு நிற்கத்தக்கவைகளாகிய பொன் வெள்ளி இரும்பு போன்றவைகளை சுத்தமாக்கும்படி அக்கினியிலே போடவும், அக்கினிக்கு நிற்கத்தகாதவைகளை தண்ணீரினால் சுத்தம் பண்ணவும் (எண்ணாகமம் 31:22,23) கட்டளையிடப்பட்டிருக்கிறது.

## ஆவியானவர் உங்களாலே மகிமைப்படுகிறார்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, கர்த்தருடைய பயங்கரமான கிரியைகளையும், வாழ்வில் அவர் செய்துவருகிற அற்புதங்களையும் கண்டு, இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய ஆத்தும இரட்சிப்பு பூரணப்பட, வலையையும் கண்ணியையும், இடுப்புகளின் மேல் பாரம், தலையின் மேல் ஏறிப்போகுதல் போன்ற வாழ்வின் நெருக்கங்களையும் கடந்து செல்ல வேண்டியதாயிருக்கிறது.

உபத்திரவங்கள், பாடுகள், அவமானங்கள், நிந்தைகள், பரியாசங்களுக்கு மத்தியிலும், தீயினாலும், தண்ணீரினாலும் சுத்திகரிக்கப்படுவதைப்போன்று, கர்த்தருடைய பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் அபிஷேகிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக, பூரண இரட்சிப்படைகிறோம். அல்லேலூயா! யோபு பக்தனும் இதையே: நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன் (யோபு 23:10) என்கிறார்.

மறுபுறம், இவ்வண்ணமாக கர்த்தருடைய பரிசுத்த இடைபடுதலுக்காக பொறுமையோடு காத்திருந்து பூரண இரட்சிப்படைவதைத் தவிர்த்து, இவ்வாழ்வில் கர்த்தர் அருளுகிற ஆசீர்வாத நன்மைகளால் மட்டும் திருப்தியடைந்து வாழ்வோர் அநேகராயிருக்கிறார்கள். இவர்கள் இரட்சிப்பை பூரணப்படுத்தும் உபத்திரவங்களைக் கண்டு அஞ்சி, கர்த்தர் பேரில் உள்ள விசுவாசத்தை விட்டு வழுவி பின்னடைந்து காணப்படுகிறார்கள்.

இவர்களைக் குறித்தே அப்போஸ்தலனாகிய பவுல்: இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் (1 கொரிந்தியர் 15:19) என்கிறார். மிகவும் ஜாக்கிரதையாய், உபத்திரவத்தை சகித்து, பொறுமையுடன் காத்திருந்து பூரண இரட்சிப்படைய அழைக்கப்படுகிறோம். பிரியமானவர்களே, நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார் (1 பேதுரு 4:14). அல்லேலூயா !



## தேவனுக்குப் பயந்தவர்களே வந்து கேளுங்கள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, தேவனுடைய பயங்கரமானக் கிரியைகளைக் கண்டுணர்ந்து, வாழ்வின் எல்லா நெருக்கங்களிலும் அவரையே உறுதியாய்ப் பற்றிக்கொள்ளும் போது செழிப்பான இடத்திற்கு நாம் கொண்டுவரப்படுகிறோம். இப்படியாக நித்திய ராஜ்யத்தின் நிச்சயத்தோடிருக்கும் தேவனுடைய பிள்ளைகள் கர்த்தருக்கென்று எழும்பி செயல்படும் நேரம், காலம், வேளை இதுவேயாகும். தேவனாகிய கர்த்தர் நம்முடைய வாழ்வில் செய்த கிரியைகளைக் கண்டு அநேகர் தேவனை மகிமைப்படுத்தக்கூடும். ஆனால் இந்த கிரியைகளினாலும் இவற்றைத் தொடர்ந்த நெருக்கங்களினாலும், நம் ஆத்துமாவிற்கு கர்த்தர் செய்த நன்மைகளை மற்றவர்கள் கண்களால் காணக்கூடாமலிருக்கிறது. இதினிமித்தமே, தேவனுடைய நாம மகிமைக்கென இவற்றை நாம் சாட்சியாக அறிவிக்க அழைக்கப்படுகிறோம்.

இந்நிலையில் சங்கீதக்காரன் செயல்படுவதிலும், ஓர் ஒழுங்கைக் காணமுடிகிறது. முதலாவதாக, இது கர்த்தரால் வந்தது என அறிக்கையிடும் வண்ணமாக, தேவனுடைய ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன் என்கிறார். இக்கட்டில் வாயினால் தான் சொல்லிய பொருத்தனைகளைச் செலுத்துவேன் என வாக்களிக்கிறார்; தேவனுக்கு நன்றியையும் ஸ்தோத்திரங்களையும் செலுத்த தன்னையே அர்ப்பணிக்கிறார். பின்னர்: தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள்; அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன் (சங்கீதம் 66:16) என்று சாட்சியாக அறிவிக்கிறார்.

இந்த சங்கீதக்காரனுக்கு கர்த்தர் என்ன செய்தார்? ஸ்தோத்திரத்தோடே அவர் ஏறெடுத்த ஜெபத்திற்கு மெய்யாய் தேவன் செவிகொடுததார்; ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். நிறைவாக: என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக (சங்கீதம் 66:20) என்று கிரியையில் துவங்கி தேவ கிருபையில் இரட்சிப்பு முழுமைப் பெறுவதை சாட்சியாக எழுதிவைத்திருக்கிறார். அல்லேலூயா!

## கிருபையை விலக்காமலிருந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்

பிதாவாகிய தேவன் நம்மைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். கர்த்தருடைய சித்தத்தை வாழ்வில் செய்யும்போது, கர்த்தர் நம்மோடேக்கூட கிரியையை நடப்பித்து, நம்மால் நடக்கும் அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்துகிறார். கர்த்தருக்கென்று வாழ்வில் உபத்திரவங்களுக்கு மத்தியிலும் உண்மையும் உத்தமுமாய் சாட்சியாக வாழ்ந்து, நற்கிரியைகளை நாம் வெளிப்படுத்தும்போது, கர்த்தர் நம் ஜெபத்தைத் தள்ளாமலும் தமது கிருபையை விலக்காமலும் இருக்கிறார்; கர்த்தருடைய கிருபை வாழ்விலும் குடும்பத்திலும், பணிஸ்தலங்களிலும் நிறைவாக வெளிப்படுகிறது. கிரியை கிருபையினால் பூரணப்படுகிறது. அல்லேலூயா!

இதைப்போன்று, பூரண இரட்சிப்படைவதற்கு பொறுமை யோடு காத்திருந்து, உபத்திரவங்களைச் சகித்து, கர்த்தருக்கு சாட்சியாக எழும்பி பிரகாசியாமல், தங்கள் வாய்ப்புகளை வாழ்வில் இழந்தோரும் அநேகருண்டு. இவர்கள் மீட்கப்பட்ட நாட்களில் தாங்கள் பெற்ற கிருபை வரங்களினால், இப்பொழுது வாழ்வில் கிரியைகளை வெளிப்படுத்தினாலுங்கூட, இவர்களுடைய ஆத்தும இரட்சிப்பே அரிதாயிருக்கிறது.

இவர்களைக் குறித்தே இயேசு: அந்நாளிலே அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம்.... பிசாசுகளைத் துரத்தினோம்.... அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்



என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (மத்தேயு 7: 22,23) என்றார். சங்கீதக்காரனும்: என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார் (சங்கீதம் 66:18) என்கிறார்.

இவ்வகையானோரை, ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிற கூலியாட்கள் என இயேசு குறிப்பிடுகிறார் (யோவான் 10:11-13). மேலும் பவுல்: கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபை என்று எண்ணப்படாமல் கடன் என்று எண்ணப்படும் (ரோமர் 4:4) என்கிறார். கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரவாளியாக, உண்மையும் உத்தமமுமாக செயல்படுவோர், தேவனுடைய நிறைவான ஆசீர்வாதங்களைக் கிருபையாக பெறுகிறார்கள். கடமைக்காக நிர்ப்பந்தங்களினிமித்தம் கிரியைகளை நடப்பிக்கிறவர்கள், அதற்குரிய பலனை, வேலையாள் கூலிக்கு பாத்திரனாய் இருக்கிறான் என்ற வார்த்தையின்படி பெற்றுக்கொள்ளுகிறார்கள். முடிவிலோ கர்த்தரால் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

## இயேசுவை அறிவிக்க நீ ஆயத்தமா?

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன்னுடைய வாழ்விலும் கர்த்தர் பயங்கரமானக் கிரியைகளைச் செய்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவை இன்னும் நீ உன் ஆத்தும இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதிருப்பாயானால், இன்றே உன்னோடு இந்த வார்த்தைகளின் மூலம் இடைபடும் இயேசுவுக்கு உன்னை ஒப்புக்கொடுப்பாயா? அர்ப்பணிக்கின்ற உன்னைக் கர்த்தர் ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிப்பார். அல்லேலூயா!

இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நீ, உன் வாழ்வின் நெருக்கங்களைக் கண்டு சோர்ந்துபோகாதே, மனந்தளராதே! அழைத்த தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உன் திராணிக்கு மேலாக நீ சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடார். அவர் உன்னைச் சோதித்தபின், நீயும் உன் வாழ்வில் பொன்னாக விளங்குவாய். அல்லேலூயா!

உன்னைச் சுற்றியுள்ள அநேகர் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கி, சுயமேன்மை பிரஸ்தாபத்தை நாடி, வஞ்சிக்கப்பட்டிருப்பதை நீ அறிவாய். இந்தச் சூழ்நிலையில்,

இயேசுகிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபமான இந்தக் கடைசி காலத்தில், இயேசுகிறிஸ்துவை உண்மையாய் உயர்த்திக்காட்டி, அவருக்குப் பிரியமானதை துரிதமாய் செய்ய கர்த்தர் உன்னை அழைக்கிறார்

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட நீ, தேவனுக்கென்று சாட்சியாக எழும்பி பிரகாசிக்க, இயேசுவை அறிவிக்க, உன்னை அர்ப்பணிப்பாயா? இந்த அழைப்பை ஏற்று நீயும், நானும், நாமும் அர்ப்பணித்து செயல்படும் போது, தேசம் எழுப்புதலுக்குட்படும்! நாமும் நிறைவாய் ஆசீர்வதிக்கப்படுவோம். ஆமென். அல்லேலூயா!



# சங்கீதம் 66

பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும்
தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.
அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம்பண்ணி,
அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள்

தேவனை நோக்கி: உமது கிரியைகளில் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறீர்;
உமது மகத்துவமான வல்லமையினிமித்தம் உம்முடைய சத்துருக்கள்
உமக்கு இச்சகம்பேசி அடங்குவார்கள். பூமியின்மீதெங்கும் உம்மைப் பணிந்துகொண்டு
உம்மைத் துதித்துப் பாடுவார்கள்; அவர்கள் உம்முடைய நாமத்தைத்
துதித்துப் பாடுவார்கள் என்று சொல்லுங்கள்.

தேவனுடைய செய்கைகளை வந்துபாருங்கள். அவர் மனுபுத்திரரிடத்தில்
நடப்பிக்குங் கிரியையில் பயங்கரமானவர். கடலை உலர்ந்த தரையாக மாற்றினார்;
ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள்; அங்கே அவரில் களிகூர்ந்தோம்.
அவர் தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார்;
அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக்கிறது;
துரோகிகள் தங்களை உயர்த்தாதிருப்பார்களாக.

ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து, அவரைத் துதிக்குஞ்சத்தத்தைக்
கேட்கப்பண்ணுங்கள். அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல்,
நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்.

தேவனே, எங்களைச் சோதித்தீர்; வெள்ளியைப் புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர்.
எங்களை வலையில் அகப்படுத்தி, எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர்.
மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும்
கடந்துவந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்.

சர்வாங்க தகனபலிகளோடே உமது ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன்;
என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து,
என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்.
ஆட்டுக்கடாக்களின் நிணப்புகையுடனே கொழுமையானவைகளை உமக்குத் தகனபலியாக இடுவேன்;
காளைகளையும் செம்மறியாட்டுக் கடாக்களையும் உமக்குப் பலியிடுவேன்.

தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள்;
அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன்.
அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன், என் நாவினால் அவர் புகழப்பட்டார்.

என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால்,
ஆண்டவர் எனக்குச் செவிகொடார். மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார்,
என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை
என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

**தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்!**

# உ. கர்த்தரிடத்தில் கிருபையும் திரளான மீட்பும் உண்டு!

*கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்*
*அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.*
*துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன்*
*நினைவுகளையும்விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்;*
*அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே*
*திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.*
*(ஏசாயா 55:6,7)*

தேவனுடைய செய்கைகளை கண்டுணர்ந்து சாட்சிப் பகரும் தேவனுடைய பிள்ளைகள், வாழ்வின் நெருக்கங்களில், ஆழங்களிலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். கர்த்தரை நம்பி அவரை நோக்கிக் கூப்பிட்டு மீட்கப்பட்டோரின் அனுபவம் சங்கீதம் 130-இல் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த சங்கீதத்தைச் சார்ந்த செய்தி அடுத்த பொக்கிஷமாக இந்தச் செய்தி தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

## கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்

என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்குச் செவிகொடுத்தார் என்று சங்கீதக்காரன் எழுதி வைத்திருக்கிறார். நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது, வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவர் நமக்குச் செவிகொடுத்து, வசனத்தை அனுப்பி நித்திய வழியிலே நடத்துகிறார். நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் (1 யோவான் 5:14).

கர்த்தாவே, ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன் என்று சங்கீதக்காரன் 130ஆம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறார். இங்கு ஆழங்கள் என்பது, வாழ்வின் மிகவும்



கடினமான சூழ்நிலைகளையும், நெருக்கங்களையும், கொடிதான துன்பங்களையும் குறிக்கிறது. தமக்கருமையானவர்களை இழந்து தவிக்கும்போது, இவ்வகையான நிலைகளுக்கு அநேகர் தள்ளப்படுகிறார்கள். சடிதியான விபத்துகளுக்குட்படும்போதும் கொடிய வியாதிகள் தாக்கும்போதுங்கூட அநேகர் ஆழங்களுக்குட் படுகின்றனர்.

பொருளாதார பாதிப்புகளினிமித்தமும், இன்னும் சமாதானத்தை இழந்து வாழ்வில் நிம்மதியற்ற பல நிலைகளிலும் அநேகர் ஆழத்திலிருப்பதாக உணருகிறார்கள். இவையெல்லா வற்றிற்கும் மேலாக, பாவத்திற்கு அடிமைகளாக, வெளிச்சமற்ற இருளிலே, ஆழங்களிலே வெறித்தவர்களைப்போல, தடுமாறித் திரிகிறவர்களும் அநேகர் உண்டு.

மகா ஆழமான கிடங்கிலிருந்து கர்த்தாவே, உம்முடைய நாமத்தைப்பற்றிக் கூப்பிட்டேன். என் சத்தத்தைக் கேட்டீர்; என் பெருமூச்சுக்கும் என் கூப்பிடுதலுக்கும் உமது செவியை அடைத்துக்கொள்ளாதேயும். நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி பயப்படாதே என்றீர் (புலம்பல் 3:55-57) என்று சாட்சியாக எழுதப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சோதனை களுக்கும், வேதனைகளுக்கும், அக்கிரமங்களுக்குமுட்பட்ட நிலையில் உணர்வடைந்து, கர்த்தருடைய கிருபையை நம்பி மீட்கப்பட, ஆழங்களிலிருந்து ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பம் சங்கீதம் 130இல் விவரிக்கப்பட்டுள்ளது.

## ஆழங்களிலிருந்து கர்த்தரைக் கூப்பிடுகிறேன்

கர்த்தாவே, ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். ஆண்டவரே, என் சத்தத்தைக் கேளும்; என் விண்ணப்பங்களின் சத்தத்திற்கு உமது செவிகள் கவனித்திருப்பதாக (சங்கீதம் 130:1,2) என்று சங்கீதக்காரன் விண்ணப்பிக்கிறார். தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேலரை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொள்ளும்படியாக, வாழ்வின் நெருக்கங்களிலிருந்தும், ஆழங்களிலிருந்தும் கர்த்தரை நோக்கி ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பம் இந்த சங்கீதமாகும்.

மிகவும் பாதிக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலைகளிலே, கர்த்தரில் முழு நம்பிக்கையோடு கூடிய விசுவாசம், விண்ணப்பங்களில்

வெளிப்படுகிறது. ஜெபங்களும் விண்ணப்பங்களும் வாழ்வின் கடினமான கொடிய சூழ்நிலைகளிலிருந்து ஆவியோடும் உண்மையோடும் ஏறெடுக்கப்படும்போது, அவைகள் மிகவும் ஊக்கமானதாகவும், கர்த்தரால் அங்கீகரிக்கப்படத்தக்கதாகவும் இருக்கிறது. சங்கீதக்காரன் இந்த வசனங்களில், உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் கதறுதலின் வார்த்தைகள் கேட்கப்படும்படியாக வேண்டுகிறார்.

## யோனாவின் ஆழங்கள்

வேதாகமத்தில் யோனாவின் சரித்திரம், சங்கீதம் 130இன் விளக்கவுரையைப்போன்று அமைந்துள்ளது. யோனா பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. யோனா மூன்று வெவ்வேறான ஆழங்களின் அனுபவங்களுக்கு, நெருக்கங்களுக் குட்பட்டார். அந்த ஆழங்களும், அவை தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்குப் போதிக்கும் சத்தியமும், யோனாவின் சரித்திரம் நமக்கு வெளிப்படுத்தும் செய்தியாகவுள்ளது. மீனின் வயிற்றிலிருந்து யோனா, தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: என் நெருக்கத்திலே நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர் (யோனா 2:1,2) என்றார்.

முதலாவதாக யோனா, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமையினிமித்தம் பாவத்திற்குட்பட்டு, ஆழங்களுக் குள்ளாக, ஆவிக்குரிய நிலையில் இருளில் தடுமாறித் திரிந்தார். கர்த்தருடைய வார்த்தையின்படி கிழக்கு திசையில் சுமார் 800 மைல்களுக்கு அப்பால் இருந்த நினிவேக்குச் செல்லாமல், கர்த்தருடைய சமுகத்திலிருந்து விலகி ஓடத் துணிந்து, நேர் எதிராக மேற்கே இருந்த தர்ஷீசுக்கு போக கப்பல் ஏறினார்.

அசீரியரான நினிவே ஜனத்தார் மிகவும் கொடிய ஜனங்கள் என யோனா அறிந்திருந்தார். அவர்களுடைய அக்கிரமம் கர்த்தருடைய சமுகத்தில் வந்து எட்டினபடியால், கர்த்தர் அதைக் கவிழ்த்துப்போடுவார் என்று யோனா எண்ணினார். தேவஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக அசீரியர் பலமுறை எழும்பி, அவர்களது விளைச்சல்களையும் உடமைகளையும் கொள்ளையிட்டு, ஜனங்களையும் சிறைப்பிடித்துச் சென்றதுண்டு. நினிவே கர்த்தருடைய எச்சரிப்புக்கு செவிகொடுத்து, பாவவழிகளிலிருந்து மனந்திரும்பினால், கர்த்தர் அவர்களுக்கு இரங்கி தப்புவிப்பார் என யோனா நினைத்தார். நினிவே தப்புவிக்கப்பட்டால், அவர்கள் தேவ ஜனத்துக்கு விரோதமாக மறுபடியும் எழும்புவார்கள் என்று யோனா நினைத்ததாலேயே, கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் போனார் என்று வேதப்பண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.



இது ஏதேன் தோட்டத்து வஞ்சகத்திற்கொத்ததாக இருக்கிறது. யோனா தன்னுடைய அறிவையும் எண்ணத்தையும் அனுபவத்தையும் சார்ந்து, சூழ்நிலைகளைப் பகுத்தறிந்து, அதின் விளைவுகளை யூகித்து, சுயமாய் சிந்தித்து வஞ்சிக்கப்படுகிறார். இதனிமித்தம் கர்த்தருடைய வார்த்தையைத் தள்ளி, துணிகரமாக கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல், அக்கிரமத்தின் ஆழங்களுக்குட்படுகிறார்.

## அக்கிரமத்தின் விளைவுகள்

அடுத்ததாக, கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாததினாலே, அக்கிரமத்தின் விளைவான ஆழங்களில் யோனா சிக்கிக்கொள்ளுகிறதைக் காண்கிறோம். யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி ஓடினபோது, கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார்; அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்கதாக பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று (யோனா 1:4). கப்பற்காரர் பயந்து யார்நிமித்தம் இந்த ஆபத்து நேரிட்டதென்று அறியும்படிக்குச் சீட்டுப் போட்டார்கள். யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது.

யோனாவின் நிமித்தம் அந்தப் பெரிய கொந்தளிப்பு அவர்கள்மேல் வந்ததென்பதை அறிந்தபோது, அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டப் பின்னர், யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள்; சமுத்திரம் தன் மும்முரத்தை விட்டு அமர்ந்தது. யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீன் வயிற்றில் யோனா இரவுப்பகல் மூன்று நாள் இருந்தார் (யோனா 1:15,17). இது ஆழங்களைப்போன்ற நெருக்கம் அல்ல; மெய்யாகவே,

சமுத்திரத்தின் நடுமையமாகிய ஆழத்திலே யோனா, மீனின் வயிற்றிலிருந்தார். அப்பொழுது அவர் உணர்வடைந்தார்.

## உன் சுயபுத்தியின் மேல் சாயாதே!

உள்ளத்தின் ஆழத்தில் உணர்வடைந்தவராக யோனா, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார் என்பது மூன்றாவது ஆழமாக இருக்கிறது. என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர். பொய்யான மாயையைப்பற்றிக் கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள். நானோவெனில், துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்; நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன்; இரட்சிப்பு கர்த்தருடையது என்றார் (யோனா 2:2,8,9).

யோனா உள்ளத்தின் ஆழத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, ஆவிக்குரிய ஆழங்களிலிருந்தும் கட்டுகளிலிருந்தும், சரீரப்பிரகாரமான ஆழங்களான மீனின் வயிற்றிலிருந்தும் சமுத்திரத்தின் ஆழத்திலிருந்தும், கர்த்தர் யோனாவை விடுவித்தார். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது (யோனா 2:10). அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, நீ ஒருவேளை உன் அறிவையும் எண்ணங் களையும் விருப்பங்களையும் அனுபவங்களையும் சார்ந்து, வஞ்சிக்கப்பட்டு, கர்த்தராகிய தேவனுடைய சித்தத்திற்கும் வார்த்தைக்கும் விரோதமாய் செயல்படுவாயானால், இன்றே மனந்திரும்பு. கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கும், கர்த்தருடைய உணர்த்துதலுக்கும் நல்மனசாட்சிக்கும் செவிகொடாமல், பலர் சொப்பனங்களையும் வெளிப்பாடு களையும் தங்களுக்குத் தோன்றியபடி பகுத்தறிய முற்படுகிறார்கள். இவர்கள் இவ்விதமாக வஞ்சிக்கப்பட்டு, அநேகரை வஞ்சிக்கும் கடைசி காலங்களுக்குட்பட்டிருக்கிறோம். கர்த்தரையும் அவருடைய வார்த்தைகளையும் சார்ந்து,



தொடர்ந்து சாட்சியாக கர்த்தரில் நிலைத்திருக்க அழைக்கப் படுகிறோம்.

உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். நீ உன்னை ஞானியென்று எண்ணாதே, கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு (நீதிமொழிகள் 3:5-7) என்று எழுதப்பட்டிருக்கிறது.

உள்ளத்தின் ஆழங்களிலிருந்து, உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அந்தக்கரணத்தில், மறைக்கப்பட்ட ஆழங்கள் போன்ற நெருக்கங்களில், கர்த்தரே நம்மை உணர்வடையச்செய்கிறார், ஞானத்தை தெரியப்படுத்துகிறார். அல்லேலூயா!

## கர்த்தரிடத்தில் மன்னிப்பு உண்டு!

கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான், ஆண்டவரே. உமக்கு பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு (சங்கீதம் 130, 3,4) என்று சங்கீதக்காரன் அறிக்கையிடுகிறார். இந்த வசனங்கள் பாவ அறிக்கையாகவும், கர்த்தர் கிருபையாக பாவங்களை மன்னித்தருளும்படியான விண்ணப்பமாகவும் இருக்கிறது.

நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம். அவ்வேளைகளில், நம்முடைய சொந்த நீதியினிமித்தம் கர்த்தருடைய சந்நிதியில் நிற்க தகுதியற்றவர்களாய், அவருடைய கிருபையில் தஞ்சம் புகுந்து மீட்படைய நாம் வாஞ்சிக்கிறோம். பாவஞ்செய்கிற ஆத்துமா சாகும் என்றும், பாவிகளைத் தீவினைத் தொடரும் என்பதையும் உணர்ந்தறிந்த சங்கீதக்காரன், கர்த்தாவே நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான் என்று அங்கலாய்க்கிறார். மேலும், ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும் (சங்கீதம் 143:2) என்றும் விண்ணப்பிக்கிறார்.

துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுகிற யாவருக்கும் அவரிடத்தில் மன்னிப்பு

உண்டு. அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். இந்த உண்மையை தன் வாழ்வில் உணர்ந்த சங்கீதக்காரன், கர்த்தரிடத்தில் மன்னிப்பும், கிருபையும் திரளான மீட்பும் உண்டு என சாட்சியிடுகிறார். அல்லேலூயா!

## எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் மீட்பு

யோனாவின் சரித்திரம் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளதின் நோக்கம், கர்த்தராகிய தேவன் எல்லா மனுஷரையும் நேசிக்கிறார் என்பதையும், மனந்திரும்புகிற எந்த மனுஷனுக்கும் இரக்கத்தைக் காண்பித்து, அவர்கள் பாவங்களை மன்னிக்க விரும்புகிறார் என்பதையும் வெளிப்படுத்துவதற்காகவே என்பதை நாம் அறிவோம்.

பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப் படும் (ஆதியாகமம் 12:3) என கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்கருளினார். இந்த வசனத்தின்படி, எல்லாரையும் ஏற்றுக்கொள்ளும் கர்த்தரின் இத்தன்மையை எல்லா மனிதருக்கும் வெளிப்படுத்தும்படியாக, கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை, விசுவாச மார்க்கத்தாரை நியமித்திருக்கிறார். ஆனால் கர்த்தரின் இரக்கத்தையும் மன்னிப்பையும் மீட்பையும், மற்ற இனத்தவர்களுக்கு கூறி அறிவியாமல், இஸ்ரவேலர் தங்கள் இனப்பற்றும் அதைச் சார்ந்த ஜீவனத்தின் பெருமையினிமித்தம், தங்களுக்குள்ளேயே கர்த்தரின் நன்மைகளை அடக்கி வைத்துக்கொண்டனராம்.

இவ்வகையில், இஸ்ரவேலுக்கு புறம்பான இனத்தவர் களுக்கு அந்நாட்களில் அனுப்பப்பட்ட ஒரே தீர்க்கதரிசி யோனாவாக இருந்தார். கர்த்தர் யோனாவை நோக்கி: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்கு விரோதமாகப் பிரசங்கி, அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டியது என்றார் (யோனா 1:2). நினிவே அசீரியரின் தலைநகரமாக இருந்தது.

அசீரியர் கொடிய ஜனத்தார் என்பதினால், நினிவே கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து, அழிவிலிருந்து தப்புவிக்கப்பட்டால், இஸ்ரவேலுக்கு விரோதமாக அவர்கள் எழும்புவார்கள் என்று யோனா எண்ணினார் என்று பார்த்தோம். தேசப்பற்றும் இனப்பற்றும் அதனிமித்தம் உண்டான பெருமையும் கொண்ட யோனா, கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல், கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி ஓடினார். யோனாவின் அளவுக்கடந்த தேசப்பற்றும் இனப்பற்றும், பெருமைக்கும் கீழ்ப்படியாமைக்கும் வழிநடத்தியது. எங்குமுள்ள எல்லாருக்கும் கர்த்தரிடத்தில் கிருபையும் திரளான மீட்பும் உண்டு என்ற உண்மையை மறைத்துப்போட்டது.



## தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, தேவனுடைய இராஜ்யத்திற்கடுத்த பணிகளில் பல்வேறு வகைகளில் பங்குபெறும் நாம், நம்முடைய துர்க்குணங்களைவிட்டு மனந்திரும்பி, கர்த்தருடைய இரக்கத்திற்காகவும் மன்னிப்பிற்காகவும் மீட்பிற்காகவும் விண்ணப்பிக்க அழைக்கப்படுகிறோம்.

நம்முடைய இனம் இருப்பிடம் (ஊர்) திறமை கல்வி செல்வம் எதுவானாலும், ஜீவனத்தின் பெருமைக்கேதுவாக அவை எவ்விதத்திலும் வெளிப்படாதபடிக்கு நம்மைக் காத்துக் கொள்ளுவோம். கர்த்தருடைய வார்த்தைக்கும் வழிநடத்துதலுக்கும் கீழ்ப்படிந்து நடக்க நம்மை அர்ப்பணிப்போம். தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர் களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது (யாக்கோபு 4:6).

தங்களை மேலானவர்கள் என்று எண்ணி மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக் குறித்து இயேசுகிறிஸ்து சொன்ன உவமையை நாம் அறிவோம். தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான் என்றும், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றும் இயேசு சொன்னார்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரரொருவர், கர்த்தருடைய ஆலோசனையின்படி, செய்திகள் தொகுப்பொன்றை புத்தகமாக அச்சிட்டு வெளியிட முயன்றார். பூர்த்தி செய்யப்பட்ட செய்தித் தொகுப்பிற்கு, கர்த்தருடைய அங்கிகாரம் கிடைக்க ஜெபம்பண்ணி, காத்திருந்தார். இந்த முயற்சி பலநிலைகளைக் கடந்து நிறைவுபெற இருந்தபோது, கர்த்தரால் அங்கிகரிக்கப்பட, அந்தத் தொகுப்பிலிருந்து ஆசிரியரைப்பற்றிய அறிமுக உரை அகற்றப்படவேண்டுமென ஆலோசனை வெளிப்பட்டது. அந்தப்பகுதி சகோதரரது கல்வி அனுபவம் ஊழியம் போன்ற

‘‘மேன்மை’’ களைப் பிரஸ்தாபப்படுத்தி, ஜீவனத்தின் பெருமையை வெளிப்படுத்துவதை உணர்ந்தார். உடனே அப்பகுதியை அந்த தொகுப்பிலிருந்து நீக்கினார். புத்தகமும் கர்த்தரின் அங்கிகாரத்துக்குப்பின், அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அல்லேலூயா!

## கர்த்தருக்குக் காத்திரு

கர்த்தருக்கு காத்திருக்கிறேன், என் ஆத்துமா காத்திருக்கிறது, அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன். எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது (சங்கீதம் 130 : 5,6) என்று சங்கீதக்காரன் அறிக்கையிடுகிறார். இவ்வசனங்கள் இன்னும் அவர் இருளின் ஆழங்களில் இருப்பதையே காட்டுகிறது.

ஆனாலும், கர்த்தருடைய வார்த்தையை நம்பி, சற்றேனும் ஒளியற்ற போதிலும், உள்ளத்தின் ஆழத்தில் கர்த்தருடைய மன்னிப்பையும் மீட்பையும் மிகவும் வாஞ்சித்து அவருடைய கிருபைக்காக காத்திருக்கிறார். தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும், தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர் (புலம்பல் 3:25) என்றும், கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப் படுவதில்லை (ஏசாயா 49:23) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. அல்லேலூயா!

## நினிவேயின் எதிர்பார்ப்பு

இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, அவர் நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாகப் பிரசங்கி என்றார். யோனா நகரத்தில் பிரவேசித்து, ‘‘இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப் பட்டுப்போம்’’ என்று கூறினார்.

யோனா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தேவனுடைய செய்தியை அறிவித்தபோது, மிகவும் கொடியவர் என்று எண்ணப்பட்ட நினிவேயிலுள்ள ஜனங்கள், தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள். அவரவர்



தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள் என ராஜா கட்டளையிட்டான்.

கர்த்தர் தேவனுக்கேற்ற துக்கத்தைக் கேட்டோர் மனதிலே உண்டுபண்ணினார். தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. (2 கொரிந்தியர் 7:10) என்று எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார் (யோனா 3:10). அல்லேலூயா! கர்த்தருக்குக் காத்திருந்து, தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பின. நினிவேயின் எதிர்பார்ப்பு கர்த்தராலே நிறைவு செய்யப்பட்டது.

## யோனாவின் கடுங்கோபம்

கர்த்தர் நினிவேக்குச் செய்ய இருந்தத் தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தபோது, யோனாவுக்கு அது மிகவும் விசனமாயிருந்தது. யோனா கடுங்கோபங் கொண்டார். தீர்க்கதரிசியின் வாஞ்சை, கர்த்தரால் தனக்குத் தந்தருளப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள், பொய்த்துவிடக்கூடாது என்பதாக இருந்தது. இதற்கு முற்றிலும் மாறாக, கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகள் வெளிப்பட்டிருந்தாலும், துன்மார்க்கனுடைய மரணத்தை கர்த்தர் விரும்பாமல், அவன் வார்த்தைக்குச் செவிகொடுத்து தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பி பிழைப்பதையே விரும்புகிறார்.

நினிவே மக்கள் தேவனை விசுவாசித்து, அவரிடத்தில் விசுவாசத்தோடு விண்ணப்பித்து, கர்த்தரின் கிருபை மன்னிப்பு மீட்பிற்காக காத்திருந்தபோது, யோனா நகரத்திற்கு சம்பவிக்கப்போகிறதை, நினிவே கவிழ்க்கப்பட்டு போகிறதைப் பார்க்கும்படியாக காத்திருந்தான். யோனா நகரத்திலிருந்து புறப்பட்டு நகரத்துக்குக் கிழக்கே போய் அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப்போகிறதைத் தான் பார்க்குமட்டும் அதின்கீழ் நிழலிலே உட்கார்ந்திருந்தான் (யோனா 4:5).

ஒரு நாளிலே முளைத்து ஓங்கி வளர்ந்து, மறுநாளிலே காய்ந்து போன ஆமணக்குச் செடியின் மூலம் கர்த்தர் யோனாவிற்கு தம் கிருபையை விளங்கச் செய்தார். நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்து போனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே. வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ (யோனா 4:10,11) என்று கர்த்தர் சொன்னார். ஆம், பிரியமானவர்களே, கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு. அல்லேலூயா!

## கர்த்தரிடத்தில் திரளான மீட்பு உண்டு !

மனந்திரும்பி ஆழங்களிலிருந்து, சகல அக்கிரமங் களிலிருந்து மன்னித்து, மீட்கும்படியான விண்ணப்பத்தின் சத்தத்தோடு சங்கீதம் 130 துவங்குகிறது. இது துதியின் சத்தத்தோடு, கர்த்தருடைய தன்மையை முழுநிச்சயத்துடன் பறைசாற்றி, அவருடைய மகிமையை சாட்சியாக அறிவித்து நிறைவு பெறுகிறது. இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக; கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு. அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொள்வார் (சங்கீதம் 130 : 7,8) என்று சாட்சியாக எழுதப்பட்டிருக்கிறது.

யோனாவின் சரித்திரம், தங்கள் பாவவழிகளிலிருந்து மனந்திரும்பி, தேவனை விசுவாசித்து அவரை நோக்கிக் கூப்பிடுகிற, எங்குமுள்ள எல்லாரையும் ஏற்றுக்கொள்ளும் தேவனுடைய தன்மையையும் கிருபையையும் வெளிப்படுத்துகிறது.

விசுவாசமார்க்கத்தாரின், மீட்கப்பட்ட தேவஜனத்தின் பொறுப்புகளையும் இந்த வேதப்பகுதிகள் விவரித்துக்காட்டுகிறது. இது கர்த்தரின் கிருபையையும் மன்னிப்பையும் மீட்பையும் எல்லா இனத்தவர்களுக்கும் சாட்சியாக அறிவிக்கும் ஒப்புரவாகுதலின் உபதேசமாயிருக்கிறது. தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன்



உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார் (2 கொரிந்தியர் 5:18,19) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியிருக்கிறார்.

## சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்!

ஆபிரகாமுக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தத்தின்படி, அவருடைய சந்ததி உலகிற்கு தேவனை அறிவிக்க நியமிக்கப்பட்டது. இதைச் சார்ந்து, விசுவாச மார்க்கத்தாராகிய நமக்கும், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினால் இந்தக் கட்டளை தெளிவும் விளக்கமும் பெற்று தந்தருளப்பட்டிருக்கிறது. "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்றார். ஆமென் (மத்தேயு 28: 19,20).

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, யோனா தனக்குள்ளே, தன்னுடைய இனத்திற்குள்ளே, கர்த்தருடைய பெரிதானக் கிருபையையும் மன்னிப்பையும் மீட்பையும் அடக்கிக் கொள்ள முற்பட்டபோது, யோனாவின் வாழ்வில் ஆழங்கள் தோன்றின. மீனின் வயிற்றிலிருந்து, சமுத்திரத்தின் ஆழத்திலிருந்து யோனா, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். நம்முடைய வாழ்விலும், ஆழங்கள் நெருக்கங்கள் நீங்கி மீட்கப்பட, ஆழங்களிலிருந்தே தேவனை நோக்கிக் கூப்பிடுவோம்.

மீட்கப்பட்ட நிலையில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் தெளிவும் விளக்கமும் பெற்ற பிரதான பணிக்கட்டளையை ஏற்றுக்கொண்டு, உலகெங்குமுள்ள விசுவாசியாதோர்களுக்கு, கர்த்தருடைய கிருபையையும் மன்னிப்பையும் திரளான மீட்பையும் நற்செய்தியாக கூறி அறிவிப்போம். கர்த்தர்தாமே நம்முடனேகூட கிரியையை நடப்பித்து, நம்மாலும் நடக்கவிருக்கும் அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்துவாராக. ஆமென். அல்லேலூயா!

## சங்கீதம் 130

கர்த்தாவே, ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.
ஆண்டவரே, என் சத்தத்தைக் கேளும்;
என் விண்ணப்பங்களின் சத்தத்திற்கு உமது செவிகள் கவனித்திருப்பதாக.

கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால்,
யார் நிலைநிற்பான், ஆண்டவரே.
உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு.

கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது;
அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன்.
எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற
ஜாமக்காரரைப்பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது.

இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக;
கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.
அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களின்றும் மீட்டுக்கொள்வார்.

**கர்த்தரிடத்தில் கிருபையும் திரளான மீட்பும் உண்டு!**

# ૩. தேவனே உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்

*வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென். (யூதா 24, 25)*

கர்த்தருடைய மகத்துவங்களை அறிந்துணர்ந்த பின்னரும் விசுவாசத்திலிருந்து வழுவி, உலகத்தின் அசுத்தங்களில் சிக்கி வேதனைகளுக்குட்படுவோர், மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிற கர்த்தருடைய கிருபையினால் உணர்வடைகிறார்கள். சங்கீதக்காரனாகிய ஆசாப் இதைப் போன்ற நிலையில், எங்களைத் திருப்பிக் கொண்டுவாரும் என்று வேண்டின விண்ணப்பம் சங்கீதம் 80இல் சாட்சியாக எழுதிவைக்கப் பட்டிருக்கிறது. 80ஆம் சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்ட இச்செய்தி மூன்றாவது பொக்கிஷமாக இந்தச் செய்தி தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

### தேவனே எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்

சங்கீதக்காரனாகிய ஆசாபும் தேவஜனமும், தேவனைவிட்டு பின்வாங்கிப்போன நாட்களில், பலவிதமான வேதனைகளுக்கும் பாதகங்களுக்குமுட்பட்டார்கள். அப்பொழுது அவர்கள் தேவனை நோக்கிப்பார்த்து உயிர்ப்பிக்கப்படவும், இழந்த நன்மைகளை திருப்பிக்கொள்ளவும், வேண்டிநின்றது சங்கீதம் 80இல் சாட்சியாக எழுதப்பட்டுள்ளது.

இந்த சாட்சியின் சங்கீதத்தின் மூன்று வசனங்களில் (80:3,7,19) ஒன்றுக்கொன்று உயர்ந்த தொனியில், தன் வேண்டுதலின் அவசியத்தையும் அவசரத்தையும் வெளிப்படுத்தும்

வகையில், தேவனே என்றும், சேனைகளின் தேவனே என்றும், சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே என்றும் தேவனை அழைத்து தன் விண்ணப்பத்தைச் சங்கீதக்காரன் தெரியப்படுத்துகின்றார்.

எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம் (சங்கீதம் 80:3,7,19) என்று வேண்டுகிறார். பின்மாற்ற நிலைகளினால் இழந்த நன்மைகளை திருப்பித்தரும்படியாகவும், தேவனுடைய முகம் மறைக்கப்பட்டதினிமித்தம் வாழ்வில் தோன்றிய இருளின் கிரியைகள் நீக்கப்பட்டு இரட்சிக்கப்பட, தேவனுடைய முகத்தை அவர்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்படியாகவும் விரும்பி வேண்டி விண்ணப்பிக்கிறார்.

தேவஜனத்தின் வேதனைகளுக்கும் பாடுகளுக்கும் காரணம், கர்த்தரைவிட்டு தாங்கள் பின்வாங்கிப்போனதால் மறைக்கப்பட்ட தேவனுடைய முகப்பிரகாசமே என்பதை அவர்கள் முழுமையாக உணராதிருந்தார்கள். ஆகையால், உமது ஜனத்தின் விண்ணப்பத்திற்கு விரோதமாய் நீர் எதுவரைக்கும் கோபங் கொள்வீர் என்றும்; கண்ணீரே எங்கள் வாழ்வு என்றும்; எங்கள் அயலாருக்கு எங்களை வழக்காக வைக்கிறீர், எங்கள் சத்துருக்கள் எங்களைப் பரியாசம்பண்ணுகிறார்கள் (சங்கீதம் 80:4-6) என்றும் சங்கீதக்காரன் அங்கலாய்க்கிறார்.

கூர்ந்து கவனிப்போமேயானால், கர்த்தர் அவர்கள்மேல் அன்பாயிருந்தபோதிலும் அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் காணக்கூடாததினாலேயே கர்த்தர் தமது முகத்தை மறைத்தார் என்பதும், அந்த வேளையில், எவனை விழுங்கலாமோவென்று வகைதேடி சுற்றித்திரிகிற சத்துருவானவனே இந்த சேதங்களை ஏற்படுத்தினான் என்பதும் நமக்கு விளங்கும்.

## உம்மைவிட்டுப் பின்வாங்க மாட்டோம்

தங்கள் வாழ்நாட்களில் கற்றுக்கொண்ட ஒரு பெரிய சத்தியத்தை, சங்கீதம் 80:8-16இல் உள்ள வேதாகமப் பகுதியில், ஒரு சிறப்பான உவமையின் மூலம் ஆசாப் விளக்குகிறார். இதைத் தொடர்ந்து: உம்மைவிட்டுப் பின்வாங்கமாட்டோம்; எங்களை உயிர்ப்பியும், அப்பொழுது உமது நாமத்தைத் தொழுது



கொள்ளுவோம் (சங்கீதம் 80:18) என்று கர்த்தரோடு ஒப்புரவாகி, கர்த்தரைத் தொழுதுகொள்ள அர்ப்பணிக்கிறார்.

நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக்கொடியைக் கொண்டுவந்து ஜாதிகளைத் துரத்திவிட்டு, அதை நாட்டினீர். அதற்கு இடத்தை ஆயத்தப்படுத்தினீர்; அது வேரூன்றி, தேசமெங்கும் படர்ந்தது. இப்பொழுதோ வழிநடக்கிற யாவரும் அதைப் பறிக்கும்படியாக, அதின் அடைப்புகளை ஏன் தகர்த்துப்போட்டீர்? காட்டுப்பன்றி அதை உழுதுபோடுகிறது, வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்து போடுகிறது (சங்கீதம் 80:8,9,12,13) என்று தங்களது நிலையை சங்கீதக்காரன் உவமையாக வெளிப்படுத்துகிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, அந்த திராட்சக்கொடியை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து மீட்டு வந்து ஜாதிகளை துரத்தி நாட்டினதுபோல, உன்னையும் என்னையுங்கூட, பாவம் சாபம் வறுமை வியாதி பலவீனங்களிலிருந்து மீட்டு எடுத்து நம்முடைய வாழ்வில் நம்மை உயர்த்தி, கர்த்தர் ஆசீர்வதித்தார், பாதுகாத்தார், சமாதானத்தைத் தந்தருளினார். இந்நிலையில் நம் வாழ்வில் சடிதியாகத் தோன்றுகிற வேதனைகள் மற்றும் போராட்டங்களினிமித்தம், நமக்கு அருளப்பட்ட கிருபையென்னும் வேலி பராமரிக்கப்படாததை நாம் உணர ஆரம்பிக்கிறோம்.

நம்முடைய பிரயாசத்தின் பலன்களை வழிநடக்கிற யாவரும் பறித்துக்கொள்ளுகிறதைக் காண்கிறோம். மருத்துவர்களுக்கும், வழக்குக்கும், வாதுக்கும், தேவையில்லாத செலவீனங்களுக்கும், கொள்ளையிலும் விபத்துகளிலும் நம்முடைய பொருட்களும் ஆஸ்தியும் நேரமும் விரயமாகிறது. காட்டுப்பன்றியும் வெளியின் மிருகங்களும் பாதுகாவல் என்னும் வேலியற்ற தோட்டத்தை உழுதுபோடுகிறதுபோல, மேய்ந்துபோடுகிறதுபோல, நம்முடைய வாழ்வு, சண்டைக்கும் சச்சரவுக்கும் அசுத்த ஆவிகளின் தாக்கத்துக்கும் உட்பட்டு, வாழ்வில் கிருபையையும் பாதுகாவலையும் சமாதானத்தையும் இழந்து தவிக்கிறோம்.

## உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இவ்வகையான பேரிடர்களும், தவிர்க்கமுடியாத சம்பவங்களும்,

நம்முடைய வாழ்வில் பெரும்பாதிப்புகளை உண்டாக்கும்போது உணர்வடைவோம். கர்த்தரிடத்திலிருந்து பின்வாங்கின நிலைகள் தனிப்பட்ட வாழ்விலோ குடும்பத்திலோ வேலை ஸ்தலங்களிலோ ஊழியத்திலோ காணப்படுமாயின் அறிந்து உணர்ந்து கர்த்தரிடத்தில் திரும்ப நம்மை ஒப்புக்கொடுப்போம்.

கர்த்தர் யோபு பக்தனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைத்திருந்தாராம் (யோபு 1:10). நம்முடைய வாழ்விலும் கர்த்தர் தந்திருக்கும் கிருபையென்னும் வேலியுங்கூட பராமரிக்கப்பட வேண்டும். நம் வாழ்வில் காணப்படும் அசுத்தங்கள் அக்கிரமங்கள் அநியாயங்களினிமித்தம் கர்த்தருடைய முகம் நமக்கு மறைக்கப்பட்டிருக்குமேயானால், சங்கீதக்காரனாகிய ஆசாப்போல, தேவனே எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்; உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம் என்றும், உம்மைவிட்டுப் பின்வாங்கமாட்டோம்; எங்களை உயிர்ப்பியும், அப்பொழுது உமது நாமத்தைத் தொழுதுகொள்ளுவோம் என்றும்; விண்ணப்பிப்போம், அர்ப்பணிப்போம்.

கர்த்தர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார். நம்முடைய விண்ணப்பத்தையும் கர்த்தர் கேட்டு, இழந்த நன்மைகளை திருப்பித் தருவதுமட்டுமல்லாமல், கிருபையையும் பாதுகாவலையும் சமாதானத்தையும் தந்தருளி, நம்மையும், இந்நாட்களில் சாட்சியாக எழுப்புவார். அல்லேலூயா!

## ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்

கர்த்தரின் பெரிதானக் கிருபையினாலே, இயேசுகிறிஸ்துவின் பேரில் விசுவாசமுள்ளவர்களாக அவரை ஏற்றுக்கொண்ட தேவஜனமுங்கூட பலவேளைகளில் கர்த்தருடைய உபதேசத்திற்கும், கற்பனைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றவாறு நடவாமல், பாவத்துக்கும் உலக ஆசாபாசங்களுக்கும் உட்பட்டு இருளிலும் இருளின் கிரியைகளிலும் சிக்கிக்கொள்ளும் போது, விசுவாச மார்க்கத்திலிருந்து பின்னடைகிறார்கள்.

இப்பேர்பட்டவர்களைக் குறித்து ஆவியானவர் எபேசு சபைக்கு எழுதும்போது: நீ ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன் (வெளி 2:4,5) என்றார்.



அன்பு தணிந்த இந்நிலை கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாததை வெளிப்படுத்துகிறது. நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல (1 யோவான் 5:3) என்று எழுதப்பட்டிருக்கிறது. மனந்திரும்பாதபட்சத்தில் விளக்குத்தண்டு நீக்கிபோடப்படும்; தேவனுடைய முகப்பிரகாசம் நம்முடைய வாழ்விலிருந்து எடுத்துப்போடப்படும்; வாழ்வு இருளுக்கும் இருளின் கிரியைகளுக்கும் உட்பட்டு, வாழ்வில் பேரிழப்புகளையும், பாதிப்புக்களையும் சந்திக்க நேரிடும்.

## பின்வாங்கிப்போன சீஷர்கள்

நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகில் நம்மைப் போன்ற மனிதனாக வாழ்ந்த நாட்களில், அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள் (யோவான் 6:2). ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஆசீர்வதித்து ஐயாயிரம் பேரைப் போஷித்து இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள் (யோவான் 6:14). இதற்குப் பின்னர் இயேசுவின் சீஷர்கள் படவில் ஏறிச்சென்றபோது, பெருங்காற்று அடித்தபடியினாலே கடல் கொந்தளித்தது. அப்பொழுது அவர்கள் இயேசு கடலின்மேல் நடந்து வருகிறதைக் கண்டு பயந்தார்கள், வியந்தார்கள்.

இவ்விதமாக இயேசு செய்த அற்புதங்களையும் அவரின் மகத்துவங்களையும் கண்டு அவரைப் பின்பற்றின சீஷர்களில் அநேகருங்கூட, அந்நாளில் இயேசுவின் உபதேசங்களைக் கேட்டபொழுது: இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள் (யோவான் 6:60). மட்டுமல்ல, அதுமுதல்

அவருடைய சீஷரில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள் (யோவான் 6:66) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இயேசு அவர்களுக்கு உபதேசித்து: என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஜீவ அப்பம் நானே. என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன் (யோவான் 6:47,48,54) என்றார்.

ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் மனுஷகுமாரனுடைய மாம்சம் இரத்தம் என்பவை, இயேசுகிறிஸ்துவின் பாடு மரணத்தினால், சிதைக்கப்பட்ட இயேசுவின் சரீரம் மற்றும் சிந்தின இரத்தத்தினால் அவர் ஏற்படுத்த இருந்த இரட்சிப்பைக் குறிக்கிறதாக இருந்தது. இதை முழுமையாக விளங்கிக்கொள்ளாத நிலையில், கர்த்தரிடத்தில் கேட்டு தெளிவுப்பெறுவதைத் தவிர்த்து சீஷர்களில் அநேகர், முறுமுறுத்து கடினமான உபதேசம் என்று கூறி விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிப் போனார்கள். மேலும், மெய்யாகவே மெய்யாகவே என்று உறுதியாக வெளிப்படுத்தப்பட்ட - **என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு** - என்ற வாக்குறுதியை மறந்து பின்னடைந்தார்கள்.

## முன்னிலையிலும் கேடுள்ள பின்னிலை

அப்போஸ்தலனாகிய பேதுரு பின்மாற்றமடைந்தவர்களை, தான் கக்கினதைத் தின்ன திரும்பும் நாய்க்கும், சேற்றிலே புரளத் திரும்பின கழுவப்பட்ட பன்றிக்கும் ஒப்பிட்டு, அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும் என்று எச்சரிக்கிறார். கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்.

அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது (2 பேதுரு 2:20-22) என்று பேதுரு எழுதியிருக்கிறார்.



எபிரெய நிருப ஆக்கியோனும், மறுதலித்துப்போனவர்களை மனந்திரும்புதற்கேதுவாய் மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம் என்று எழுதியிருக்கிறார். ஏனெனில் ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும் பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம் (எபிரெயர் 6:4-6) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்

அநேக ஆண்டுகளுக்கு முன்னர் வானொலியில் சத்திய வசனங்களை எடுத்துரைக்கும் ஊழியர் ஒருவர் இருந்தார். சிங்கள மொழியில் வெகுசிறப்பாக செய்தியளிக்கும் அவரது வார்த்தைகளால் அநேகர் அந்நாட்களில் தொடப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டனர். இயேசுகிறிஸ்துவையறியாத ஒரு வாலிப சகோதரியும் இவ்வண்ணமாக இயேசுவின் அன்பையறிந்து, இயேசுவுக்கு தன்னை அர்ப்பணித்ததுமல்லாமல் ஊழியரோடும் தொடர்பு கொள்ள ஆரம்பித்தார். சில காலங்களுக்குப் பின்னர் சகோதரி வேலை செய்து வந்த வெளிநாட்டுக்கு ஊழியரை அழைக்கும் சூழ்நிலை உருவாகியது.

ஊழியர் அங்கு சென்று ஊழியஞ்செய்யவோ அல்லது ஒரு பணியில் சேரவோ முயற்சித்தும் ஒன்றும் சரியாக அமையவில்லை. அப்பொழுது ஊழியர் தான் அறிந்த, அறிவித்த இயேசுவின் உபதேசங்களுக்கு புறம்பாக துணிந்து செயல்பட ஆரம்பித்தார். ஏற்கனவே தனது நாட்டில் திருமணமாகி குடும்பத்துடன் இருந்த ஊழியர், சகோதரியை திருமணத்திற்காகவும், பணத்திற்காகவும் பலவந்தப்படுத்தி வெளிநாட்டில் காவல்

நிலையத்திற்கும் செல்லும் நிலை ஏற்பட்டது. அவரது முன்னிலைமையிலும் பின்னிலைமை மிகுந்த கேடுள்ளதாக மாறினதுமல்லாமல், கர்த்தருடைய நாமமும் தூஷிக்கப்பட்டது.

இந்தச் செய்தியை வாசிக்கும் கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, இயேசு உன்னை நேசிக்கிறார். வருகிறவர் இன்னும் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார் (எபிரெயர் 10:37,38). முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார் (எபேசியர் 5:8,14) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியிருக்கிறார்.

## இயேசு கிறிஸ்துவே உலகத்திற்கு ஒளி

இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார் (யோவான் 8:12). உலகத்திற்கு ஒளியான இயேசுவைப் பின்பற்றுகிற தேவனுடையப் பிள்ளைகள், அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து செயல்பட தங்களை அர்ப்பணித்தவர்கள், ஜீவஒளியை பெற்றுக் கொள்ளுகிறார்கள். அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை (சங்கீதம் 34:5) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுவை பின்பற்றாது, பின்மாற்றமடைந்தவர்கள், பாவத்தில், தேவனுடைய வார்த்தைக்கும் சித்தத்திற்கும் புறம்பாக வாழும்போது, தேவனுடைய முகப்பிரகாசத்தை அவர்கள் இழந்து விடுகிறார்கள்; இருளில் நடக்கிறார்கள். அதனிமித்தம் அவர்கள் வாழ்வு, இருளாலும் இருளின் கிரியைகளினாலும் நிரப்பப்படுகிறது. நம் தேவன் தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன் என்று ஆபகூக் 1:13இல் எழுதப்பட்டிருக்கிறது.



இவர்கள் வாழ்வில் காணப்பட்ட அசுத்தம் அக்கிரமம் அநியாயம் போன்ற தீமைகளைப் பார்க்கமாட்டாத தேவன், தம்முடைய முகத்தை அவர்களை விட்டு திருப்பும்போது, தேவனுடைய முகப்பிரகாசம் அவர்களைவிட்டு நீங்குகிறது; வாழ்வே போராட்டங்களும் கண்ணீரும் நிந்தையுமாக மாறுகிறது. இதனிமித்தமே சங்கீதக்காரனாகிய ஆசாப், தங்களது வாழ்வின் நெருக்கமான இருள் சூழ்ந்தவேளையில்: கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும் (சங்கீதம் 80:1) என்று விண்ணப்பிக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இயேசுவே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறார். நம்முடைய வாழ்வின் பின்மாற்ற நிலைகளில் இருளின் கிரியைகளிலிருந்து விடுபட்டு இரட்சிக்கப்பட நம்முடைய பாவவழிகளிலிருந்து மனந்திரும்பி பரிசுத்தமாக வாழ மறுபடியும் நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம். அப்பொழுது கர்த்தர் நம்முடைய விண்ணப்பத்தைக் கேட்டு தம்முடைய முகத்தை நம்மேல் பிரகாசிக்கச்செய்வார். நம் வாழ்வில் இருள் நீங்கி, இழந்த ஆசீர்வாதங்களையும் பாதுகாவலையும் சமாதானத்தையும் திரும்ப பெற்றுக்கொள்ளுவோம்! அல்லேலூயா!. ஆமென்.

## சங்கீதம் 80

இஸ்ரவேலின் மேய்ப்பரே, யோசேப்பை ஆட்டுமந்தையைப்போல் நடத்துகிறவரே, செவிகொடும்;
கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும்.
எப்பிராயீம் பென்யமீன் மனாசே என்பவர்களுக்கு முன்பாக,
நீர் உமது வல்லமையை எழுப்பி, எங்களை இரட்சிக்க வந்தருளும்.

தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்,
உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உமது ஜனத்தின்
விண்ணப்பத்துக்கு விரோதமாய் நீர் எதுவரைக்கும் கோபங்கொள்வீர்.
கண்ணீராகிய அப்பத்தை அவர்களுக்கு போஜனமாகவும்,
மிகுதியான கண்ணீரையே அவர்களுக்குப் பானமாகவும் கொடுத்தீர்.
எங்கள் அயலாருக்கு எங்களை வழக்காக வைக்கிறீர்;
எங்கள் சத்துருக்கள் எங்களைப் பரியாசம்பண்ணுகிறார்கள்.

சேனைகளின் தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்,
உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக்கொடியைக் கொண்டுவந்து, ஜாதிகளைத் துரத்திவிட்டு,
அதை நாட்டினீர். அதற்கு இடத்தை ஆயத்தப்படுத்தினீர்; அது வேரூன்றி, தேசமெங்கும்
படர்ந்தது. அதின் நிழலால் மலைகளும் அதின் கிளைகளால் திவ்வியமான கேதுருக்களும் மூடப்பட்டது.
அது தன் கொடிகளைச் சமுத்திரமட்டாகவும், தன் கிளைகளை நதிமட்டமாகவும் படரவிட்டது.

இப்பொழுதோ வழிநடக்கிற யாவரும் அதைப் பறிக்கும்படியாக,
அதின் அடைப்புகளை ஏன் தகர்த்துப்போட்டீர்?
காட்டுப்பன்றி அதை உழுதுபோடுகிறது, வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்து போடுகிறது.
சேனைகளின் தேவனே, திரும்பிவாரும், வானத்திலிருந்து கண்ணோக்கிப்பார்த்து,
இந்தத் திராட்சச்செடியை விசாரித்தருளும்; உம்முடைய வலதுகரம் நாட்டின கொடியையும்
உமக்கு நீர் திடப்படுத்தின கிளையையும் கடாட்சித்தருளும்.

அது அக்கினியால் சுடப்பட்டும் வெட்டுண்டும் போயிற்று;
உம்முடைய முகத்தின் பயமுறுத்தலால் அழிந்துபோகிறார்கள்.
உமது கரம் உமது வலதுபாரிசத்துப் புருஷன்மீதிலும்,
உமக்கு நீர் திடப்படுத்தின மனுஷகுமாரன்மீதிலும் இருப்பதாக.

அப்பொழுது உம்மைவிட்டுப் பின்வாங்கமாட்டோம்;
எங்களை உயிர்ப்பியும், அப்பொழுது உமது நாமத்தைத் தொழுதுகொள்ளுவோம்.
சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்;
உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

**தேவனே உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்!**

# 4. அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம்

*கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக; அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.* (1 பேதுரு 5:10,11)

விசுவாச வாழ்வின் பின்மாற்றங்களை உணர்ந்தறிந்தோர், உயிர்ப்பிக்கப்பட்டு தேவனுடைய முகப்பிரகாசத்தால் இரட்சிக்கப்பட ஏறெடுத்த விண்ணப்பத்தைக் குறித்து முன்னர் தியானித்தோம். இவ்வகையான மீட்கப்பட்டோர், கர்த்தருடைய வீட்டில் வாசமாயிருந்து, எப்பொழுதும் கர்த்தரைத் துதிக்க வாஞ்சையும் தவனமுமுள்ளவர்களாய் செயல்படும்போது, வாழ்வில் உபத்திரவங்கள் நீங்கி, இரட்டிப்பான நன்மையைப் பெற்று தேவசந்நிதியில் காணப்படுவார்கள் என்கிற சத்தியம், சங்கீதம் 84இல் விவரிக்கப்பட்டுள்ளது. 84ஆம் சங்கீதத்தைச் சார்ந்த இச்செய்தி, அடுத்த பொக்கிஷமாக, இந்தச் செய்தி தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

### கர்த்தரின் வீட்டில் வாசமாயிருக்கிறவன் பாக்கியவான்

கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களில் வாஞ்சையும் தவனமுமுள்ளவராக சங்கீதக்காரன், சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள் என்று ஜீவனுள்ள தேவனை நோக்கி கெம்பீர சத்தமிடுகிறதாக சங்கீதம் 84இல் வாசிக்கிறோம்.

மேலும் உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும்; தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே என்று சொல்லி தன்னுடைய

ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார். ஆயிரம் நாளைப்பார்க்கிலும் கர்த்தருடைய பிராகாரங்களில் செல்லும் ஒரேநாள் நல்லது என்றும் துஷ்டர்களோடு சஞ்சரிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன் என்றும் எழுதியிருக்கிறார்.

சங்கீதக்காரன் ஏன் இவ்வாறு வாஞ்சையும் தவனமுமுள்ளவராக இருக்கிறார்? வேதாகமம் சொல்லுகிறது: கர்த்தருடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் எப்பொழுதும் கர்த்தரைத் துதித்துக் கொண்டிருப்பார்கள். கர்த்தரிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர் களும் பாக்கியவான்கள் (சங்கீதம் 84:4,5). மேலும் அவர்கள் அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்; மழையும் குளங்களை நிரப்பும் (சங்கீதம் 84:6) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடப்பான்

பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு இந்த சங்கீதத்தைக் கூர்ந்து கவனிப்போமேயாகில் சங்கீதக்காரனின் விண்ணப்பம் (வசனம் 6), தனது வாழ்விலும் அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து நீரூற்றாக்கிக் கொள்ளவேண்டும் என்பதும், மழையும் குளங்களை நிரப்பவேண்டும் என்பதுமே என்று தெளிவாக வெளிப்படும்.

அழுகையின் பள்ளத்தாக்கு என்பது மனிதர்களாகிய நம் ஒவ்வொருவர் வாழ்விலும் நாம் அனுதினம் சந்திக்கும் உலகத்தின் உபத்திரவங்களையும் துன்பங்களையும் பாடுகளையும் போராட்டங்களையும் நிந்தைகளையும் குறிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டு, தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களே, கர்த்தருடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள்.

அவர்கள் இவ்வுலக வாழ்வில் அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து, வாழ்வின் உபத்திரவங்கள் பாடுகளின் வழியாக கடந்து சென்று, இரட்டிப்பான நன்மைகளைப் பெற்றுக்



கொள்ளுகிறார்கள். அவர்களது வாழ்வு வற்றாத நீரூற்றாகிறது; பரத்திலிருந்து ஆசீர்வாதமான மழையும் அவர்களை நிரப்புகிறது.

## பள்ளத்தாக்கு நீரூற்றாகும் குளங்கள் நிரம்பும்

கர்த்தரில் பெலன் கொண்டவர்களாய், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக் கிறவர்கள், உலகத்தின் உபத்திரவங்களைப் பொறுமையுடன் சகித்து, கர்த்தரைச் சார்ந்து, அழுகையின் பள்ளத்தாக்கை இம்மையிலேயே நீரூற்றாக ஆசீர்வாத நன்மைகளின் உறைவிடமாக மாற்றிக்கொள்ளுகிறார்கள்.

மேலும் மழையும் குளங்களை நிரப்பும் என்பது பரத்திலிருந்து கர்த்தரால் ஆசீர்வாத மழையாக அவர்களுக்கு அருளப்படும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், கிருபை வரங்களையும் ஈவுகளையும் குறிக்கிறது. இயேசுவினிமித்த மாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் இழந்தவர்கள், இப்பொழுது இம்மையிலே நூறத்தனையாக அடைவார்கள் என்றும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவார்கள் என்றும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். அல்லேலூயா!

இதனிமித்தமே, அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்து சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள் (சங்கீதம் 84:7) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய ஆசீர்வாதமாக அருளப்படும்போது, அவர்கள் பெலனடைந்து பூமியின் கடைசிபரியந்தம் சாட்சிகளாயிருப்பார்கள்; நிறைவிலே தேவனுடைய சந்நிதியில் வந்து காணப்படுவார்கள். அல்லேலூயா!

## உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு

எல்லா மனுஷரும் அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதாவது, உபத்திரவம், துன்பங்கள், போராட்டங்கள் போன்ற வாழ்வின் நெருக்கங்களின் ஊடாக கடந்துசெல்ல வேண்டியிருக்கிறது. ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான் (யோபு14:1) என்று வேதாகமம் சொல்லுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும்: உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு

(யோவான் 16:33) என்று இவ்வகையான சூழ்நிலைகளில் நமக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு சொல்லியிருக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலும், இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே (1 தெச. 3:3) என்றும்; அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2 தீமோ. 3:12) என்றும்; கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும், உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது (பிலி. 1:29) என்றும் எழுதியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவை அறியாதவர்களும், அறிந்திருந்தும் இயேசுவைத் தங்கள் இரட்சகராக விசவாசித்து ஏற்றுக் கொள்ளாதவர்களும் இவ்வகையான வாழ்வின் நெருக்கங்களுக் கூடாகக் கடந்துசெல்லும்போது, மிகவும் கலங்கி தவிக்கிறார்கள். சிலர் நெருக்கங்களே தங்கள் வாழ்வாக நினைத்து, இயேசுவினால் வரும் மீட்பை விடுதலையை ஆசீர்வாதங்களை அறியாமலும், உணராமலும், மடிந்து மாய்கிறார்கள். இன்னும் சிலர் இவற்றைத் தாங்கக்கூடாமல் தங்களையே அழித்துக்கொள்ளுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப் பட்ட நிலையிலும், சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டு பாவச் செயல்களுக்குட்படும்போது தேவனுடைய முகப்பிரகாசம் இவர்களை விட்டு எடுபடுகிறது என்பதாகப் பார்த்தோம். இருளுக்கும் இருளின் கிரியைகளான உபத்திரவங்கள், துன்பங்கள் பாடுகள் போன்ற நெருக்கங்களுக்கும் இதினிமித்தமும் இவர்கள் உட்படுகிறார்கள். இந்நிலையில் இவ்வகையாக நெருக்கங்களிலிருந்து விடுபட இவர்கள் செய்ய வேண்டியது, மனந்திரும்பி பாவச்செயல்களை விட்டு பரிசுத்த வாழ்விற்கு அர்ப்பணித்து செயல்படுவதேயாகும்.

## சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும்



நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28). விசுவாசமுள்ளவர்களாய் அழைக்கப்பட்டு தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு, அதாவது தேவனுடைய கற்பனைகளை கைக்கொண்டு (1 யோவான் 5:3) அவருடைய சித்தத்தையே நடப்பிக்கிறவர்களுக்கு, சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெறும் என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஆனாலும் இப்படிப்பட்டவர்களாய் வாழ வாஞ்சித்து செயல்படுகிற நம்மில் அநேகருடைய வாழ்விலும் உபத்திரவங்கள் நேரிடுகிறது. இந்த வசனத்தை கூர்ந்து கவனிப்போமேயானல் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடைபெறும் என்றே சொல்லுகிறது. தற்பொழுது நன்மையாக இல்லாமல் துன்பமும் போராட்டமும் அழுகையுமாக காணப்பட்டாலும், தேவனுடைய சித்தத்தையே தங்கள் வாழ்வின் நோக்கமாக அர்ப்பணித்து செயல்படுகிறவர்களுக்கு, நிறைவில் சகலமும் நன்மையாகவே நடந்தேறும் என்பதே உண்மை. அல்லேலூயா!

## நெருக்கத்தில் இயேசுவை நோக்கிப் பார்

தேவனுடையப் பிள்ளைகள் வாழ்வில் தோன்றுகிற நெருக்கங்கள் நம்மைச் சோர்வடையச் செய்கிறது. ஆகையால், இயேசுவையே நோக்கிப் பார்த்து விசுவாசத்திலும், சாட்சியின் ஜீவியத்திலும், ஊழியத்தின் பாதையிலும், தேவன் தந்த தரிசனத்தை நிறைவேற்ற, தேவசித்தத்தை நம் வாழ்வில் செய்து முடிக்கிறவர்களாக இருக்க அழைக்கப்படுகிறோம். இந்நிலைகளில் நம்முடைய இழப்புகளையும் உபத்திரவத்தையும், துன்பத்தையும் மற்ற நெருக்கங்களையுமே நினைத்து சஞ்சலப்படுகிறவர்களாக இருந்தால் திசைத்திருப்பப்படுவோம். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் இலக்கைச் சென்றடைய, தந்தருளப்பட்ட தரிசனங்களை நிறைவேற்றி ஜெயங்கொள்ள, இவைகள் தடைகளையும் தாமதங்களையும் தடுமாற்றங்களையும் உண்டாக்குகிறது.

தேவனுடைய ஊழியர் ஒருவர், திருவண்ணாமலை மாவட்டத்தின் இரட்சிப்பிற்காகவும், ஊழியங்களுக்காகவும் நடைபெறும் ஜெபக்கூடுகையினால் ஆசீர்வதிக்கப்பட்டார். இவ்வகையான கூடுகைகள் அருகிலுள்ள விழுப்புரம் மாவட்டத்திலும் துவங்கும்படியாக, ஊழியர் அங்கு சென்று சிலருடன் பேசி ஜெபித்து வந்தார். ஊழியர் தன் கிராமத்தில் அன்று

இரவில் தூங்கிக் கொண்டிருந்தபோது விஷப்பாம்பு ஒன்று அவரைத் தீண்டியது. பின்னர் அவர் அரசாங்க மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிலநாட்கள் சிகிச்சைப் பெற்று வீடு திரும்பினார்.

ஆனால் பாம்பு கடித்த காயம் 20 நாட்களுக்குப் பின்னரும் ஆறாது நீர் வடிந்துகொண்டே இருந்தது. மறுபடியும் மருத்துவரை அணுகினபோது, அவரது கை மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறி சிகிச்சை அளித்தார்கள். ஊழியரும் மனைவியும் கண்ணீரோடு அழுகையின் பள்ளத்தாக்கில் இருந்தார்கள். தேவனுடைய ஊழியத்தைத் தேவசித்தத்திற்குட்பட்டு செய்யும் போதே, அவர்களுக்கு புறம்பே வேதனையையும், அவர்களுக்குள்ளாக பயத்தையும், திகிலையும் உணர முடிந்தது. இந்த அழுகையின் பள்ளத்தாக்கின் அனுபவம், ஊழியரும் அவரது மனைவியும் செய்ய வாஞ்சித்த நற்காரியங்களில் தாமதங்களையும் தடைகளையும் உண்டு பண்ணிற்று.

இவ்வண்ணமாகவே அப்போஸ்தலனாகிய பவுலும் மக்கெதோனியா தேசத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் அவர்களை அழைத்தார் என்று நிச்சயித்துக்கொண்டு (அப்போஸ்தலர் 16:9-12) அங்கு சென்றபோதும் போராட்டங்களைச் சந்தித்ததாக வேதாகமத்தில் வாசிக்கிறோம். பவுல்: நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும் உள்ளே பயமும் இருந்தன (2 கொரி. 7:5) என்று எழுதி வைத்திருக்கிறார்.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட உங்களையும் என்னையும் சோதிக்க சத்துருவானவன் பிரயோகிக்கும் உபத்திரவங்கள் துன்பங்கள் போன்ற ஆயுதங்கள் மனச்சோர்வையும் விரக்தியையும் ஏற்படுத்தி நம்மைச் செயலிழக்கச் செய்ய வல்லது. இப்பேர்ப்பட்ட தருணங்களில் :

*சத்துரு சோதித்திட தேவ உத்தரவுடன் வருவான்.*
*ஆனால் இயேசு கைவிடார் தானாய் வந்து இரட்சிப்பார்*
*அந்த நல்ல இயேசு எந்தன் சொந்தமானாரே*

- என்று சோர்ந்துபோகாமல் பக்தனுடன் சந்தோஷம் பொங்க பாடி மகிழ்வோம். அல்லேலூயா!



## ஆபத்துக்காலத்தில் சோர்ந்துபோகாதே

ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்துபோவாயானால், உன் பெலன் குறுகினது (நீதி. 24:10) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடையப் பிள்ளைகள் வாழ்வில் தோன்றும் நெருக்கங்களினிமித்தம் அவர்கள் விரக்தியடைந்து சோர்ந்து போகிறார்கள். மனச்சோர்வினால் முதலாவது ஜெபமும் தொடர்ந்து வேதவாசிப்பும் அதாவது, தேவனோடுள்ள உறவும் வழிநடத்துதலும் தடைபடுகிறது. அடுத்து அவர்கள் செய்ய நியமிக்கப்பட்டிருக்கிற நற்காரியங்கள் ஏற்றவேளையில் செய்து முடிக்கப்படாமல் தடைபடுகிறது அல்லது தாமதமாகிறது.

இதனிமித்தமே நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும் என்பதைக்குறித்து தம்முடைய சீஷர்களுக்கு ஓர் உவமையைச் சொன்னார் (லூக்கா 18:1-8). தேவனுக்குப் பயப்படாதவனும், மனுஷரை மதியாதவனுமான, அநீதியுள்ள நியாயாதிபதி ஒருவன் இருந்தான். அந்த பட்டணத்திலிருந்த ஒரு விதவை தனக்குத் தன் எதிராளியினால் ஏற்பட்ட நெருக்கத்தில் நியாயஞ்செய்யவேண்டும் என்று அவனிடத்தில் அடிக்கடி வந்து விண்ணப்பம்பண்ணினாள்.

ஆதரவற்ற விதவை, எதிராளியினால் வந்த உபத்திரவத்தில், அநீதியான நியாயாதிபதியிடம் சோர்ந்துபோகாமல் விண்ணப்பித்த போது அவன் நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அந்தப்படியே, தேவன் தம்மைநோக்கி, இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

## கர்த்தருக்கு காத்திரு

ஆம் பிரியமானவர்களே, இவ்வகையான நம் வாழ்வின் நெருக்கங்களில் சோர்ந்து போகாமல், கர்த்தருக்குக் காத்திருந்து நாம் செய்து முடிக்கும்படியாக நமக்கு நியமிக்கப்பட்ட நற்காரியங்களை, தேவனுடைய ஒத்தாசையோடு நேர்த்தியாய் செய்து முடிக்க நம்மையே அர்ப்பணிப்போம்.

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் (ஏசாயா 40:31) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பறவைகளில் கழுகு வேதாகமத்தில் ஒரு சிறப்பிடம் பெற்றிருக்கிறது. புயல்காற்று உருவாகும்போதே அதையறிந்து அதிலிருந்து எளிதாக தப்பித்துக்கொள்ளும் ஆற்றல் கழுகுக்கு உண்டு.

புயல் உருவாகுவதை அறிந்த கழுகு, உடனே அருகாமையில் உள்ள ஓர் உயர்ந்த இடத்திற்கு பறந்து சென்று, அங்கு காத்திருக்குமாம். புயல்காற்று சுழன்று வீசும்போது, சரியான தருணத்தில் கழுகு தன் செட்டைகளை அடித்து எழும்பி, புயலின் மையப்பகுதியை நோக்கி பறந்து செல்லுமாம். அந்தப் பலத்த காற்றின் சுழற்சியில் சிக்குகிற கழுகு, காற்றினாலேயே உயரத்தள்ளப்பட்டு, புயலின் எல்லையைக் கடந்து மேலேப் பறந்து தப்பித்துக்கொள்ளுமாம்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம் வாழ்விலும் உபத்திரவத்தின் ஊடாக நாம் கடந்து செல்லும்போது சோர்ந்து போகாமல் கர்த்தருக்குக் காத்திருப்போம். கழுகுகளைப்போல புதுப்பெலன் அடைந்து, இருக்கிற நிலையிலிருந்து உயர்த்தப்படுகிறது மட்டுமல்லாமல், நெருக்கங்களிலிருந்தும் விடுவிக்கப்படுவோம். அல்லேலூயா!

## நீ விசுவாசத்தில் ஸ்திரப்படுவாய்

விசுவாச சோதனையின் வேளையில், சீமோன் பேதுருவின் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் வேண்டிக் கொண்டதை லூக்கா 22:31,32இல் வாசிக்கிறோம். இயேசு சீமோன் பேதுருவை நோக்கி நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். சீமோன் பேதுருவையும் மற்ற சீஷரையும் அவர்கள் விசுவாசத்தைச் சோதிக்க சாத்தான் உத்தரவு பெற்றிருந்தும், மற்ற சீஷரை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்தும்படி சீமோன் பேதுருவுக்காக இயேசு தேவனிடத்தில் வேண்டினார்.



பின்னர் பேதுரு இயேசுவை மூன்றுதரம் மறுதலித்ததையும், கர்த்தர் பேதுருவை திரும்பிப் பார்த்தபோது, பேதுரு வெளியே போய், மனங்கசந்து அழுததையும் நாம் அறிவோம். இவ்வாறு குணப்பட்ட பேதுரு தனது முதலாம் நிருபத்தை வாழ்த்துதல்கூறி நிறைவு செய்யும்போது, சோதனையால் கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற நம்மை, கிருபை பொருந்திய தேவன் சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்தி பலப்படுத்தி நிலைநிறுத்தும்படியாக வாழ்த்துகிறார் (1 பேதுரு 5:10,11).

ஆம் பிரியமானவர்களே, இன்றும் நமக்காக பிதாவின் வலது பாரிசத்தில் பரிந்து பேசும் இயேசு நமக்குண்டு, அவரே வாழ்வில் கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற நம் வாழ்வை சீர்ப்படுத்துவார், நம்மை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்துவார், நம் சாட்சியை பலப்படுத்துவார், இயேசுகிறிஸ்துவுக்குள் நம்மை நிலைநிறுத்துவார்.

அப்போஸ்தலனாகிய பவுலும் தன்னுடைய பரந்த அனுபவத்தின் நிறைவாக, வாழ்வின் உபத்திரவங்கள் நிமித்தம் நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை என்கிறார். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை (2 கொரி. 4:8,9) என்று பரிசுத்த பவுல் தன்னுடைய நெருக்கத்தில் சோர்ந்துபோகாமல் பெலப்பட்டதை விவரிக்கிறார்.

தொடர்ந்து பவுல்: ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது (2 கொரி.4:16,17) என்று எழுதி வைத்திருக்கிறார்.

## நித்திய கனமகிமை அடைவாய்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, வாழ்வின் நிறைவில் நாம் பெறவிருக்கும் மிகவும் அதிகமான நித்திய

கனமகிமையோடு ஒப்பிடும்போது, நம் வாழ்வின் நெருக்கங்களும் உபத்திரவங்களும் அளவில் மிகவும் இலேசானதாம். நித்திய காலமாக நமக்கு அருளப்படவிருக்கும் கனமகிமை, கால அளவில் நம்முடைய உபத்திரவங்களோடு ஒப்பிடும்போது அதிசீக்கிரம் நீங்கிவிடும் என்பதாகவும் பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். ஏன், இன்னும் ஒருபடி மேலாகச் சென்று, ஆனபடியினாலே பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன் என்று (2 கொரி. 12:10) எழுதியிருக்கிறார்.

வாழ்வின் உபத்திரவங்களும், நெருக்கங்களும் உள்ளான மனுஷனை நாளுக்கு நாள் புதிதாக்குகிறது; நித்திய கனமகிமையையும் உண்டாக்குகிறது. வாழ்வின் நெருக்கங்கள் நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கான ஏணிப்படிகளாக இருக்கிற படியால் சோர்ந்துபோகாதிருப்போம்.

நிறைவாக, நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுகிறிஸ்துவையும் உபத்திரவங்களினாலே பூரணப் படுத்துகிறது தேவனுக்கு ஏற்றதாயிருந்தது (எபிரெயர் 2:10) என்று வேதாகமம் சொல்லுகிறது. ஆகையால் நம்முடைய வாழ்வின் நெருக்கங்களில் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டவர்களாய், கர்த்தருக்குச் சாட்சியாக ஜீவிக்க நம்மை அர்ப்பணிப்போம்.

## நிச்சயமாகவே முடிவு உண்டு

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது. இயேசுகிறிஸ்துவில் விசுவாசமுள்ளவராய் அவரிடத்தில் அன்புகூருகிற நீ கடந்து செல்லுகிற உபத்திரவங்களுக்கும் மற்ற எல்லா நெருக்கங்களுக்கும் முடிவு உண்டு. இவற்றை அதிசீக்கிரத்தில் நீங்கிவிடும் இலேசான உபத்திரவம் என்றும், கொஞ்சக்காலம் அநுபவிக்கிற பாடுகள் என்றும் வேதாகமம் குறிப்பிடுகிறது. இவை மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. இம்மையிலும் உன் வாழ்வு சீர்ப்படும், விசுவாசம் ஸ்திரப்படும், சாட்சி பலப்படும், நீ கிறிஸ்து இயேசுவுக்குள் நிலைநிறுத்தப்படுவாய்.



உன்னை உபத்திரவத்தின் குகையிலே புடமிட்டு கர்த்தர் தெரிந்துகொண்டு இருக்கிறார் (ஏசாயா 48:10). மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே அல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை; தேவன் உண்மையுள்ளவரா யிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1 கொரி. 10:13).

இயேசுகிறிஸ்துவின் நிமித்தமாகவும், சுவிசேஷத்தின் நிமித்தமாகவும் இழந்தவன் எவனும், இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடேகூட நூறத்தனையாக இழந்தவைகளையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் (மாற்கு 10:29,30) என்று நம் இயேசு சொல்லியிருக்கிறார். ஆகையால், நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் (வெளி 2:10) என்று ஆவியானவர் வாக்கருளியிருக்கிறார்.

## நீ பொன்னாக விளங்குவாய்!

அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது (2 கொரி. 4:17). தேவன் உன்னைச் சோதித்தபின் நீ பொன்னாக விளங்குவாய். ஆகையால், நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது, அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன் (சங்கீதம் 119:71) என்று சங்கீதக்காரனோடு இணைந்து நீயும் தேவனை மகிமைப்படுத்துவாயா? கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்.

ஆம் பிரியமானவர்களே, எவ்வளவு உண்மையான வார்த்தைகள்! தேவமனிதர் ஒருவர் சிலநாட்களுக்கு முன்பு, தன் ஊழியத்தை நிறைவுசெய்து மனமகிழ்ச்சியோடு வீடு திரும்பினார். வீட்டை அடைந்தபோது கதவுகளின் தாழ்ப்பாள்கள் உடைக்கப் பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார். வீட்டில் எல்லா பொருட்களும் ஆடைகளும் ஆவணங்களும் சிதறிக்கிடந்தது. பொருட்கள் அதிகமாக எடுக்கப்படவில்லை என்றாலும், குடும்பத்தினருக்கு அதிர்ச்சி. கர்த்தருக்கு பயந்து வாழும் எமக்கு,

ஊழியத்திற்குச் சென்று வந்த வேளையில் ஏன் இந்த போராட்டமும் ஏளனப்பேச்சும் என்ற கேள்வி வெளிப்பட்டது.

மனம் சோர்ந்துபோன நிலையில் ஜெபமும் வேதவாசிப்பும் குறைவுபட்டது. நான்காவது நாள், ஊழியத்திற்குச் செல்ல ஆயத்தமாகி குடும்பமாக ஜெபித்தபோது, கர்த்தர் கிருபையாக அவர்களில் காணப்பட்ட சோர்வையும், பயத்தையும், குழப்பங்களையும் நீக்கித் தெளிவைத் தந்தார். அநேக வேதவசனங்கள் மற்றும் சம்பவங்கள் மூலமாக அவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தது மட்டுமல்லாமல், உண்மையான நிலையையும் கர்த்தர் விளங்கச்செய்தார்; அவர்களை ஆற்றித்தேற்றி பெலப்படுத்தினார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார். ஆபத்துக்காலத்திலும், வாழ்வின் நெருக்கங்களிலும் சோர்ந்துபோகாமல் கர்த்தருக்குக் காத்திருக்க அழைக்கப்படுகிறோம்.

கர்த்தரோடுள்ள உறவிலே, அவரைப்பற்றும் விசுவாசத்திலே நிலைத்திருந்து, சங்கீதக்காரனைப்போன்று, அழுகையின் பள்ளத்தாக்கை கர்த்தருடைய ஒத்தாசையுடன் உருவநடந்து செல்லுவோம். நீரூற்றாக இம்மையின் ஆசீர்வாத நன்மைகளையும், ஆசீர்வாதமான மழையாக ஆவிக்குரிய கிருபைவரங்களையும், நித்திய ராஜ்யத்தின் நிச்சயத்தோடு நிறைவாய் பெற்றவர்களாய் தேவனை மகிமைப்படுத்துவோம். அல்லேலூயா! ஆமென்.



# சங்கீதம் 84

சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்!
என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களின்மேல்
வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது;
என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது.

என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே,
உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும்,
தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே.

உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்;
அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள்.
உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும் தங்கள் இருதயங்களில்
செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.

அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள்;
மழையும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்து,
சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள்.

சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்;
யாக்கோபின் தேவனே, செவிகொடும். எங்கள் கேடகமாகிய தேவனே,
கண்ணோக்கமாயிரும்; நீர் அபிஷேகம்பண்ணினவரின் முகத்தைப் பாரும்.

ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது;
ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய
ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்.

தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்;
கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்;
உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.

சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

**அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம்!**

# 5. இயேசு ஒருபோதும் கைவிடார்!

*பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக; அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்; அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென். (கலாத்தியர் 1:3-5)*

தேவனுடைய முகப்பிரகாசத்தினால் பிரகாசிப்பிக்கப்பட்டு, இருளின் கிரியைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட தேவஜனத்தை, நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று வாக்களித்த கர்த்தர், ஒருபோதும் கைவிடார். நம்முடைய வாழ்வில் நாம் கைவிடப்படாதிருக்க, இயேசு நிந்தைகளுக்கும் பாடுகளுக்கும், அந்தகார இருளுக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டார். இந்த உண்மையை சங்கீதம் 22இல் சங்கீதக்காரன் கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே தீர்க்கதரிசனமாக எழுதிவைத்திருக்கிறார். 22ஆம் சங்கீதத்தை விளக்கும் இந்தச் செய்தி, ஐந்தாவது பொக்கிஷமாக இந்தப் புத்தகத்தில் தொகுக்கப்பட்டிருக்கிறது.

## இயேசுவைப்பற்றின தீர்க்கதரிசனம்

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து, நம்மைப்போலொத்த மனிதராக பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு ஏசாயா தீர்க்கனும், சங்கீதக்காரனாகிய தாவீதும் இன்னும் அநேக தீர்க்கதரிசிகளும், இயேசுகிறிஸ்துவைப்பற்றி எழுதி வைத்திருக்கிறார்கள். ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் 53ஆம் அதிகாரமும், சங்கீதங்களில் 22ஆம் சங்கீதமும், இயேசுவின் பாடு மரணங்களைத் தெளிவாக எடுத்துரைக்கிறது.



மனுக்குலத்தின் பாவங்களை ஏற்று இரட்சிப்பை நமக்கு அருளுகிற இயேசு, பாவத்தை ஏற்றுக்கொண்டபோது பரிசுத்த பிதாவாகிய தேவனால் கைவிடப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டும், பல நிலைகளில் நெருக்கங்களுக்குட்பட்டோரை இன்றும் அந்த இயேசு ஒருபோதும் கைவிடாதவராக இருக்கிறார். அல்லேலூயா!

தீர்க்கதரிசனம் என்பது வேதாகமத்தில், வரவிருக்கும் காரியங்களை முன்னதாகவே அறிவிப்பதை குறிக்கிறது. தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்; வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான் (நீதிமொழிகள் 29:18) என்று சாலொமோன் ராஜா எழுதி வைத்திருக்கிறார். எந்த ஒரு நம்பகமான தீர்க்கதரிசனத்தின் சாராம்சமும், இயேசுகிறிஸ்துவைப் பற்றின சாட்சியே என்பதை நாம் அறிவோம். இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது (வெளி. 19:10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கிய வேதாகமம், தேவனுடைய சித்தத்தையும் திட்டங்களையும் தீர்மானங்களையும், தேவனுடைய வார்த்தையின் மூலமாகவும், தொகுக்கப்பட்ட அவருடைய கிரியைகளின் மூலமாகவும், வெளிப்படுத்துகிறது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாக வில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்(2 பேதுரு 1:21) என்று பேதுரு எழுதி வைத்திருக்கிறார்.

## இயேசுவுக்கு ஏன் இந்தப் பாடுகள்?

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னரே, அந்நாட்களில் ஏசாயா தீர்க்கதரிசி இயேசுவை பாடுகளுக்குட்பட்ட துயருற்ற ஊழியராக (Suffering Servent) ஏசாயா 53ஆம் அதிகாரத்தில் வெளிப்படுத்துகிறார். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் (ஏசாயா 53:5). ஜனத்தின் மீறுதல்களினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார் (ஏசாயா 53:8); தம்முடைய சரீரத்தில் தாங்கொண்ணா பாடுகளை (Physical Torture) அனுபவித்தார். மேலும் அவர், அசட்டைப்

பண்ணைப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார் (ஏசாயா 53:3). இயேசுவை தூஷித்தார்கள், பரியாசம்பண்ணினார்கள், நிந்தித்தார்கள்; அவர் மிகுந்த வியாகுலத்துக்கும் (Mental Agony) வேதனைக்குமுட்பட்டார்.

இயேசுவுக்கு, மேசியாவுக்கு ஏன் இந்தப் பாடுகள்? நம்முடைய மீறுதல்களினிமித்தமும் அக்கிரமங்களினிமித்தமும் பாவங்களினிமித்தமும், நாம் அனுபவிக்க வேண்டிய தண்டனைகளினிமித்தம், கர்த்தர் அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார். அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுத்தது. அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார். அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இயேசு நம்மை மீட்கும்படியாகவே, தாங்கொண்ணா பாடுகளுக்கும் வேதனைகளுக்கும், மிகுந்த வியாகுலத்துக்கும் துக்கத்துக்கும், தன்னை ஒப்புக்கொடுத்தார். மேலும் தன்னைக் குற்றநிவாராண பலியாகவும் அர்ப்பணித்தார். நம்முடைய வாழ்வில் சமாதானத்தை உண்டுபண்ணவும், நமக்கு சரீர சுகமளிக்கவும், நம்முடைய ஆத்துமாக்களை அழிவிலிருந்து மீட்டு எடுக்கவும் இயேசு இந்தப்பாடுகளை ஏற்றுக்கொண்டார்.

## இயேசுவின் பாடு மரணம்

சங்கீதக்காரனாகிய தாவீது, கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே, அந்நாட்களில் வரவிருந்த மேசியாவாம் இயேசுகிறிஸ்துவின் பாடு மரணங்களை விவரித்து, ஒரு பாடலை எழுதிவைத்தார். இது வேதாகமத்தில் சங்கீதங்களின் புஸ்தகத்தில், 22ஆவது சங்கீதமாக இடம் பெற்றுள்ளது. 22ஆம் சங்கீதத்தில் எழுதப்பட்டிருக்கும் தீர்க்கதரிசன வார்த்தைகள், சுமார் 1000 ஆண்டுகளுக்குப் பின்னர், இயேசுகிறிஸ்துவின் வாழ்வில் நிறைவேறினது. மேலும் இந்த தரிசன வார்த்தைகள், வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டின் நற்செய்தி நூல்களில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, நம்மைப் போலொத்த மனிதராக இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில், மிகுந்த நிந்தைகளைச் சகித்தார்; தாங்கொண்ணா பாடுகளை அனுபவித்தார்; தன்னையே குற்றநிவாரணபலியாக ஒப்புக் கொடுத்தார் எனப்பார்த்தோம். ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்துக்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னரே தாவீது, இந்த காட்சிகளை தத்ரூபமாக உதாரணங்களுடன் விவரித்திருப்பதை, சங்கீதம் 22இல் பார்க்கிறோம். இந்தச் சங்கீதத்தில் சூழ்ந்து நிற்கும் காளைகள் மனுஷருடைய நிந்தைகளையும், வளைந்துகொண்ட நாய்கள் கூட்டம் சரீர பாடுகளையும், கெர்ச்சிக்கிற சிங்கம் அந்தகாரத்திற்கும் மரண இருளுக்கும் உட்பட்ட மேசியாவின் கைவிடப்பட்ட நிலையையும் சித்தரிக்கிறது.

## மனுஷரின் நிந்தைகள் – சூழ்ந்து நின்ற காளைகள்

என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம் பண்ணி, உதட்டைப் பிதுக்கி தலையைத் துலுக்கி: கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன் மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள் (சங்கீதம் 22:7,8) என்று எழுதப்பட்டிருக்கிறது. என்னைவிட்டுத் தூரமாகாதேயும்; ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை. அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்துகொண்டது (சங்கீதம் 22:11,12) என்றும்; நான் காண்டாமிருகத்தின் கொம்புகளில் இருக்கும்போது எனக்குச் செவிகொடுத்தருளினீர் (சங்கீதம் 22:21) என்றும் தாவீது எழுதியிருக்கிறார்.

இந்தச் சங்கீதத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல, இயேசுவை சிலுவையிலே அறைந்தபோதும், காளைகள் எருதுகள் காண்டாமிருகம் போன்று, சூழ்ந்து நின்ற மனுஷரும் மூர்க்க வெறிக்கொண்டவர்களாய், இயேசுவை தூஷித்தார்கள், பரியாசம் பண்ணினார்கள், நிந்தித்தார்கள். கல்வாரி சிலுவை மரத்தினருகே இருந்த, மூன்று பிரிவினரான ஜனக்கூட்டத்தாரைப்பற்றி மத்தேயு சுவிசேஷகன் மத்தேயு 27:39-44இல் குறிப்பிடுகிறார். வழிப்போக்கர், பிரதான ஆசாரியர் வேதபாரகர் மூப்பர் கூட்டம் மற்றும் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் இயேசுவைத்

தூஷித்தார்கள், பரியாசம்பண்ணினார்கள், நிந்தித்தார்கள். இவர்கள்தான் காளைகளும், எருதுகளும், காண்டாமிருகமுமாக விவரிக்கப்பட்டுள்ளதைப் போன்று தோன்றுகிறது.

அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந்து இறங்கி வா என்று இயேசுவைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி: மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை. தேவன் இவன்மேல் பிரியமாயிருந்தால் இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்.

## நம்மை இரட்சிக்கவே இயேசுவுக்கு நிந்தை

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, வேதாகமத்தில் கிறிஸ்துவின் பிறப்பிற்கு 1000 வருடங்களுக்கு முன்பாகவே இயேசுகிறிஸ்து அடையப்போகிற நிந்தைகளையும் பரியாசங் களையும் குறித்து சங்கீதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு 300 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த நிந்தைகளை மேசியா அனுபவிக்க வேண்டிய காரணத்தை ஏசாயா தீர்க்கதரிசி விளக்கியுள்ளார். இதற்கு 700 ஆண்டுகளுக்குப் பின்னர், இவையாவும் கர்த்தரால் அறிவிக்கப்பட்டபடியே நடந்தேறியதை வேதாகமத்தில் நற்செய்தி நூல்களில் வாசிக்கிறோம்.

பரிசுத்த பிதாவாகிய தேவனால் முன்தீர்மானிக்கப்பட்டு, இரட்சிப்பின் திட்டத்தின் ஓர் அங்கமாக அதனதன் வரிசையில் நடந்தேறிய இச்செயல்களின் பிரதான நோக்கம், பாவத்திற்குட்பட்ட மனுக்குலத்தை, இழந்துபோன தேவஜனத்தைத் தேடி இரட்சிப்பதேயாகும். கிறிஸ்து பிறந்து 2000 ஆண்டுகளுக்குப் பின்னர் வசிக்கும் நீங்களும் நானுங்கூட இரட்சிக்கப்படும் படியாகவே இயேசுகிறிஸ்து இந்தத் தூஷணத்துக்கும் பரியாசத்துக்கும் நிந்தைக்கும் உட்பட்டார் என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? அறியாதிருந்தால், இன்றே அறிந்து உணர்ந்து இரட்சிக்கப்பட இயேசுவுக்கு நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம். அல்லேலூயா!



## சரீரப் பாடுகள் – வளைந்துகொண்ட நாய்கள்

நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் கால்களையும் உருவக்குத்தினார்கள். ஆனாலும், கர்த்தாவே நீர் எனக்குத் தூரமாகாதேயும்; என் பெலனே, எனக்குச் சகாயம் பண்ணத் தீவிரித்துக்கொள்ளும். என் ஆத்துமாவைப் பட்டயத்திற்கும், எனக்கு அருமையானதை நாய்களின் துஷ்டத்தனத்திற்கும் தப்புவியும் (சங்கீதம் 22:16,19,20) என்று எழுதப்பட்டிருக்கிறது.

சூழ்ந்து நிற்கும் நாய்களைப் போன்ற, பொல்லாதவர்களின் கூட்டம் மேசியாவை வளைந்துகொண்டது. கடித்து பட்சிக்கும் தன்மையைக் கொண்ட நாய்களைச் சிலர் மான் முயல் போன்ற விலங்குகளை வேட்டையாட உபயோகிப்பது உண்டு. இதைப்போன்று, பொல்லாதவர்களின் கூட்டம், மேசியாவை பெரும்பாடுகளுக்குட்படுத்தி, சரீரத்தில் தாங்கொண்ணா வேதனைகளை உண்டாக்கினது. மேசியாவை வளைந்து கொண்டு அவருடைய கைகளையும் கால்களையும் உருவக்குத்தினார்கள். அவருடைய ஜீவனை அழிக்கும்படியாக அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மனுஷரால் நிந்திக்கப்பட்டபோது: என்னை விட்டுத் தூரமாகாதேயும்; ஆபத்து கிட்டியிருக்கிறது; சகாயரும் இல்லை (சங்கீதம் 22:11) என்று வேண்டியவர், சரீரப் பாடுகளுக்குட்பட்ட போது, நாய்களின் துஷ்டத்தனத்திற்கும் தப்புவியும் என வேண்டுகிறார். ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்குத் தூரமாகாதேயும்; என் பெலனே, எனக்குச் சகாயம் பண்ணத் தீவிரித்துக்கொள்ளும் (சங்கீதம் 22:19) என்கிறார்.

## நம் பிராணனை மீட்க இயேசுவுக்கு பாடுகள்

கிறிஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னர், அந்நாளில் வரவிருந்த மேசியாவின் சரீரப் பாடுகளை விவரித்துச் சொன்ன வார்த்தைகள் யாவும், இயேசுகிறிஸ்துவின் வாழ்வில், பாடுமரணத்தில் நிறைவேறியது. நாய்களைப் போன்று சுற்றி வளைந்துகொண்டு துன்புறுத்தி, கைகளையும் கால்களையும் உருவக்குத்தி பாடுகளுக்குட்படுத்தின பொல்லாதவர்களின்

கூட்டத்தின் செயல்கள், இயேசுவின் வாழ்வில் ரோமப்பேரரசின் போர்ச்சேவகர்களால் கொடூரமாக நடந்தேறியது.

தேசாதிபதியின் அரமனையிலே போர்ச்சேவகரின் கூட்டம், முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, இயேசுவின் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்தார்கள். பின்பு அவர்மேல் துப்பி, அந்தக்கோலை எடுத்து அவரைச் சிரசில் அடித்தார்கள் (மத்தேயு 27:27,29,30). பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான். யூதருடைய ராஜாவே வாழ்க என்று சொல்லி (அவரை ஏளனம் பண்ணி) அவரைக் கையினால் அடித்தார்கள். இயேசு தம்முடைய சிலுவையைச் சுமந்தார்; கொல்கொதா என்று சொல்லப்படும் இடத்தில் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள் (யோவான் 19:1,3,17,18) என்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, மனுஷருடைய நிந்தைகளைப்போன்றே இயேசுவின் சரீரப்பாடுகள் யாவுங்கூட, கர்த்தரால் முன் அறிவிக்கப்பட்டபடியே மிகவும் துல்லியமாக நடந்தேறியது. அதே வண்ணமாக வார்த்தையின்படி, அவர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து, உன் நோய்களை எல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்க இருப்பதும் உண்மையே. நிறைவான இந்த நன்மைகளை இன்றே இலவசமாகப் பெற்றிட, இயேசுவுக்கு உன்னை ஒப்புக்கொடுப்பாயா? உண்மையாய் அர்ப்பணிக்கின்ற உன்னை இயேசு ஏற்றுக்கொண்டு அங்கிகரித்து ஆசீர்வதிப்பார். அல்லேலூயா!

## கைவிடப்பட்ட இயேசு – சிங்கத்தின் வஞ்சகம்

என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும் என்றும்; பீறிக் கொர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல், என்மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள் (சங்கீதம் 22:21,13) என்றும் தாவீது எழுதி வைத்திருக்கிறார். வேதாகமத்தில், துஷ்ட அதிகாரி கெர்ச்சிக்கும் சிங்கத்திற்கு ஒப்பிடப்படுகிறான் (நீதி. 28:15). மேலும், அப்போஸ்தலனாகிய பேதுரு: தெளிந்த புத்தியுள்ளவர்களா யிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய



பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8) என்று எழுதியிருக்கிறார். தன்னை எல்லாரும் கைவிட்டபோது அப்போஸ்தலனாகிய பவுல், கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன் (2 தீமோத்தேயு 4:17) என்றார்.

இந்த வார்த்தைகளில் பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கத்திற்கு ஒப்பிடப்படுகிறான். சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும் என்பது, பிசாசின் உபாய தந்திரங்களிலிருந்து விடுவியும் என்பதைக் குறிக்கிறது. மனுஷரால் நிந்திக்கப்பட்டபோது, என்னை விட்டுத் தூரமாகாதேயும், ஆபத்துக்கிட்டியிருக்கிறது சகாயரும் இல்லை என்று வேண்டினார். சரீரப்பாடுகளுக்குட்பட்டபோது, கர்த்தாவே எனக்குத் தூரமாகாதேயும், எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும் என்றார். மேலும் அவர், என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும் என்றும்; நான் காண்டாமிருகத்தின் கொம்புகளில் இருக்கும்போது எனக்குச் செவிகொடுத்தருளினீர் என்றும் வேண்டினபோது; கர்த்தர் எனக்குச் செவிகொடுத் தருளினார் (சங்கீதம் 22:21) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

## பரியாச வஞ்சக வார்த்தைகள் பொய்யானது

சங்கீதம் 22இல், முதல் வசனம் துவங்கி 21ஆம் வசனத்தின் முற்பகுதிவரை வியாபித்திருந்த நிந்தை பாடுகள் மற்றும் அங்கலாய்ப்பின் காட்சிகள், 22ஆம் வசனம் துவங்கி மறைந்து, துதியின் சத்தமும் சாட்சிகளும் வெளிப்படுகிறது. பிதாவாகிய தேவன், தமது ஆதீனத்திலே முன் குறித்திருந்த வேளையில் அவருக்குச் செவிகொடுத்தருளினார். அல்லேலூயா!

கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் (சங்கீதம் 22:8) என்ற பரியாச வஞ்சக வார்த்தைகள் அப்பொழுது அர்த்தமற்றதானது. இதற்கு மாறாக, உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார் (சங்கீதம் 22:24) என்கிற சாட்சி துதியோடு வெளிப்பட்டது.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, பரியாசத்தையும் பாடுகளையும் சிலுவையிலே பொறுமையுடன் சகித்தபோது, பிதாவாகிய தேவன் பலத்த கிரியைகளுடன் இடைப்பட்டார். ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் பணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு இயேசு சிலுவையிலே வெற்றிசிறந்தார். அல்லேலூயா!.

கர்த்தர் விண்ணப்பத்துக்குச் செவிகொடுத்து, கெர்ச்சிக்கிற சிங்கம் போன்ற பிசாசானவனின் வஞ்சகத்திற்கு மேசியாவைத் தப்புவிக்கிறார். தமது சித்தத்தை தேவன் செயல்படுத்தியபோது; பெரிய மாறுதல் அங்கே நிகழ்வதைக் காண்கிறோம். ஆனால், வேண்டுதல் கேட்கப்பட்டு பதில் கிடைத்தபோதும், எதிர்பார்த்த மகிழ்ச்சியின் ஆரவாரத்திற்கு மாறாக, கைவிடப்பட்ட நிலையின் கதறுதல் வெளிப்படுகிறது.

என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச்சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்? என்று மிகுந்த சத்தமிட்டு கூப்பிடுகிறார். பிதாவாகிய தேவன், வேண்டுதலைக்கேட்டு செயல்பட்டபோது, நடந்தது என்ன? ஏன் கைவிடப்பட்டு கதறிச்சொல்லும் வார்த்தைகள் வெளிப்பட்டது? வேதாகமத்தின் நற்செய்தி நூல்களில் தொகுக்கப்பட்டுள்ள கொல்கொதா சிலுவைக் காட்சிகளின் விவரங்கள், இதைப்போன்ற அநேக கேள்விகளுக்கு பதிலளிப்பதைப்போல அமைந்துள்ளது.

## கொல்கொதாவில் நடந்தது என்ன?

கொல்கொதாவில் இயேசு, தமக்கு நேரிட்ட அவமானத்தை எண்ணாமல் சிலுவையின் பாடுகள், சரீர வேதனைகளைச் சகித்தார். மனுஷருடைய நிந்தைகளையும் சரீரப்பாடுகளையும் அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் பொறுமையுடன் சகித்தார். தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. இயேசு தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபிரெயர் 12:2) என்று எழுதப்பட்டிருக்கிறது.



சிலுவைப் பாடுகளின் உச்சக்கட்டமாக கொல்கொதாவில், ஆறாம் மணிநேர முதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, உன்னதமான வருடைய ஆலோசனையை அசட்டைபண்ணினவர்கள், அந்தகாரத்திலும் மரண இருளிலும் வைக்கப்பட்டிருந்தார்கள் (சங்கீதம் 107:10,11) என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவனுக்கு விரோதமாய் செயல்படுகிறவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருள் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே, பரிசுத்தப் பிதாவின் சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று உன்னதமானவரின் ஆலோசனைக்கு, சிலுவை மரணத்திற்கு தம்மை ஒப்புக்கொடுத்த இயேசுவை அந்தகாரம் சூழ்ந்து கொள்ளுகிறது.

## இயேசு அந்தகாரத்திற்குட்பட்டார்

உலகத்திற்கே ஒளியான இயேசு, உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பித்த மெய்யான ஒளியான இயேசு, அந்தகாரத்திற்குட்பட்டார். நம்மை இருளின் அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்த இயேசுவுக்கு காரிருள் வைக்கப்பட்டிருந்தது. ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். சரீரப்பாடுகளையும் அவமானத்தையும் மனுஷருடைய நிந்தைகளையும் பொறுமை யோடு சகித்த நம் இயேசு, இவ்வாறு மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிடக் காரணம் என்ன? அந்தகாரத்தில் காரிருளில் அந்த மூன்று மணிநேரத்தில் நடந்தது என்ன?

இயேசு, அந்த சிலமணி நேரங்கள், அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்தார். பாவமில்லாத அவர், நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்த்தார் (1 யோவான் 3:5). சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியானார் (1 யோவான் 2:2). நாம் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காக தேவன் பாவமாக்கினார் (2 கொரி. 5:21). கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார் (கலாத்தியர் 3:23) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

கொல்கொதாவில் கோரச்சிலுவையில் சில மணி நேரங்கள் இயேசு நமக்காக பாவமானார்; உலகத்தின் பாவம் சாபம் பாடுகள் துக்கங்களைச் சுமந்தார். பூர்வகாலமுதல் நம் தேவனும் பரிசுத்தருமானவர், தீமையை பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன் (ஆபகூக் 1:12,13) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதினிமித்தமே மகாபரிசுத்தமுள்ள தேவன், அந்தத் தருணத்தில் பாவமான இயேசுவைக் காணக்கூடாதிருந்தார் என அறிகிறோம்.

## நாம் கைவிடப்படாதிருக்க இயேசு கைவிடப்பட்டார்

அந்தப் பிரிவு வேதனை கைவிடப்பட்ட நிலையில், கொல்கொதா சிலுவையில் இயேசு: என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். மனுஷருடைய நிந்தைகள் சரீரப் பாடுகளோடு நம்முடைய பாவங்களை சுமந்ததினிமித்தம் ஏற்பட்ட பிரிவினால், இயேசு தேவனை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டார். இயேசுவில் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட நாம், நம்முடைய வாழ்வில் கைவிடப்படாதிருக்க, இயேசு கைவிடப்பட்டார்.

கொல்கொதா சிலுவை மரத்தில், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, கெர்ச்சிக்கிற சிங்கம் போன்ற பிசாசானவனின் வஞ்சகத்திலிருந்து விடுவியுமென்று வேண்டினார். பிதாவாகிய தேவன் அவருக்குச் செவிகொடுத்து, மனுக்குல இரட்சிப்பின் திட்டத்திற்கு விரோதமான பிசாசின் நயவஞ்சகத்திலிருந்து இயேசுவை விலக்கி மீட்டார்.

பிதாவாகிய தேவனின் பரிபூரண சித்தத்திற்குட்பட்டு, இயேசு சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திச்செய்கிற பலியானார். பாவமில்லாத இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்த்தார். தாம் சுமந்த பாவத்தினிமித்தம், பிதாவாகிய தேவனுடைய முகம் இயேசுவுக்கு மறைக்கப்பட்டது. இதனிமித்தமே, வேண்டுதல் கேட்கப்பட்டு பதில் கிடைத்தபோதும், எதிர்பார்த்த மகிழ்ச்சியின் ஆரவாரத்திற்கு மாறாக, கதறிச் சொல்லும் வார்த்தைகள் கல்வாரியில் வெளிப்பட்டது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, வாழ்வில் உபத்திரவங்களுக்கும் நெருக்கங்களுக்கும்



உட்பட்டு, செய்வதறியாது நீ மனங்கலங்கி திகைத்து நிற்கிறாயா? நீ சுமந்தலையும் பாவசாபங்களினிமித்தமே பிதாவாகிய தேவனுடைய முகம் உனக்கு மறைக்கப்பட்டது என்பதை நீ அறியாயா? நீ கைவிடப்படாதிருக்க இயேசு கைவிடப்பட்டார் என்ற உண்மையை உணர்ந்து மனந்திரும்பி, அந்த இயேசுவை நோக்கிப் பார்த்து விடுவிக்கப்பட, இன்றே உன்னை நீ ஒப்புக்கொடுப்பாயா? அர்ப்பணிக்கின்ற உன்னைக் கர்த்தர் மீட்டெடுத்து ஆசீர்வதிப்பார். அல்லேலூயா!

## இயேசு உங்களை ஒருபோதும் கைவிடார்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமறக் கழுவி சுத்திகரிக்கப்பட்டு, இரட்சிப்பின் நிச்சயத்தோடும் நித்தியராஜ்யத்தின் உறுதியோடுமுள்ள தேவனுடைய பிள்ளைகள் வாழ்விலுங்கூட காரிருளும் அந்தகாரமும் சூழ்ந்திருக்க வாய்ப்பிருக்கிறது. நம்மில் சிலர் வாழ்வில் தோன்றுகிற வேதனை வெறுமை தனிமை நிந்தை போன்ற இருளின் அந்தகாரங்கள் வேதாகமத்தின் அடிப்படையில் விசுவாசிகளுக்கு புறம்பானதல்ல என்பதை நாம் அறிவோம்.

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் (யோவான் 16:33) என்று இயேசு சொன்னார். அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது (2 கொரி. 4:17) என்று பவுல் எழுதிவைத்திருக்கிறார். இவ்வாழ்வின் பாடுகள் அந்தகாரம் காரிருள் போன்றவை அதிசீக்கிரத்தில் நீங்குமாம், சொற்பகாலமே இருக்குமாம். இதைத் தொடர்ந்து விசுவாசத்தோடு காத்திருக்கும் காலம் மூன்று நாட்களோ மாதங்களோ அல்லது வருடங் களாகவோக்கூட இருக்கலாம். ஆனாலும் நிச்சயமாகவே இயேசுகிறிஸ்துவுக்குள் விசுவாசத்தோடு வாழும் நமக்கு முடிவு உண்டு.

இயேசுவின் பாடுமரணத்தைத் தொடர்ந்து, மனுக்குலத்துக்கு பெரிதான இரட்சிப்பு அருளப்பட்டது; உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் மகிமையும் வல்லமையும் அவர்கள் வாழ்வில் தோன்றி வெளிப்பட்டது. இதைப்போன்றே, இயேசுகிறிஸ்துவின்

பரிசுத்த இடைபடுதலுக்காகக் காத்திருக்கும் தேவனுடைய பிள்ளைகள் வாழ்விலும், மிகவும் அதிகமான நித்திய கனமகிமை உண்டாகும் என எழுதப்பட்டிருக்கிறது. அல்லேலூயா!

## சகாயஞ்செய்யும் கிருபை அருள்வார்

இவ்வுலக வாழ்வில் பாடுகளின் நிமித்தம் சோர்ந்து அமிழ்ந்து போகிறவர்களாக அல்ல, கொஞ்சக்காலம் அனுபவிக்கிற பாடுகளின் நிறைவில், உயிர்த்தெழுந்து வெற்றிச்சிறந்த இயேசுகிறிஸ்துவின் மகிமையையும் வல்லமையையும் பெற்றவர்களாய் சாட்சிபகரவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன் என கர்த்தராகிய நம் மீட்பர் உரைக்கிறார்.

நம்முடைய பலவீனங்களுக்காக பரிதபிக்கக்கூடாத, பிரதான ஆசாரியர் நமக்கு இராமல், எல்லாவற்றிலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப்பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். அல்லேலூயா! ஆமென்.



# சங்கீதம் 22

என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?
எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும்
வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?
என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவு கொடீர்;
இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை.

இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.
எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள்;
நம்பின அவர்களை நீர் விடுவித்தீர். உம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தப்பினார்கள்;
உம்மை நம்பி வெட்கப்பட்டுப்போகாதிருந்தார்கள்.

நானோ ஒரு புழு, மனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும்,
ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்.
என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி,
உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி: கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே,
அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே,
இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்.

நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்;
என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை
உம்முடையபேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர்.
கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன்;
நான் என் தாயின் வயிற்றில் இருந்ததுமுதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்.

என்னை விட்டுத் தூரமாகாதேயும்; ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை.
அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது;
பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்துகொண்டது.

பீறிக் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல், என்மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்.
தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது.
என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று.
என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது;
என்னை மரணத்தூளிலே போடுகிறீர்.

நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது;
பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது;
என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்.

என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்;
அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.
என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு,
என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்.

ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்கு தூரமாகாதேயும்;
என் பெலனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும்.
என் ஆத்துமாவைப் பட்டயத்திற்கும்,
எனக்கு அருமையானதை நாய்களின் துஷ்டத்தனத்திற்கும் தப்புவியும்.
என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும்;
நான் காண்டாமிருகத்தின் கொம்புகளில் இருக்கும்போது எனக்குச் செவிகொடுத்தருளினீர்.

உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்.
கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்;
யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்;
இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்.

உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும்
அருவருக்காமலும் தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து,
தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்.
மகா சபையில் நான் உம்மைத் துதிப்பேன்;
அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள்;
கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள்;
உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும்.
பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்;
ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும்.

ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்.
பூமியின் செல்வவான்கள் யாவரும் புசித்துப் பணிந்துகொள்வார்கள்;
புழுதியில் இறங்குகிறவர்கள் யாவரும் அவருக்கு முன்பாக வணங்குவார்கள்.
ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக்கூடாதே.

ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது
ஆண்டவருடைய சந்ததி என்னப்படும். அவர்கள் வந்து: அவரே இவைகளைச் செய்தார்
என்று பிறக்கப்போகிறவர்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்.

**இயேசு ஒருபோதும் கைவிடார்!**

# 6. உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்

*நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசுகிறிஸ்துவைக் கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.* (எபிரெயர் 13:20,21)

தாவீது இராஜாவை சத்துருக்கள் தொடர்ந்து, அவரது ஆத்துமாவை ஒடுக்கி இடுக்கத்திற்குட்படுத்தினபோது, கர்த்தருடைய வழிநடத்துதலுக்காகவும், தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய போதிக்கும்படியாகவும், தன்னைத் தப்புவிக்கும்படியாகவும், அவர் வேண்டிய விண்ணப்பம் சங்கீதம் 143ஆக வேதாகமத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தச் செய்தி தொகுப்பில் அடுத்த பொக்கிஷமாக 143ஆம் சங்கீதத்தைச் சார்ந்த இச்செய்தி தொகுக்கப்பட்டுள்ளது.

## சத்துரு உட்புகுதலை மேற்கொள்ள விண்ணப்பம்

தாவீது ராஜாவுக்கு விரோதமாக அப்சலோம் என்கிற அவரது மகனே எழும்பின நாட்களில் இந்த 143ஆம் சங்கீதம் எழுதப்பட்டிருக்கலாம் என வேத ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். மிகவும் இக்கட்டான நிலை; சத்துருவானவன் தாவீதின் வாழ்வில் உட்புகுந்து தன் சொந்த மகனையே அவருக்கு விரோதமாக எழும்பச்செய்கிறான். அப்சலோம் திட்டமிட்டு செயல்பட்டான். இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டு எப்ரோனில் ராஜாவானான் (2 சாமுவேல் 15).

இது தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, ராஜாவும் அவனுடைய வீட்டார் எல்லாரும் எருசலேமைவிட்டு

கால்நடையாய்ப் புறப்பட்டார்கள். தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு ஒலிவமலையில் ஏறிப்போனான்; அவனோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறினார்கள் (2 சாமுவேல் 15:30).

இதனிமித்தமே தாவீது: சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி, வெகுகாலத்துக்கு முன் மரித்தவர்கள்போல் என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறான் (சங்கீதம் 143:3) என்கிறார். என் ஆவி என்னில் தியங்குகிறது; என் ஆவி தொய்ந்துபோகிறது; கர்த்தாவே, சீக்கிரமாய் எனக்குச் செவிகொடும் என்று விண்ணப்பிக்கிறார். தன் சொந்த மகனும் சொந்த ஜனமுமே, சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டு ராஜாவுக்கு விரோதமாக எழும்பினபோது செய்வதறியாது, நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காண்பியும் என்றும்; உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் என்றும்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக என்றும் ஜெபம்பண்ணுகிறார்.

## தேவனுக்குப் பிரியமானதைச் செய்வோம்

நம்மில் அநேகருங்கூட நம்முடைய சொந்த ஜனமும் வீட்டாரும் உடன் ஊழியர்களும் சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டு நமக்கு விரோதமாக எழும்பி செயல்படும்போது செய்வதறியாது திகைத்து நிற்கிறோம். ஆவியிலும் ஆத்துமாவிலும் சோர்வுற்றவர்களாய் கலங்கித் தவிக்கிறோம். இவ்வகையான நிர்ப்பந்தமான நிலைகளில் தேவனுக்குப் பிரியமானவை களையேச் செய்ய நாம் அழைக்கப்படுகிறோம். மாறாக, சுயபெலத்தால் மாம்சீகத்தில் நம் திறமையை நம்பி இவற்றை எதிர்கொள்ள முற்படும்போது, எஞ்சி நிற்பது வேதனையும் கசப்பும் பிரிவினையும் கண்ணீருமே.

தேவனிடத்திலிருந்து அவருக்குப் பிரியமானதைக் கேட்டறிந்து அவரால் வழிநடத்தப்பட, தாவீதைப்போல நாமும் தேவனோடுள்ள உறவில் நிலைத்திருக்க அழைக்கப்படுகிறோம். தாவீது: நீரே என் தேவன்; உம்மை நம்பியிருக்கிறேன்; வறண்ட நிலத்தைப்போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது; கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும்;



உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும் (சங்கீதம் 143 :11) என்று வேண்டுகிறார்.

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் என தாவீது ராஜா வேண்டி தனது இக்கட்டான வேளையில், கர்த்தரால் வழிநடத்தப்பட தன்னை ஒப்புக்கொடுத்தார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும்: என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார். பிதாவுக்கு பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை (யோவான் 8:29) என்றார். இயேசு பிதாவுக்கு பிரியமானவராய் தேவனுக்கு பிரியமானவைகளையே செய்தார். இவர் என்னுடைய நேசக்குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் (மத்தேயு 3:17, 17:5) என்று பரிசுத்தப் பிதா இயேசுவைக் குறித்து சாட்சியாக உரைத்ததையும் வேதத்தில் வாசிக்கிறோம். நாமும் தேவனுக்குப் பிரியமானவர்களாய் இயேசுகிறிஸ்துவின் ஒத்தாசையுடன் தேவனுக்குப் பிரியமானவை களையே நம் வாழ்வில் செய்ய நம்மை அர்ப்பணிப்போம்!

## தேவனுக்குப் பிரியமானவைகள் எவை?

கர்த்தருக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன் வாழ்வில் நீ இப்பொழுது நெருங்கின உறவினர் அல்லது உடன் ஊழியர் நிமித்தம் பாதிக்கப்பட்டு செய்வதறியாது கலங்கித் தவித்து நிற்பாயானால், தேவனுக்குப் பிரியமானதை அறிந்து உணர்ந்து உன் வாழ்வில் செயல்படுத்த உன்னை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுப்பாயா? தாவீதின் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கி விடுவித்து, அவரை ஆசீர்வதித்து அவரைக் குறித்து சாட்சியும் (அப். 13:22) பகர்ந்த தேவன், கர்த்தரின் ஆலோசனைக்கு அர்ப்பணிக்கிற உன்னையும் இன்று உன் நெருக்கத்திலிருந்து விடுவித்து சமாதானத்தையருளி ஆசீர்வதிப்பார்.

தேவனுக்கு பிரியமானவைகள் எவை? கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள் (எபேசியர் 5:10) என்று எழுதப்பட்டிருக்கிறது. முதலாவது மனந்திரும்புதல், அதாவது, நம்முடைய பாவ வழிகளை விட்டு மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை நம்முடைய சொந்த இரட்சகராக

ஏற்றுக்கொள்ளுவது தேவனுக்குப் பிரியம். அடுத்து, கர்த்தரைத் தேடுதல் - நாம் கர்த்தரைத் தேடுகிறவர்களாய் கர்த்தருக்கென்று வாழுகிறவர்களாக இருப்பது அவருக்குப் பிரியம். மனந்திரும்பி, கர்த்தரைத் தேடி, கர்த்தருக்கென்று வாழும்போது, நாம் ஆசீர்வதிக்கப்படும்படியாக உற்சாகமாக கர்த்தருக்கு கொடுப்பதும் தேவனுக்கு பிரியமானதாக இருக்கிறது.

## மனந்திரும்புதல் – தேவனுக்குப் பிரியம்

துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளைவிட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (எசே. 18:23) பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்... (எசே. 18:20) என்று வேதம் சொல்லுகிறது. நம்முடைய பாவ வழிகளைவிட்டு மனந்திரும்பி சாகாமல் தப்பிப் பிழைப்பது கர்த்தருக்குப் பிரியமாயிருக்கிறது.

மேலும், விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபிரெயர் 11:6), கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசியர் 2:8) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார் (யோவான் 1:12). பாவ வழிகளிலிருந்து மனந்திரும்பி, பாவத்தின் விளைவுகளிலிருந்து மீட்டு இரட்சிக்கப்பட்டு, தேவனுடையப் பிள்ளைகள் என்ற உறவில் நிலைத்திருப்பது தேவனுக்குப் பிரியம்.

நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போமேயானால், நம்முடைய வாழ்வில் நடந்த, நடைபெறுகிற அநேக சம்பவங்கள் மிக முக்கிய காரியத்தை நம்முடைய வாழ்வில் நடப்பிக்க கர்த்தரால் அனுமதிக்கப்பட்டிருப்பதை நம்மால் உணர முடியும். அது நம்முடைய ஆத்தும இரட்சிப்பே! ..மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று இயேசு சொன்னார் (லூக்கா 15:7).



## பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம்

பல ஆண்டுகளுக்கு முன்னர் சகோதரர் ஒருவர் வேலைக்காக வெளிநாட்டிற்குச் சென்றார். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும் சகோதரர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக அறியாதே இருந்தார். புதிய சூழ்நிலை, மக்கள், வேலை ஸ்தலத்தின் எதிர்பார்ப்புகளினால் தனிமையை உணர ஆரம்பித்தார். தன் உணர்வுகளையும் வெளிப்படுத்த முடியாத நிலையில், இயேசுவைத் தேடுவதைத் தவிர வேறு வழி இல்லாது, ஜெபம்பண்ணவும் முறைப்படி வேதம் வாசிக்கவும் ஆரம்பித்தார்.

தன் உணர்வுகளையும் தேவைகளையும் ஸ்தோத்திரத் தோடே கூடிய ஜெபத்தினால் தேவனுக்குத் தெரியப்படுத்தின போது, ஜீவனுள்ள தேவனோடு உறவாடும் சிலாக்கியம் பெற்றார். கர்த்தருடைய வழி நடத்துதலினால் மனந்திரும்பி பாவங்கள் மன்னிக்கப்பெற்று, கர்த்தருக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார்; வேலையிலும் வாழ்விலும் ஆசீர்வதிக்கப்பட்டார். தான் அறிந்த ஜீவனுள்ள தேவனின் அன்பை அந்நாட்டிலேயே தன்னைப் போலிருந்த அநேகருக்கு அறிவித்து மகிழக் கர்த்தர் கிருபை செய்தார். அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, மனந்திரும்பாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். மனந்திரும்பி இயேசுவோடு ஐக்கியப்படாத நிலையில், ஆராதனைகளுக்கும் நற்செய்திக் கூட்டங்களுக்கும் செல்லுகிறதும், பாட்டுப்பாடி கைதட்டி ஆராதிப்பதும், காணிக்கைகளை செலுத்துவதும் அர்த்தமற்றதாகிறது. அறியாமையுள்ளக் காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் (அப். 17:30) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இனிக் காலம் செல்லாது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. ஆனபடியால், இன்னும் நீ மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதிருப்பாயானால், இன்றே மனந்திரும்பி இயேசுவுக்கு உன்னை அர்ப்பணிப்பாயா? மனந்திரும்புதல் தேவனுக்குப் பிரியம். மனந்திரும்பி விசுவாசமுள்ளவராய்

இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார். உன்னிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். அல்லேலூயா!

## கர்த்தரைத் தேடுதல் – அவருக்குப் பிரியம்

நான் என் நேசருடையவள், அவர் பிரியம் என்மேலிருக்கிறது. வாரும் என் நேசரே! வயல் வெளியில் போய், கிராமங்களில் தங்குவோம் (உன்னதப்பாட்டு 7:10,11) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசு நம் நேசர்; மீட்கப்பட்ட நாம், நேசர் இயேசுவினுடையவர்கள். நம் நேசர் இயேசுவின் உறவை நாடித்தேடி அவரோடே அவருக்கென்று வாழ விரும்பி உலகத்தையும் அதின் மாயையையும் வெறுத்து, நம்மை இடறலடையச் செய்யும் சூழ்நிலைகளைத் தவிர்த்து, கர்த்தரைத் தேடுகிறவர்கள்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.

கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள்; உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும் (சங்கீதம் 22:26) என்றும்; தேவனைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழும் (சங்கீதம் 69:32) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. ஆத்தும இரட்சிப்பைப்பெற்று தன் ஆத்துமா வாழ்ந்து செழிப்படைந்திருந்த காயு என்ற விசுவாசியை பிரியமானவனே என்று பலமுறை அப்போஸ்தலனாகிய யோவான் அழைக்கிறதை யோவான் 3ஆம் நிருபத்தில் பார்க்கிறோம். கர்த்தரைத் தேடுகிறவர்களின் ஆத்துமா வாழும்; அவர்கள் கர்த்தருக்கும் அவருடைய ஊழியருக்கும் பிரியமானவர்களாயிருக்கிறார்கள். பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3 யோவான் 2) என்றும் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தின தானியேல் “மிகவும் பிரியமானவன்” என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தானியேல் உபவாசம்பண்ணி, இரட்டிலும், சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட தன் முகத்தை அவருக்கு நேராக்கி (தானியேல் 9:3) காத்திருந்தான். அப்படி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தபோதே, பிரதான தூதர்களில் ஒருவரான காபிரியேல் வேகமாகப் பறந்து வந்து “நீ மிகவும் பிரியமானவன்” என்று சொன்னான் (தானி. 9:21-23).



இதைப்போன்று மற்றொரு உபவாசக் காலத்தில் தானியேல் தன்னைத் தாழ்த்தி கர்த்தரைத் தேடியபோது, தூதன் ஒருவன் தானியேலை “பிரியமான புருஷன்” என்று அழைக்கிறதையும் பார்க்கிறோம். கர்த்தரைத் தேடின தானியேலுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைத் தெரிவிக்க வந்த தூதன் எதிர்ப்புகளைச் சந்தித்தபோது, பிரதான அதிபதிகளில் ஒருவரான மிகாவேல் உதவியாக வந்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது (தானியேல் 9:2, 21-23).

பல ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் பிரசித்திப்பெற்ற ஊழியரொருவரை ஜெபிப்பதற்காக ஒரு குடும்பத்தினர் அழைத்தனராம். குடும்பத்திற்காக ஜெபித்தப் பின்னர் ஊழியர் ஒவ்வொருவருக்காக தனியே ஜெபம்பண்ணினார். 12 வயதே நிரம்பிய மகளுக்கு ஜெபித்தபோது, கர்த்தருடைய ஆவியானவர் நிறைவாய் இறங்கி அபிஷேகித்தாராம். ஜெபத்திற்குப் பின்னர் அந்த மகளிடம், கர்த்தர் அவளிடத்தில் மிகவும் பிரியமாயிருப்பதைக் குறித்து கேட்டார்கள். அதற்கு அவள்: நான் தினமும் அதிகாலையில் எழுந்து கர்த்தரைத் தேடுவேன், ஜெபிப்பேன். இயேசு அப்பொழுது என்னிடம் ஜெபிக்க குறிப்புகளைத் தருவார் என்றாளாம். ஆம் பிரியமானவர்களே, கர்த்தரைத் தேடுதல் அவருக்கு பிரியமாயிருக்கிறது.

## சத்துரு உட்புகுதல் இராது

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, கர்த்தரைத் தேடுகிறவர்களாகிய நீயும் நானுங்கூட கர்த்தருக்குப் பிரியமானவர்களே! வார்த்தையின்படி நாமுங்கூட எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்போம், செழித்திருப்போம். சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது (சங்கீதம் 34:10) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

சத்துருவின் உட்புகுதலினிமித்தம், நம்முடைய வாழ்வில் தோன்றும் இடுக்கமான சூழ்நிலைகளில் தானியேலைப்போல

கர்த்தரைத் தேடி தேவனுடைய ஆலோசனைகளையும், வழிநடத்துதலையும் பெற்று செயல்படுவோம். வாழ்வின் இடுக்கமான வேளைகளில் தவறான சொற்களும் செயல்களும், மாற்றக்கூடாத விளைவுகளை உண்டாக்க வல்லதாயிருக்கிறது. அதிக ஜாக்கிரதையாக, கர்த்தரைத் தேடுகிறவர்களாய், கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்ய நம்மை அர்ப்பணிப்போம்.

கர்த்தருக்குப் பயந்து வாழும் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில், சகோதரி சில மாதங்களாக தாங்கொண்ணா தலைவலியில் தூக்கமில்லாமல் அவதியுற்றார்கள். எந்த மருத்துவ சிகிச்சையும் பலனளிக்காதபோது, மருத்துவர்களே அதிக சக்திவாய்ந்த தூக்க மாத்திரைகளைக் கொடுத்தும் தூங்க முடியாமல் வேதனையடைந்தார்கள். சத்துருவின் உட்புகுதலை உணர்ந்த குடும்பத்தினர், கர்த்தரை இன்னும் அதிகமாகத் தேடி, கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்ய ஒப்புக்கொடுத்தனர். கர்த்தரின் ஆலோசனைக்குட்பட்டு அவர் கணவர் தன் மனைவியின் தலையில் எண்ணெய் பூசி (மாற்கு 6:13) ஜெபிக்க ஆரம்பித்து மூன்று நாட்களிலேயே சகோதரி பூரண சுகம் பெற்றார்களாம். அல்லேலூயா!

## கர்த்தருக்கு கொடுப்பது – அவருக்குப் பிரியம்

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். ஒருவன் கொடுப்பதினால் குறைவடைவான் என்பது உலக நியதி. ஆனால் தேவனுடைய ராஜ்யத்திற்கடுத்தக் காரியங்களுக்காக கொடுப்பதினால் மிகுதியாக பெற்றுக் கொள்ளுகிறான் என்பது ஒரு முரண்பாடான உண்மை. தேவனுடைய ராஜ்யத்திற்கான பணிகளுக்கும், தேவையிலிருப் போருக்கும் கர்த்தருடைய வழிநடத்துதலின்படி கொடுப்பது, விதைகளை விதைப்பதற்கு ஒப்பானது.

சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அனவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரி. 9:6,7) என்று வேதம்



சொல்லுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும்: கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார் (லூக்கா 6:38). மேலும் கர்த்தருக்குக் கொடுப்பதால் வரும் நிறைவான ஆசீர்வாதத்தைச் சோதித்துப் பார்க்க மல்கியா 3:10இல் அழைப்பையும் பெற்றிருக்கிறோம்.

## கொடுங்கள் உங்களுக்கும் கொடுக்கப்படும்

கொடுப்பதில் மக்கெதோனியா நாட்டு சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை பவுல் அப்போஸ்தலன் 2 கொரி. 8: 1-5இல் எழுதி வைத்திருக்கிறார். அவர்கள் மிகுந்த உபத்திரவத்திலும், கொடிய தரித்திரத்திலும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே, மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள்.

தமிழ்நாட்டில் வேலூர் பட்டணத்திற்கருகாமையில் உள்ள மலைப்பகுதியில் ஒரு எளிய விசுவாச குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள். சகோதரர் அந்த கிராமத்தில் தன் வீட்டிலேயே தையல் தொழில் செய்து வருகிறார். முன்னொரு மாதம் அவர் ஊழியரைச் சந்தித்தபோது தனது குடும்பத்தின் பொருளாதார நெருக்கடியைக் குறித்துச் சொன்னார். அவரது தொழில் பாணியிலேயே “டைட்” ஆக இருக்கிறது என்று சொன்னவர், துணி தைத்து சென்றவர்களும் தையற்கூலியை தராமல் இருப்பதையும் சொன்னார்.

ஆனாலும் அதே நாள் கூட்டம் முடிந்து செல்லும்போது அவர் கொடுத்த காணிக்கை ஊழியரை வியக்கச் செய்தது. சகோதரரை வினவியபோது அவர்: எங்களுக்குத் தேவை இருப்பது உண்மையானாலும், இந்தத் தொகை தேவனுக்குரியது என்றார். பெருக விதைப்பவன் பெருக அறுப்பான்; உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். அல்லேலூயா!

## தேவனுக்குப் பிரியமானதைச் செய்வோம்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! இந்தச் செய்தியை வாசிக்கின்ற நம்மில் யாரேனும் வாழ்வில் போராட்டங்களுக்குட்பட்டு ஆவியிலும் ஆத்துமாவிலும் சோர்வுற்றவர்களாய், சரீரத்திலும் பாதிக்கப்பட்டிருப்போமே யானால், தயவாய் தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய இன்றே நம்மை அர்ப்பணிப்போம்.

நம் பாவ வழிகளிலிருந்து மனந்திரும்பி இயேசுவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுவோம். கர்த்தரைத் தேடுகிறவர்களாக, கர்த்தருக்கென்று வாழ அர்ப்பணிப்போம்; நாம் ஆசீர்வதிக்கப்படும்படியாக கர்த்தருக்கென்று கொடுத்து மகிழ்வோம்.

தேவன்தாமே நம் ஒவ்வொருவரையும் ஆற்றித்தேற்றி பலப்படுத்தி, நம் ஆத்துமா வாழ்கிறதுபோல, நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க, செழித்தோங்க கிருபையருள்வாராக. ஆமென்.



# சங்கீதம் 143

கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும், என் விண்ணப்பங்களுக்குச் செவிகொடும்.
உமது உண்மையின்படியும் உமது நீதியின்படியும் எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்.
ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே,
அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும்.

சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி,
வெகுகாலத்துக்குமுன் மரித்தவர்கள்போல் என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறான்.
என் ஆவி என்னில் தியங்குகிறது; என் இருதயம் எனக்குள் சோர்ந்துபோகிறது.

பூர்வநாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்;
உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்.
என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன்;
வறண்ட நிலத்தைப்போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது.

கர்த்தாவே, சீக்கிரமாய் எனக்குச் செவிகொடும், என் ஆவி தொய்ந்துபோகிறது;
நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாகாதபடிக்கு,
உமது முகத்தை எனக்கு மறையாதேயும்.

அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன்,
நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்;
உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

கர்த்தாவே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும்;
உம்மைப் புகலிடமாகக் கொள்ளுகிறேன்.
உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்;
உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.

கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும்;
உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும்.
உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்து,
என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும்; நான் உமது அடியேன்.

**உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்!**

# 7. ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்!

*... சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்.* (ரோமர் 12:1,11,12)

நம்முடைய விசுவாச வாழ்வில், ஜெபம்பண்ணுகிறதில் காணப்படும் கோணலானவைகளைச் செவ்வையாக்கும்படியாக, தடைகளை நீக்கிப்போடுகிறவர் நமக்கு முன்பாக நடந்து போகிறார். ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்க ஆலோசனைகளுடன் தொகுக்கப்பட்டுள்ள இந்தச் செய்தி, ஏழாவது பொக்கிஷமாக இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

## இயேசுவே நமக்கு மாதிரி

இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில், ஜெபமும் உபவாசமும் வேதவாசிப்பும் இன்றியமையாதவைகளாக இருக்கிறது. தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி, அவரை விசுவாசிக்கிற நமக்கு, மாதிரியைப் பின்வைத்துப் போன இயேசு, வனாந்தரத்தில் தனித்துப்போய் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார் (லூக்கா 5:16) என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

இயேசு தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி சாயங்காலமானபோது அங்கு தனிமையாயிருந்தார் (மத்தேயு 14:23) என்றும், இயேசு ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்



கொண்டிருந்தார் (லூக்கா 6:12) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. சாமுவேல் தீர்க்கதரிசியும், இரா முழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான் (1 சாமுவேல் 15:11) என்று வாசிக்கிறோம்.

ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்கவும் (ரோமர் 12:12), எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணவும் (எபேசியர் 6:18), அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு அறிவுறுத்துகிறார். வேதாகமத்தில் தனி ஜெபத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக, சாமுவேல் தீர்க்கதரிசியின் தாயான அன்னாளின் ஜெபம் விவரிக்கப்பட்டுள்ளது.

## அன்னாளின் ஜெபம்

எப்பிராயீம் மலைத்தேசத்திலே எல்க்கானா என்று ஒரு மனுஷன் இருந்தான். அவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். ஒருத்திபேர் அன்னாள், மற்றவள்பேர் பெனின்னாள்; பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள், அன்னாளுக்கோ பிள்ளை இல்லை. கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார்.

அன்னாள் சீலோவிலிருந்த கர்த்தருடைய ஆலயத்திற்குப் போய், மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப்பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்திப்படுவதில்லை என்று பொருத்தனைபண்ணினாள் (1 சாமுவேல் 1:10,11). அவள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம்பண்ணினாள்.

அன்னாள் தன் இருதயத்தில் பேசினாள்; அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது, அவள் சத்தமோ கேட்கப்படவில்லை. இதைக்கண்ட ஆசாரியனாகிய ஏலி, அவள் வெறித்திருக்கிறாள் என்று நினைத்து, அவளை நோக்கி: நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய்? உன் குடியை உன்னைவிட்டு விலக்கு என்றான். அதற்கு அன்னாள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ;

நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை. நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன். ...மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம் பண்ணினேன் என்றாள் (1 சாமுவேல் 1:12-16).

## கர்த்தர் அன்னாளை நினைந்தருளினார்

கர்த்தருடைய சந்நிதியில், அன்னாள் கர்த்தரை நோக்கி பொறுத்தனையுடன் விண்ணப்பம்பண்ணி தன் இருதயத்தை ஊற்றிவிட்டாள். தன் இருதயத்தில் பேசி தன் மனக்கிலேசத்தை, துக்கத்தை கர்த்தரிடத்தில் தெரியப்படுத்தினாள். அப்புறம், அன்னாள் துக்கமுகமாயிருக்கவில்லை.

கர்த்தர் அவளை நினைந்தருளினார். சிலநாள் சென்ற பின்பு அன்னாள் கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப்பெற்று, கர்த்தரிடத்தில் அவனைக்கேட்டேன் என்று சொல்லி, அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள். அவள் அவனைப் பால்மறக்கப் பண்ணினபின்பு, அவனையும் கூட்டிக்கொண்டு கர்த்தருடைய ஆலயத்திற்குப் போனாள். பிள்ளையை ஆசாரியனாகிய ஏலியினிடத்தில் கொண்டுவந்து விட்டாள்.

அப்பொழுது அவள்: இந்த பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்கு கட்டளையிட்டார். ஆகையால் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள்; அவன் அங்கே கர்த்தரைப் பணிந்துகொண்டான் (1 சாமுவேல் 1:27,28).

## கர்த்தரை நோக்கி விண்ணப்பம்

என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்குச் செவிகொடுத்தார் (சங்கீதம் 120:1) என்ற வசனத்தின்படியே, அன்னாள் தன்னுடைய வாழ்வின் நெருக்கத்தில் மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினாள்; கர்த்தர் அவளுடைய விண்ணப்பத்திற்கு செவிகொடுத்து அவளுக்கு மறுஉத்தரவு அருளினார். நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே



வைத்தார் (சங்கீதம் 118:5) என்றும்; மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் என்றும் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய வாழ்வின் நெருக்கங்களிலும் குறைவுகளிலும் நிந்தனைகளிலும், கர்த்தரையே நோக்கிப்பார்க்க அழைக்கப்படுகிறோம். அவர்கள் அவரை நோக்கிப்பார்த்து பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. இந்த ஏழை கூப்பிட்டான்; கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார் (சங்கீதம் 34:5,6) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும், பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று பரிசுத்தப் பிதாவாகிய நம் தேவனை நோக்கிக் கூப்பிடவே நமக்கு கற்றுத்தந்துள்ளார். மேலும் இயேசு: நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோவான் 14:13,14) என வாக்கருளியிருக்கிறார். எனவே, கிருபையின் நாட்களில் வாழும் நாம், பரலோகத்தில் வாசமாயிருக்கிற நம் பிதாவை நோக்கி, அவருடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே விண்ணப்பிக்கிறோம். அல்லேலூயா!

## நிந்தனை இகழ்ச்சியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபம்

நிந்தனையினாலும் இகழ்ச்சியினாலும் நிறைந்த வாழ்வில், தேவனாகிய கர்த்தரை நோக்கி கண்களை ஏறெடுத்து விண்ணப்பித்த வார்த்தைகள், நெருக்கத்தின் ஜெபமாக சங்கீதம் 123இல் தொகுக்கப்பட்டிருக்கிறது.

பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன். இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப் போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின்

கையை நோக்கியிருக்குமாப்போலவும், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும் வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது. எங்களுக்கு இரங்கும் கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்; நிந்தனையினால் மிகவும் நிறைந்திருக்கிறோம். சுகஜீவிகளுடைய நிந்தனையினாலும். அகங்காரிகளுடைய இகழ்ச்சியினாலும் எங்கள் ஆத்துமா மிகவும் நிறைந்திருக்கிறது (சங்கீதம் 123) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, சங்கீதம் 123இல் சங்கீதக்காரனின் வார்த்தைகள், அன்னாளின் வாழ்வின் நிலையை முற்றிலும் பிரதிபலிப்பதாக இருப்பதைக் காண்கிறோம். நம்முடைய வாழ்விலும் இவ்வகையான சிறுமையின் நாட்களில், நிந்தனைகள் இகழ்ச்சியினால் வாழ்வு நிறைந்து மனம் சோர்ந்த வேளைகளில், பரலோகத்தின் தேவனை இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே நோக்கிக் கூப்பிட்டு, நெருக்கங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட அழைக்கப்படுகிறோம்.

## விசுவாச தடுமாற்றம் – வேதனைக்கு ஆரம்பம்

மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுங்கூட, இவ்வகையான தடைகள் தாமதங்கள் நிந்தனைகள் இகழ்ச்சிகள் வாழ்வில் தோன்றும்போது, விசுவாசத்தில் தடுமாற்றமடைந்து, பரலோகத்தின் தேவனை இயேசுவின் மூலம் நோக்கிப் பார்ப்பதைத் தவிர்த்து, விசுவாசத்தைவிட்டு, வழுவிச் செல்லுகிறதைக் காண்கிறோம். சிலர் அதிக ஆர்வமுள்ள உற்றார் உறவினர் சுற்றத்தாரின் சொற்கேட்டு, அந்நிய தேவர்களையும் மாந்திரீகத்தையும் குறிசொல்லுபவர்களையும் “புனித ஸ்தலங்களையும்” அறியாது நாடித் தேடுகிறதையும் நாம் அறிவோம்.

அந்நிய தேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும் (சங்கீதம் 16:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. நாங்கள் எங்கள் தேவனுடைய நாமத்தை மறந்து, அந்நிய தேவனை நோக்கிக் கையெடுத்திருந்தோமானால், தேவன் அதை ஆராய்ந்து, விசாரியாதிருப்பாரோ? இருதயத்தின் அந்தரங்கங் களை அவர் அறிந்திருக்கிறாரே (சங்கீதம் 44:20,21) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய வாழ்வின் எல்லா நிலைகளிலும், நெருக்கங்களிலும் கர்த்தரையே நோக்கிப்பார்த்து இடுக்கண்களிலிருந்து விடுதலைப் பெறுவோம். அல்லேலூயா!



## கர்த்தருக்குப் பொருத்தனை

அன்னாள் கர்த்தரை நோக்கி விண்ணப்பித்தபோது, கர்த்தர் அவளை நினைந்தருளி ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்திப்படுவதில்லை என்று பொருத்தனைப் பண்ணினாள் (1 சாமுவேல் 1:11). கர்த்தரிடத்தில் கேட்ட விண்ணப்பத்தின்படி, கர்த்தர் அவளுக்கு பிள்ளையைக் கட்டளையிட்டபோது, கர்த்தருக்கே அவனை ஒப்புக்கொடுத்தாள். சாமுவேல் என்னும் அந்தப் பிள்ளையாண்டான் பெரியவனாக வளர்ந்து கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொண்டான் (1 சாமுவேல் 2:26).

அன்னாளின் இந்த பொருத்தனை, அவளுடைய உள்ளத்தின் ஆழத்தில் புதைந்திருந்த தீராத வாஞ்சையையும்; வாழ்வின் மிகுதியான விசாரத்தினின்றும், மனக்கிலேசத்தினின்றும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்தையும் வெளிப்படுத்துகிறது. கர்த்தர் அவளுடைய நிந்தனைகளிலிருந்து அவளை விடுவித்தார். அன்னாளும் தன்னுடைய பொருத்தனைகளைச் செலுத்தி தேவனை மகிமைப்படுத்தினாள். நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி; ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய் (சங்கீதம் 50:14,15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## பொருத்தனைகளைச் செலுத்த தாமதியாதே!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, கர்த்தருக்கு பொருத்தனைகளோடு நம் விண்ணப்பங்களைத் தெரியப்படுத்தும் போது, அதை நிறைவேற்றும் திராணியை முன்னதாகவே ஆராய்ந்தறியவும், ஏற்ற வேளைகளில் பொருத்தனைகளைச் செலுத்தி தேவனை மகிமைப்படுத்தவும் அழைக்கப்படுகிறோம். பொருத்தனை செய்த பின்பு யோசிப்பது மனுஷருக்குக் கண்ணியாயிருக்கும். நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால் அதைச் செலுத்தத் தாமதியாதே; அவர்

மூடரில் பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்து கொண்டதைச் செய் (பிரசங்கி 5:4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

நாம் வாஞ்சித்து வேண்டிய நற்காரியங்களை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட பின்னர், கர்த்தரிடத்தில் நாம் நேர்ந்துகொண்டதை செய்யாத பட்சத்தில், நாமே நமக்கு ஏற்படுத்திய கற்பனைகளை மீறுகிறவர்களாகவும், குறைவுள்ளவர் களாகவும் காணப்படுவோம். நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணியிருந்தால் அதைச் செலுத்த தாமதஞ் செய்யாதே; உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார்; அது உனக்கு பாவமாகும்; நீ பொருத்தனை பண்ணாதிருந்தால் உன் மேல் பாவம் இல்லை (உபாகமம் 23:21, 22) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனிமித்தமே, நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப்பார்க்கிலும், நேர்ந்து கொள்ளாமலிருப்பதே நலம் (பிரசங்கி 5:5) என்றும் எழுதப் பட்டிருக்கிறது.

## அன்னாள் தன் இருதயத்திலே பேசினாள்

சீலோவிலே கர்த்தருடைய ஆலயத்திற்குப் போய், கர்த்தருடைய சந்நிதியில் தனித்திருந்து அன்னாள் வெகுநேரம் விண்ணப்பம்பண்ணினாள். அன்னாள் தன் இருதயத்திலே பேசினாள்; அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது. அவள் சத்தமோ கேட்கப்படவில்லை (1 சாமுவேல் 1:13). அவள் தனித்து கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்திலே பேசினாள், ஆவியினாலே ஜெபம்பண்ணினாள்.

மனுஷர் காணும்படியாகவும் கேட்கும்படியாகவும் அல்ல, அறைவீட்டிற்குள் பிரவேசித்து கதவைப்பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற பிதாவை நோக்கி ஜெபம்பண்ண ஆலோசனைப் பெற்றிருக்கிறோம் (மத்தேயு 6:6). மூடனுடைய செவிகள் கேட்கப்பேசாதே; அவன் உன் வார்த்தைகளின் ஞானத்தை அசட்டைப்பண்ணுவான் (நீதிமொழிகள் 23:9) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. மூடராகிய மனுஷர் மாத்திரமல்லாமல், சத்துருவாகிய பிசாசானவனும், பலவேளைகளில் நாம் ஏறெடுக்கும் விண்ணப்பங்களில் அறியாமையினால் வெளிப்படுத்தும் அவிசுவாச வார்த்தைகளைக் கேட்டு, பிதாவாகிய தேவனை நிந்திப்பதற்கு இவை ஏதுவாக அமைகிறது.



தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், கர்த்தரிடத்திலிருந்து வாக்கைப் பெற்ற பின்னர், விசுவாசத்தில் உறுதியாய் பொறுமையோடு காத்திருந்து, வாஞ்சித்து விண்ணப்பித்த நன்மையான நற்காரியங்களை ஏற்றவேளையில் பெற்று தேவனை மகிமைப்படுத்த அழைக்கப்படுகிறோம். இதற்கு மாறாக, தடைகள் தாமதங்களைச் சந்திக்கும்போது, அறியாமல் அவிசுவாசமான வார்த்தைகளை ஜெபங்களில் மறுபடியும் மறுபடியும் அறிக்கை செய்யும்போது, தேவனை சந்தோஷப் படுத்தாமல், சத்துருவானவனுக்கு வாய்ப்பளிக்கிறோம்.

என் மகனே, என்னை நிந்திக்கிறவனுக்கு நான் உத்தரவு கொடுக்கத்தக்கதாக, நீ ஞானவானாகி என் இருதயத்தைச் சந்தோஷப்படுத்து (நீதிமொழிகள் 27:11) என்பதாக எழுதப்பட்டிருக்கிறது. ஞானவானாகி என்பது கர்த்தருக்கு பயந்து தீமையை வெறுப்பதைக் குறிக்கிறது. மனம் பதறி மாம்சீகத்தில் துணிகரமாய் ஏறெடுக்கப்படும் ஜெபங்களும், அவிசுவாசமான வார்த்தைகளும், தீமையே என்பதை அறிவோம்.

## பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்

தேவனுடைய பிள்ளைகளுடைய வாழ்வின் நெருக்கங்களில், பலவீனங்களில் பரிசுத்த ஆவியானவரே நமக்கு உதவிசெய்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல்: அந்தப்படியே, ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான் களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார் (ரோமர் 8:26, 27) என்று எழுதியிருக்கிறார்.

இதனிமித்தமே, மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், ஆவியினாலே ஜெபம்பண்ண ஆலோசனைப் பெற்றிருக்கிறோம். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல

பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள் (எபேசியர் 6:18) என்று எழுதியிருக்கிறார்.

தேவனுடைய கிருபைவரங்களைப் பெற்ற பிள்ளைகள், அந்நியபாஷையில் பேசும்போது தேவனிடத்தில் இரகசியங்களைப் பேசுகிறார்கள் (1 கொரிந்தியர் 14:2). இவ்வேளைகளில் மூடரான மனுஷரோ, சத்துருவாகிய பிசாசானவனோ, அதன் கருத்தை அறிந்து கொள்ளாதிருக்கிறார்கள். அதே வேளையில் ஆவியானவர் தாமே நமக்காக வேண்டுதல் செய்கிறவராகவும் இருக்கிறார். அல்லேலூயா!

## அறியாமையில் அவிசுவாச வார்த்தை

தேவமனிதரொருவர் தன் வழக்கம்போல் சென்னையின் புறநகர் பகுதியொன்றில் வாஞ்சையோடு ஜெபிக்கும் சில தேவனுடைய பிள்ளைகளோடு இணைந்து ஜெபிக்கச் சென்றிருந்தார். ஜெபவேளையில் அந்த மனிதருக்கு கர்த்தருடைய வார்த்தை ஒரு சகோதரர்மூலம் தெளிவாக வெளிப்பட்டது. அந்த மனிதருடைய எல்லா விண்ணப்பங்களையும் கர்த்தர் அறிந்திருப்பதையும், ஏற்றவேளையில் அவை எல்லாவற்றையும் கர்த்தரே செய்து முடிப்பார் எனவும் வார்த்தை வெளிப்பட்டது.

அவர் தன் விண்ணப்பங்களை மற்றவர்கள் எவருக்கும் தெரியப்படுத்தாவிட்டாலும், அவர் தனித்தும் குடும்பத்தோடும் மறுபடியும் மறுபடியும் ஜெபத்திலே அறியாது தன் அவிசுவாசத்தை வெளிப்படுத்துவதைக் கர்த்தர் சுட்டிக்காட்டினார். கர்த்தர் வேண்டியதை அருளிச்செய்யவிருந்தாலும், அவிசுவாசமான இந்த வார்த்தைகள், இடைப்பட்ட சொற்பக் காலத்தில், தேவனை சந்தோஷப்படுத்தாமல், சத்துருவானவனுக்கு வாய்ப்பளித்தது. தன் தவறை உணர்ந்து அறிக்கையிட்டு, தன் இருதயத்திலே கர்த்தரோடே பேசி, குடும்பமாக ஆவியினாலே ஜெபிக்க அர்ப்பணித்தபோதே தேவையில்லாத கட்டுகள் விலகியதை அந்த மனிதர் உணர்ந்து தேவனை மகிமைப்படுத்தினார். அல்லேலூயா!

## இருதயத்தை ஊற்றிவிட்டாள்

ஆசாரியனால் குடித்து வெறித்திருக்கிறாள் என அறியாது குற்றம் சாட்டப்பட்டபோதும், அன்னாள் அதைப் பொறுமையோடு சகித்து, நிதானமாய் தன் நிலையை எடுத்துரைத்தாள். அன்னாள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ; நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை; நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன் ( 1 சாமுவேல் 1:15) என்றாள்.



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில், தன் இருதயத்திலே பேசி, தன் இருதயத்தை ஊற்றிவிட்டாள். தன் இருதயத்தை அம்மட்டுமாக நிறைத்திருந்த விசாரத்தை கிலேசத்தை வேதனையை வியாகுலத்தை கர்த்தரிடத்தில் ஊற்றிவிட்டாள். வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்தேயு 11:28) என்று இயேசு நம்மை அழைக்கிறார். தேவனுடைய பிள்ளைகளாகிய நாமுங்கூட வாழ்வின் பாரங்களை சுமந்தலைந்து மனம் சோர்ந்துபோகாமல், கர்த்தரிடத்தில் நம்முடைய வேதனைகளை வெளிப்படுத்தி, பாரங்களை ஒப்படைத்து, இயேசு தரும் இளைப்பாறுதலை நிறைவாய் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

அன்னாள் கர்த்தருடைய சமுகத்தில் மிகுதியான விசாரத்தோடும் கிலேசத்தோடும் விண்ணப்பம்பண்ணி தன் இருதயத்தை ஊற்றிவிட்ட பின்னர், அவள் துக்கமுகமா யிருக்கவில்லை. மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் (1 சாமுவேல் 16:7) என்ற வார்த்தையின்படி தனிமையில் அந்தரங்கத்தில் கர்த்தருடைய சந்நிதியில் இருதயத்தில் பேசி ஆவியினால் விண்ணப்பிக்கும்போது, கர்த்தர் கேட்டு வெளியரங்கமாய் பதிலளிக்கிறார். கர்த்தரோ இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமா யிருக்கிறார் என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் (சங்கீதம் 51:17) என்று சங்கீதக்காரனும் சாட்சியாக எழுதி வைத்திருக்கிறார்.

கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் (சங்கீதம்

55:22) என்ற வார்த்தையின்படி, அன்னாள் கர்த்தரிடத்தில் தன் இருதயத்தை ஊற்றி, தன் மனப்பாரத்தை கர்த்தர்மேல் வைத்தபோது, கர்த்தர் அவளை ஆதரித்தார்; கர்த்தர் அன்னாளை நினைந்தருளினார். பின்னர், அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, அவனைக் கர்த்தரிடத்தில் கேட்டுப்பெற்றுக் கொண்டபடியினால் சாமுவேல் எனப்பேரிட்டாள். தன்னுடைய பொருத்தனையின்படியே அவனைக் கர்த்தருக்கே ஒப்புக் கொடுத்தாள். அல்லேலூயா!

### கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்போம்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய வாழ்வின் நெருக்கங்களில். அன்னாளைப் போன்றே ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்க அழைக்கப்படுகிறோம். பரலோகத்தில் வாசமாயிருக்கிற தேவனை நோக்கி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே விண்ணப்பித்து, நம்முடைய குறைவையெல்லாம். தேவன் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்க ஒப்புக்கொடுப்போம்.

கர்த்தருக்குச்செய்த பொருத்தனைகளை ஏற்றவேளையில் மறவாமல் நிறைவேற்றி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவோம். ஜெபம்பண்ணும்போது, கூடுமானால் மனுஷர்காணும்படியாக ஜெபம்பண்ணாமலும், அஞ்ஞானிகளைப் போல வீண்வார்த்தைகளை அலப்பாமலும், எந்தச்சமயத்திலும் ஆவியினாலே ஜெபம்பண்ண நம்மை ஒப்புக்கொடுப்போம்.

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் என்ற வார்த்தையின்படி நம்முடைய இருதயத்தை பலவேளைகளில் ஆக்கிரமித்து நிற்கும் கவலைகளையெல்லாம் கர்த்தரிடத்தில் ஊற்றி ஜெபம்பண்ண நம்மையே அர்ப்பணிப்போம். கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிற தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் அருளி கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. ஆமென். அல்லேலூயா!



## சங்கீதம் 123

பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே,
உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன்.

இதோ, வேலைக்காரரின் கண்கள்
தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போலவும்,
வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப்போலவும்,
எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும்வரைக்கும்,
எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது.

எங்களுக்கு இரங்கும் கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்;
நிந்தனையினால் மிகவும் நிறைந்திருக்கிறோம்.

சுகஜீவிகளுடைய நிந்தனையினாலும், அகங்காரிகளுடைய இகழ்ச்சியினாலும்,
எங்கள் ஆத்துமா மிகவும் நிறைந்திருக்கிறது.

### ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்!

# 8. நீ அசைக்கப்படுவதில்லை!

*உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.* (ஏசாயா 26:3,4)

*அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அசைக்கப்படுவதில்லை.* (சங்கீதம் 62:6)

ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்க ஆலோசனைப் பெற்றிருக்கிற நாம், பரலோகத்தில் வாசமாயிருக்கிற பிதாவாகிய தேவனை நோக்கி, அவருடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே விண்ணப்பிக்கிறோம். கர்த்தரை இவ்விதமாக எப்பொழுதும் நமக்கு முன்பாக வைத்திருக்கும்போது நாம் அசைக்கப் படுவதில்லை என சங்கீதம் 16இல் எழுதப்பட்டுள்ளது. 16ஆம் சங்கீதத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட இச்செய்தி, அடுத்த பொக்கிஷமாக இங்கு தொகுக்கப்பட்டுள்ளது.

## இயேசு நம்மோடு இருக்கும் போது ....

இயேசுகிறிஸ்து ஒருநாள் தமது சீஷரோடுக்கூட படவில் ஏறி கடலின் அக்கரைக்குச் சென்றபோது நடந்த சம்பவம் வேதாகமத்தில் லூக்கா 8:22-25இல் விவரிக்கப்பட்டுள்ளது. படவு ஓடுகையில் இயேசுகிறிஸ்து நித்திரையாயிருந்தார். அப்பொழுது கடலிலே சுழல் காற்றுண்டானதால், அவர்கள் மோசமடையத் தக்கதாய்ப் படவு தண்ணீரால் நிறைந்தது. படவு தள்ளாடினது, சீஷரும் அசைக்கப்பட்டார்கள். உடனே அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, ஐயரே மடிந்துபோகிறோம் என்று அவரை எழுப்பினார்கள். இயேசு எழுந்து காற்றை அதட்டி, கடலைப் பார்த்து; இரையாதே அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய் மிகுந்த அமைதல் உண்டாயிற்று (மாற்கு 4:39).



பின்னர் இயேசு அவர்களை நோக்கி: உங்கள் விசுவாசம் எங்கே என்றார். சீஷர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு: இவர் யாரோ, காற்றுக்கும் ஜலத்துக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்கு கீழ்ப்படிகிறதே என்று சீஷர்கள் ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள் (லூக்கா 8:25).

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பிரயாணத்தில், இயேசு அவர்களோடிருந்தபோதும், சுழல்காற்று வீசியது; மோசமடையத் தக்கதாய்ப் படவு தண்ணீரால் நிரம்பியது. அலைகள் படவின்மேல் மோதுகிறதைக் கண்டு சீஷர்கள் பயந்து ஐயரே, ஐயரே என்று அந்தச் சூழ்நிலையிலும் நித்திரையாயிருந்த, இயேசுவை எழுப்பினார்கள். இயேசுவோடிருக்கிற தேவனுடையப் பிள்ளைகள் வாழ்விலும், பணியிலும், ஊழியத்திலுங்கூட சுழல்காற்று வீசக்கூடும். வாழ்க்கைப் படவு மோசமடையத்தக்கதாய் தண்ணீராலும் நிரப்பப்படலாம். இவ்வகையான சூழ்நிலைகளில் நம்மில் அநேகர் கலங்கி தவிக்கிறோம். தேவனே என்னைக் காப்பாற்றும் என்று கர்த்தரை நோக்கி கதறுகிறோம். கர்த்தரும், கிருபையாய் நம் வாழ்வில் இடைப்பட்டு, நம்மை மீட்டெடுத்து, சூழ்நிலைகளை சீர்ப்படுத்தும்போது, நாம் கர்த்தர் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நினைவுகூர்ந்து அவருக்கு நன்றி செலுத்துகிறோம். அல்லேலூயா!

மறுபக்கம் பார்ப்போமேயானால், இயேசுகிறிஸ்துவின் அன்பை இன்னும் ருசித்திராத சிலர், வாழ்வில் ஏற்படும் இவ்வகையான நெருக்கமான சூழ்நிலைகளைத் தாங்கக்கூடாமல், தங்களையே மாய்த்துக் கொள்ளுகிறார்கள். சில வேளைகளில் இயேசு அவர்களோடு இல்லாததினிமித்தம், குடும்பத்தோடுங்கூட தங்களை அழித்துக்கொள்ள முற்படுகிறார்கள்.

## சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்!

நித்திரையாயிருந்த இயேசுவை சீஷர்கள் எழுப்பினபோது அவர் எழுந்து காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அப்பொழுது இயேசு சீஷர்களை நோக்கி: ஏன் இப்படி பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார் (மாற்கு 4:40).

தன்னுடைய வாழ்வின் நெருக்கத்தில் தேவமனிதர் ஒருவர் நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை இவ்விதமாக

அழைத்த சம்பவத்தை நன்றியோடு நினைவுகூர்ந்தார். நினையாத வேளையில் அந்த மனிதருக்கு விரோதமாக, பணபலமும், செல்வாக்கும் உடையவராக தன்னை பிரசித்திப்படுத்திக் கொண்டிருந்த ஒருவர் எழும்பினார். செய்வதறியாது திகைத்த நிலையில் அந்தச் சகோதரர் இயேசுவை நோக்கி கதறி ஜெபம்பண்ணினார். ஜெபம்பண்ணி எழுந்தபோது இயேசுவும் அவரோடுகூட அந்த ஜெபஅறையில் அம்மட்டும் அவரருகே யிருந்த இருக்கையில் அமர்ந்திருந்து எழுந்து சென்றதை உணர்ந்தார். அவ்வேளையில் அவர், இயேசுவினுடைய வஸ்திரத் தொங்கலைக்கண்டு கர்த்தருக்குள் பலப்பட்டார். சஞ்சலமும், தவிப்பும் மாறி அமைதல் உண்டாயிற்று. அல்லேலூயா!

பலவிதமான நெருக்கங்களுக்குட்பட்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகளின் வாழ்விலும், கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது அவர் பேரில் நமக்குண்டான விசுவாசத்தை தான். கலங்கி தவிக்கிற நம்மையும் கர்த்தர்: ஏன் இப்படி பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்கிறார்.

## நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாதிருங்கள்

இயேசு நம்மோடு இருக்கும்போதும், தேவனுடைய பிள்ளைகள் வாழ்விலும், நெருக்கங்களும், உபத்திரவங்களும், துன்பங்களும் வரும் என்று வேதம் தெளிவாக நம்மை எச்சரிக்கிறது. இயேசு: ... உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவான் 16:33). அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2 தீமோ. 3:12) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து நம்மோடு இல்லாமல் எந்த ஒரு காரியத்தையும் நம்மால் தனித்து செய்ய முடியாது என்ற உண்மையை உணர்ந்து உபத்திரவம் துன்பங்களுக்கு நடுவிலும் ஒன்றுக்கும் கவலைப்படாமல் தேவனுக்கு நம் தேவைகளை தெரியப்படுத்த அழைக்கப்படுகின்றோம். அப்பொழுது தேவசமாதானத்தையும் பாதுகாவலையும் நிறைவாய் நம் வாழ்வில் பெற்றுக்கொள்ளுவோம்.

கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான். மிகவும் அற்பமான காரியமுதலாய் உங்களால் செய்யக்கூடாதிருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன? (லூக்கா 12:25,26) என்று இயேசு சொல்லியிருக்கிறார். மேலும் பரிசுத்த பவுல்: நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலி. 4:6,7) என்று எழுதியிருக்கிறார்.



## கர்த்தரை எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்

தன்னுடைய வாழ்வின் நெருக்கத்திலே தேவனே என்னைக் காப்பாற்றும் (சங்கீதம் 16:1) என்று கூப்பிட்டபோது, கர்த்தரை எப்பொழுதும் தனக்கு முன்பாக வைத்திருக்கும்படியான ஆலோசனையை தாவீது பெற்றார். எனக்கு ஆலோசனைத் தந்த கர்த்தரைத் துதிப்பேன்; இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும் (சங்கீதம் 16:7) என்று எழுதி வைத்திருக்கிறார்.

ஆதலால் தான் அசைக்கப்படுவதில்லை, வாழ்வில் தள்ளாடுவதில்லை என்ற நிச்சயத்தையும் பெற்றார். இதையே சங்கீதம் 16:8இல் சங்கீதக்காரன் கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை என்கிறார். வாழ்வின் நெருக்கம் சஞ்சலம் தவிப்பிலிருந்து தேவனே என்னைக் காப்பாற்றும் என்று விண்ணபித்த தாவீதின் இருதயம் பூரித்தது, மகிமை களிகூர்ந்தது, மாம்சம் நம்பிக்கையடைந்தது (சங்கீதம் 16:9). கைவிடப்பட்ட நம்பிக்கையற்ற சூழ்நிலை மாற்றப்பட்டு நம்பிக்கையும் பூரிப்பும் களிகூருதலும் வெளிப்படுகிறது.

தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும். அவரே என் கன்மலையும் என் இரட்சிப்பும் என் உயர்ந்த அடைக்கலமுமானவர் நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை (சங்கீதம் 62:1,2,5,6) என்றும் தாவீது எழுதி வைத்திருக்கிறார். கர்த்தரின் பிரசன்னத்தில் எப்பொழுதும் இருக்க வாஞ்சிக்கிறவன், தேவனை நோக்கி அமர்ந்திருக்கிறவன்,

கர்த்தரை எப்பொழுதும் தனக்கு முன்பாக வைத்திருக்கிறவன் அசைக்கப்படுவதில்லை.

## நான் அசைக்கப்படுவதில்லை

கம்ப்யூட்டர் துறையில் உயர்நிலையில் பணியாற்றிய சகோதரர் ஒருவர் வாழ்வில் 2007ஆம் ஆண்டு நடந்த சம்பவம் இதை விளக்கிக்காட்டுகிறது. அந்நாட்களில் கம்ப்யூட்டர் துறையில் வேலை நிரந்தரமற்ற சூழ்நிலை இருந்தது. இதனிமித்தம் உயர்பதவியில் இருப்பவர்கள் நிர்வாகத்திற்கு தேவைப்படா விட்டால், அவர்கள் பணியிலிருந்து ஒரே நாளில் நீக்கப்படும் பழக்கம் அதிகமாக இருந்தது. அந்த சகோதரருக்கு அந்நாட்களில் அவர் செய்யும்படியான வேலையேதும் சில மாதங்கள் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இவரும் அந்த வெள்ளிக்கிழமை வீட்டிற்கு அனுப்பும் பட்டியலில் இருப்பதாக ஒரு சிலர் அவருடைய அறைக்கு வந்து சொல்லி கேலி செய்தனர்.

தேவனை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவர். கர்த்தரை எப்பொழுதும் தனக்கு முன்பாக வைத்திருக்க வாஞ்சையுள்ள அவர் கலங்கி, சூழ்நிலைகளினிமித்தம் அதை எதிர்நோக்கி, தன்னுடைய அறையிலிருந்த தன் பொருட்களை ஆயத்தப்படுத்தினார். இடைப்பட்ட நேரத்தில் அறிமுகமான ஊழியரோடு தொலைபேசியில் ஜெபித்தபோது கர்த்தருடைய வார்த்தை சங்கீதம் 16:8 மூலம் வெளிப்பட்டது.

எதிர்பார்த்தபடியே அந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் உயர் அதிகாரிகளைச் சந்திக்க அழைப்பைப் பெற்றார். அவர்களைச் சந்தித்தபோது, பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு மாறாக, எந்தத் துறையினர் இவ்வகையான மனிதவள செயல்பாடுகளைக்குறித்து முடிவெடுப்பார்களோ அதே துறையில் பொறுப்பான பதவியில் நியமிக்கப்பட்டார்; அல்லேலூயா! அந்நாளிலேயே புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது அவரைக் கேலி செய்தவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டதைக் கண்டு திகைத்து நின்றார்.

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை (சங்கீதம் 16:8). கைவிடப்பட்ட நம்பிக்கையற்ற சூழ்நிலை மாற்றப்பட்டு நான் அசைக்கப்படுவதில்லை என்ற கர்த்தருடைய வார்த்தை வெளிப்பட்டு, பூரிப்பும் களிகூருதலும் உண்டானது. இது எவ்வாறு நடந்தது? கர்த்தரை எப்பொழுதும் தனக்கு முன்பாக வைத்திருக்க ஆலோசனைப்பெற்று அதன்படி செய்ததால் நடந்தது. அப்படியானால், கர்த்தரை நமக்கு முன்பாக வைப்பது எப்படி? இதையும் தாவீது சங்கீதம் 16:1-4 வசனங்களில் ஆலோசனைகளாக நமக்கு எழுதி வைத்திருக்கிறார்.



## கர்த்தரையே நம்பியிருக்கிறேன்

நம்முடைய வாழ்வின் நெருக்கங்களிலே கர்த்தரையே நம்பி ஜீவிக்க அழைக்கப்படுகிறோம். சங்கீதம் 16 முதல் வசனத்திலேயே தாவீது தேவனே என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பியிருக்கிறேன் என்று அறிக்கையிடுகிறார். கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான் (நீதி. 29:25). கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் (நீதி. 28:25). கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான் (நீதி. 16:20) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்கிறவன், கர்த்தரை நம்பியிருக்கிறவன், கன்மலையின் மேல் தன் வீட்டைக்கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடப்படுகிறான் (மத்தேயு 7:24,25). சுழல்காற்று வீசினபோது - பெருமழை சொரிந்து பெருவெள்ளம் வந்து காற்று அடித்து அந்த வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை - அந்த வீடு அசைக்கப்படவில்லை. அல்லேலூயா!

கர்த்தரை நம்புகிறவன் உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப் படுவான், அவன் வாழ்வு செழிக்கும்; அவன் ஆசீர்வதிக்கப்பட்டவன். எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிற படியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன் (சங்கீதம் 91:9-11,14) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## நாம் பாதுகாப்பில் அசைக்கப்படுவதில்லை

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே கர்த்தரை நம்புகிற உன் வாழ்வின் பாதுகாப்பில் நீ

அசைக்கப்படுவதில்லை. பொல்லாப்பு நேரிடாது, வாதை அணுகாது, கொள்ளை நோய்க்கும் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படா திருப்பாய். கர்த்தரால் தந்தருளப்படும் உயர்ந்த அடைக்கலம், எல்லா தீங்கினின்றும் அழிவிலிருந்தும் பாதுகாவலை நமக்குத் தருகிறது. உன் வாழ்வு செழிக்கும். ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

உலகரீதியாக காணப்படுகிற பாதுகாவல் குறைவுள்ளது என்பதை நாம் அறிவோம். சிறப்புப்படை காவலாளியாலேயே சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டின் தலைவரை நாம் அறிவோம். கர்த்தரை நம்பியிருக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு கர்த்தர் அருளும் உயர்ந்த அடைக்கலத்தை மீறி எந்த சக்தியும் நம்மை சேதப்படுத்த முடியாது.

தேவமனிதர் ஒருவர் பலம்படைத்த சில மனிதரின் அச்சுறுத்தலால் கலங்கி தேவனுடைய சன்னிதானத்தில் ஜெபித்த போது, கர்த்தர் ஒரு நொடி அவருடைய ஆவிக்குரிய கண்களைத் திறந்தார். மிகவும் உயரமும் உன்னதமுமான தேவதூதன் ஒருவர் அவருடைய வலதுபக்கத்தில் பட்டயத்தில் தன் வலதுகையை வைத்து நிற்பதைக் கண்டார். கண்டமாத்திரத்தில் அவருடைய கலக்கம் நீங்கினது. எதிர்நோக்கியிருந்த அச்சுறுத்தல் மறைந்தது; பின்னர் போராடினவர்களைத் தேடியும் காணவில்லை. அல்லேலூயா! கர்த்தரை நம்புகிறவர்கள் பாதுகாப்பில் அசைக்கப்படுவதில்லை.

## ஆஸ்தியினால் தேவனுக்கு ஊழியம்

கர்த்தரை எப்பொழுதும் நமக்கு முன்பாக வைத்திருக்க நாம் கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதமாக பெற்றிருக்கும் ஆஸ்தியினால், செல்வத்தினால், தாலந்துகளினால் தேவனுக்கு ஊழியஞ்செய்ய வேண்டும் என்ற ஆலோசனையை தாவீது தருகிறார், என் நெஞ்சமே, நீ கர்த்தரை நோக்கி: தேவரீர் என் ஆண்டவரா யிருக்கிறீர், என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல்; பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும் நான் என் முழு பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும், அது வேண்டியதாயிருக்கிறது என்று சொன்னாய் (சங்கீதம் 16:2,3) என்று தாவீது சொல்லியிருக்கிறார்.

நம்முடைய செல்வம் கர்த்தருக்கு வேண்டியதில்லை என்று எழுதப்பட்டிருக்கிறது. சகலமும் தேவனுடையது - பூமியும் அதின் நிறைவும் தேவனுடையவைகளே என்று சொல்லப்பட்டிருக்கிறது (சங்கீதம் 50:8-12). ஆனாலும் பாருங்கள், ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் (நீதி 19:17) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் நாம் இரங்கி உதவி செய்வது கர்த்தருக்கே செய்கிறதாக எண்ணப்படுகிறது. அல்லேலூயா!



இதைப்போன்று பூமியிலுள்ள பரிசுத்தவான்களையும், ஊழியர்களையும், ஊழியங்களையும் தேவனுடைய சித்தத்திற்குட்பட்டு, நம்முடைய உதாரத்துவ காணிக்கைகளால் தாங்கும்போது கர்த்தருக்கே இதைச் செய்கிறவர்களாக இருப்போம். லூக்கா 8:3இல் தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்து கொண்டிருந்த பெண்களைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, கர்த்தரிடத்திலிருந்து நாம் பெற்றிருக்கிற ஆசீர்வாதங்களினால், ஆஸ்தியினால் செல்வத்தினால் தாலந்துகளினால் நேரத்தினாலுங்கூட கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய அழைப்பைப் பெற்றிருக்கிறோம்.

## நாம் பொருளாதாரத்தில் அசைக்கப்படுவதில்லை

நம்முடைய பொருளாதாரத்தில் அசைக்கப்படாதிருக்க வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற ஆலோசனைகளைப் பின்பற்றி நடக்க அழைக்கப்படுகிறோம். பழைய பிரமாணத்தின் நாட்களில் கொடுக்கப்பட்ட ஆலோசனை தசமபாகம். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசம பாகங்களை யெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ என்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல்கியா 3:10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டு காலங்களில், ஆதித்திருச்சபையில், காணிக்கையை தசமபாகம் என்று கட்டுப்படுத்தாமல், உற்சாகமாக கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்று தங்களால் இயன்றதைக் கொடுக்க ஊக்குவிக்கப்பட்டனர். சிறுக

விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தப்படியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரி. 9:6,7) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. தங்கள் பரிபூரணத்திலிருந்து காணிக்கைப் போட்டவர்களைப் பார்க்கிலும், இரண்டு காசு என்றாலும் தனக்கு உள்ளதைக் காணிக்கையாக செலுத்திய ஏழை விதவை இயேசுவின் நன்மதிப்பைப் பெற்றதை (லூக்கா 21:1-4) வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

நாம் பொருளாதாரத்தில் அசைக்கப்படாதிருக்க பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும் மகாத்துமாக்களுக்கும் நம்மால் இயன்ற உதவிகளை உற்சாகமாகச் செய்ய வேண்டும் என்பது ஆலோசனை. அநேக தேவனுடைய ஊழியர்களுங்கூட இதில் தவறி, வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்பினை பயன்படுத்தி ஆசீர்வதிக்கப்படாமல், எளிய ஆலோசனைகளையும் கைக்கொள்ளாமல் குறைவுபட்டிருக்கிறதைக் காண்கிறோம்.

பல வருடங்களுக்கு முன்னர் சகோதரர் ஒருவருடைய குடும்பம் தேவனுடைய வார்த்தைகளால் உணர்த்தப்பட்டபோது தேவனுடைய இராஜ்யத்திற்கடுத்த காரியங்களுக்கும் திருச்சபைக்கும் ஜெபித்து தேவனுடைய சித்தத்திற்குட்பட்டு உதாரத்துவமாக கொடுக்க ஆரம்பித்தார்கள். குடும்பத்திலே கூடுதலான ஆசீர்வாதத்தையும் பாதுகாவலையும் காண முடிந்தது. ஒரு சில வருடங்களில் சகோதரர் வருமானம் பத்து மடங்கு உயர்ந்தது. மிகவும் ஆச்சரியப்படும் வண்ணமாக அடுத்த சில மாதங்களில், உலகளவில் ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தினால் வருமானம் நமது நாட்டில் இருபது மடங்காக அதிகரித்தது அல்லேலுயா!

ஊழியர்களானாலும், விசுவாசிகளானாலும் நம்மால் இயன்றதை உற்சாகமாக தேவனுடைய இராஜ்யத்திற்கடுத்த பணிகளுக்கு தேவசித்தத்தின்படி கொடுத்து மகிழ ஆசீர்வதிக்கப்பட, பொருளாதாரத்தில் அசைக்கப்படாதிருக்க அழைக்கப்படுகிறோம்.

## அந்நிய தேவனை விட்டுவிலகுவேன்

கர்த்தரை எப்பொழுதும் நமக்கு முன்பாக வைத்து அசைக்கப்படாதிருக்க மூன்றாவதாக, அந்நிய தேவனுக்குரிய



எல்லாக் காரியங்களிலிருந்தும் விட்டு விலக ஆலோசனைப் பெற்றிருக்கிறோம். அந்நிய தேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும் அவர்கள் செலுத்துகிற இரத்த பானபலிகளை நான் செலுத்தமாட்டேன்; அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன் (சங்கீதம் 16:4) என்று தாவீது அறிக்கையிடுகிறார்.

இதை வாசிக்கிற நம்மில் அநேகர், அந்நிய தேவனை நாங்கள் நாடிப் பின்பற்றுவதில்லை என்று சொல்ல வாய்ப்பிருக்கிறது; மிகவும் நல்லது. கிறிஸ்துவையறிந்து தங்கள் வாழ்வை அவருக்கே ஒப்புக்கொடுத்திருக்கிற குடும்பத்தினர்கூட வாழ்வின் நெருக்கங்களில், அறியாது இவ்விதமாக செயல்படும்போது வேதனைகள் பெருகுமென்று வேதாகமம் எச்சரிக்கிறது. இயேசுகிறிஸ்துவை அல்லாமல் நாம் மீட்கப்படுவதற்கு, பாதுகாக்கப்பட வேறே எந்த நாமமோ வழியோ நமக்கு கொடுக்கப்படவில்லை.

பரம்பரை கிறிஸ்தவ குடும்பத்தில்கூட இவ்வகையான கண்ணிகளுக்குட்பட்டு, பொருத்தனை என்று மொட்டையடிப்பதிலும் இன்னும் தங்கள் பிரயாசத்தின் பலனை தெய்வமல்லாதவைகளுக்குச் செலுத்தியும் வேதனைக்குட்படுகிறார்கள். படித்த உயர் அதிகாரியொருவர், வாலிப பிராயத்திலேயே இரட்சிக்கப்பட்டவர், தன் மனைவிக்கு ஏற்பட்ட கருச்சிதைவினிமித்தமும், தொடர்ந்து குழந்தை பிறப்பதில் ஏற்பட்ட தாமதத்தினிமித்தமும் சோரம்போனார். மனைவியின் குடும்பத்தினர் மற்றும் நண்பர் ஆலோசனையைக் கேட்டு மலைகளுக்கு சென்று வந்தாராம். திருச்சபையாகச் சென்று விளையாடி மகிழ மற்ற இடங்களில்லை என்று அறியாமையினிமித்தம் தீட்டான ஸ்தலங்களுக்குச் சென்று “மாதிரியாகச்” செயல்படுகிறவர்களுமுண்டு. கவனமாக செயல்பட அழைக்கப்படுகிறோம்.

## நாம் அசுத்த ஆவிகளால் அசைக்கப்படுவதில்லை

ஆவிக்குரிய நிலையில், அசுத்த ஆவிகளின் கிரியைகளால் நாம் அசைக்கப்படாதிருக்க, அந்நிய தேவர்களை நாடித் தேடாமலும், அவர்கள் செலுத்துகிற இரத்தபான பலிகளை செலுத்தாமலும் இருக்க ஆலோசனைப் பெற்றிருக்கிறோம். இன்னும் ஜீவனுள்ள

தேவன்பேரில் தனக்குள்ள வைராக்கியத்தையும், பற்றுறுதியையும் வெளிப்படுத்தும் வண்ணமாக, தாவீது அந்நிய தேவர்களின் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன் என்று சொல்லுகிறதையும் பார்க்கிறோம்.

நம்முடைய பிரயாசத்தின் பலன், நம்முடைய இடம் மற்றும் உடமைகள், அந்நிய தேவர்களின் காரியங்களுக்கு எந்த நிலையில் உபயோகப்பட்டாலும் இதனிமித்தம் அசுத்த ஆவிகள் நம்மேல் சொந்தம் கொண்டாடும். இதனிமித்தம் காரணமில்லாத சேதங்களும், வேதனைகளும் நம் வாழ்வில் உண்டாகிறது. அன்னதானம், தர்மம் என்றும், பொதுவான காரியங்கள் என்ற போர்வையிலுங்கூட செயல்படும் அந்நிய தேவர்களின் காரியங்களில் நாம் எவ்வளவேனும் பங்கேற்காதபடி கவனமாக இருப்போம். நம் வீட்டிலுள்ள மரம் செடி கொடிகளின் கனிகளும், பூக்களும், இலைகளுங்கூட நம்மையறியாமலும் மற்றவர்களால் பறிக்கப்பட்டு இவ்வகையாக பயன்படுத்தப்படும்போதும் பாதிப்புகளுக்குட்படுகிறோம்.

## உன் இருதயம் பூரிக்கும் மகிமை களிகூரும்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, உன் வாழ்விலும் இப்பொழுது காணப்படும் நெருக்கங்கள், வேதனைகள் நிமித்தம் தேவனே என்னைக் காப்பாற்றும் என்று ஒருவேளை உன் உள்ளத்திலே நீ கதறிக்கொண்டிருக்கலாம். நீயும்கூட இந்நாளில் தாவீதுக்கு அருளப்பட்ட ஆலோசனையை ஏற்று கர்த்தரை எப்பொழுதும் உனக்கு முன்பாக வைத்திருந்தால், நீ அசைக்கப்படுவதில்லை, உன் பாதுகாவல் அசைக்கப்படுவதில்லை; பொருளாதாரம் அசைக்கப்படுவதில்லை; அசுத்த ஆவிகளின் கிரியைகளினால் நீ அசைக்கப்படுவதில்லை.

உன் நெருக்கம் மாற்றப்பட்டு இருதயம் பூரிப்பாகும், உன் மகிமை களிகூரும், உன் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். கர்த்தர்தாமே அப்பேர்ப்பட்ட கிருபைகளை நம் ஒவ்வொருவருக்கும் நிறைவாகத் தந்தருள்வாராக! ஆமென். அல்லேலூயா!



# சங்கீதம் 16

தேவனே, என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பியிருக்கிறேன்.

என் நெஞ்சமே, நீ கர்த்தரை நோக்கி: தேவரீர் என் ஆண்டவராயிருக்கிறீர்,
என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல், பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும்,
நான் என் முழுப் பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும்,
அது வேண்டியதாயிருக்கிறது என்று சொன்னாய்.

அந்நிய தேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும்;
அவர்கள் செலுத்துகிற இரத்த பானபலிகளை நான் செலுத்தமாட்டேன்,
அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன்.

கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்;
என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர்.
நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது;
ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு.

எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்;
இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும்.
கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்;
அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.

ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது;
என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்.
என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்;
உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்.

ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்;
உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும்,
உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

## நீ அசைக்கப்படுவதில்லை!

# 9. இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகள்!

*நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள். அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று சொன்னான். பின்பு மோசே யோசுவாவை அழைத்து, இஸ்ரவேலர் எல்லாரும் பார்த்திருக்க, அவனை நோக்கி: பலங்கொண்டு திடமனதாயிரு; ... கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.* (உபாகமம் 31:6-8)

சங்கீதங்களின் புத்தகத்தில் 56ஆம் சங்கீதத்தைச் சார்ந்த இச்செய்தி, **ஒளிப்பிடத்தில் இருக்கும் புதையல்கள்** என்கிற இந்தப் புத்தகத்தில், ஒன்பதாவது பொக்கிஷமாக தொகுக்கப்பட்டுள்ளது. நீங்கள் விசேஷித்தவர்கள், தேவனால் மறக்கப்படுவதில்லை; ஆகையால், பயப்படாதிருங்கள் என்ற கர்த்தருடைய வார்த்தைகளை, பயத்தினால் பாதிக்கப்பட்டோரை எவ்விதத்தில் கர்த்தர் தப்புவித்தார் என்ற சாட்சியோடு, இந்தச் செய்தி விளக்குகிறது.

## நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்!

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட தேவ ஜனம், மனந்திரும்பி பாவங்களை அறிக்கையிட்டு, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்படுகிறார்கள். இவர்கள் எதிர்பாராத சூழ்நிலைகளாலும் மனிதர்களாலும் நெருக்கங்களுக்கு உட்படும்போது, பயமுற்று கலங்கித் தவிக்கிறார்கள்.

தேவனுடைய பிள்ளைகள் வாழ்வில் பயம் என்பது, கர்த்தரிலும் அவருடைய வாக்குத்தத்தங்களிலும் உள்ள



விசுவாசமற்ற நிலையை, அவிசுவாசத்தைக் காட்டுகிறது. கர்த்தரையும் அவரது வார்த்தையையும் நம்பாது, விசுவாசத்திற்கு நேர் எதிராக செயல்படும் பாவநிலையே பயம்.

இயேசுகிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசம், கர்த்தரிலும் அவருடைய மகிமையிலும் வல்லமையிலும் வார்த்தையிலும் உள்ள நம்பிக்கையாக இருந்து, வாழ்வில் எல்லாவிதமான பயங்களையும் நீக்குகிறது. இயேசுகிறிஸ்துவை நாம் விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்கும்போது, மனுஷராலும் சூழ்நிலைகளாலும் உண்டாகும் பயம் நம்மைப் பற்றிப்பிடிக்காதபடி அவர் நம்மை பாதுகாக்கிறார்; தைரியத்தை அளித்து பயத்திலிருந்து நம்மை விடுவிக்கிறார். அல்லேலூயா! இயேசுவை நோக்கிப் பார்க்கிற தேவ ஜனம், வாழ்வின் பயங்களிலிருந்து மாத்திரமல்ல, அதன் விளைவான ஆத்தும மரணத்திலிருந்தும், இரண்டாம் மரணமாகிய அக்கினிக் கடலிலிருந்தும் தப்புவிக்கப்படுகிறார்கள்.

விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே (ரோமர் 14 : 23) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தின்படி சிந்திப்போமேயானால், அவிசுவாசத்தினால் மனுஷரில் தோன்றும் பயங்களும் பாவமே. இதனிமித்தமே, பயப்படுகிறவர்களும் அவிசுவாசிகளும் பொய்யரும் இன்னும் பல கொடிய பாவமான செயல்களை வாழ்வில் நடப்பிக்கிற அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி 21 :8) என்று வேதாகமம் நம்மை எச்சரிக்கிறது. கர்த்தரிலும் அவருடைய வார்த்தையிலும் விசுவாசமுள்ளவனாயிரு; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்.

## பயப்படாதே விசுவாசமுள்ளவனாயிரு!

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மைப் போன்று இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில், இயேசுவும் சீஷர்களும் படவிலே அக்கரைக்கு போனார்கள். போகையில் கடலிலே சுழல் காற்று உண்டானதால், அவர்கள் மோசமடையத்தக்கதாய்ப் படவு நீரினால் நிறைந்தது என்று வாசிக்கிறோம். நித்திரையாயிருந்த இயேசுவை சீஷர்கள் எழுப்பி; ஆண்டவரே எங்களை இரட்சியும், மடிந்து போகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி, எழுந்து,

காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று (மத்தேயு 8:26).

அற்ப விசுவாசம், அவிசுவாசம் கடலில் பெருங்காற்று உண்டானபோது சீஷர்களிடையே பயத்தை உண்டாக்கினது. இயேசு அவர்களை நோக்கி: உங்கள் விசுவாசம் எங்கே என்றார். கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, கர்த்தரை உறுதியாக பற்றிக்கொண்டு, கர்த்தர்பேரிலுள்ள விசுவாசத்தை நாம் கிரியைகளில் வெளிப்படுத்தும்போது, அற்புதங்களையும் அடையாளங்களையும் நம்முடைய வாழ்வில் காண்கிறோம்; பயமும் நீங்கிப்போகிறது.

மலைபோன்ற பிரச்சனைகள், வேலையின் சிக்கல்கள், பொருளாதார பின்னடைவுகள், உறவில் பாதிப்புகள், சரீர பலவீனங்கள் சுகவீனங்கள் எதுவாக இருந்தாலும், விசுவாசத்தோடு கர்த்தரைத் தேடும்போது அவர் நமக்கு செவிகொடுத்து, நம்முடைய எல்லாப் பயத்துக்கும் நம்மை நீங்கலாக்கிவிடுகிறார். அல்லேலூயா!

இயேசுகிறிஸ்துவின் வாழ்வில் மற்றொரு வேளையில், ஜெப ஆலயத்தலைவரில் ஒருவனாகிய யவீரு என்பவன் இயேசுவைக் கண்டவுடன் அவர் பாதத்தில் விழுந்து தன் மகளை சுகப்படுத்தும்படியாக வேண்டினான். என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள். அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து, அவள் மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று வேண்டிக்கொண்டான் (மாற்கு 5 : 22,23). இயேசு அவனோடேகூடப்போனார். போகையில் யவீருவின் வீட்டிலிருந்த சிலர் வந்து: உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள்; இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகிறீர் என்றார்கள். இதை இயேசு கேட்டவுடனே: பயப்படாதே விசுவாசமுள்ளவனாயிரு என்றார். பிள்ளையின் கையைப் பிடித்து தலீத்தா கூமி என்று சொல்லி அந்த சிறு பெண்ணை நித்திரையிலிருந்து எழுப்பும்வண்ணமாக உயிரோடே எழுப்பினார். அவர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டு பிரமித்தார்கள்.

## கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்

இயற்கையின் சீற்றத்தால், சூழ்நிலைகளால் ஏற்பட்ட பயத்தை, இயேசுவை நோக்கிக் கூப்பிட்டபோது அவர் நீக்கினார். காற்றையும் கடலையும் அதட்டி அமைதலுண்டாகச்செய்து, சீஷர்களின் பயத்தைப் போக்கினார். சரீர பலவீனங்கள் சுகவீனங்களால் உண்டான வேதனையை பயத்தை, விசுவாசத்தோடு இயேசுவை நோக்கி பார்த்தபோது, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டபோது நீக்கிப்போட்டார் (மத்தேயு 9 : 22).



சாறிபாத் ஊர் விதவைக்கு எலியா தீர்க்கனின் மூலம் பஞ்சகாலத்திலும் பயமின்றி வாழ வகைசெய்த தேவன், நம்முடைய வாழ்வின் குறைவிலும் வறுமையிலும் இல்லாமையிலும் தேவைகளைச் சந்தித்து, பயத்தை நீக்கி பரவசப்படுத்துவார் (1 ராஜா 17 : 13). எதிராளிகள் விரோதமாக எழும்பி நம்மை சூழ்ந்து நிற்கும் வேளைகளிலும், அவர்களோடிருப் பவர்களைப்பார்க்கிலும், நம்மோடிருப்பவர்கள் அதிகம் என்று உணர்த்தி பயத்தை நீக்குவார்; தப்புவிப்பார் (2 ராஜா 6:18). தாவீதும், கர்த்தர் அவரோடே கூட இருந்து தேற்றினதினாலே, தான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் (சங்கீதம் 23 :4) என்று எழுதி வைத்திருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, நீயும் ஒருவேளை வாழ்வின் பலவிதமான நெருக்கங்களினால் கலங்கி தவித்து பயத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கலாம். பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு! உன்னுடைய வாழ்விலும், நீ மிகுந்த ஆச்சரியப்பட்டு பிரமிக்கும்படியான பெரிய காரியங்களைக் கர்த்தர் செய்வார். காற்றையும் கடலையும் அதட்டி சீஷரின் பயத்தை நீக்கிய தேவன் உன்னோடும் இருக்கிறார். யவீருவின் குமாரத்தியை உயிர்பெறச் செய்த இயேசு, உனக்கும் உன்னுடைய பலவீன சுகவீன வேளைகளில், அப்படியே செய்து, நீ பயப்படும் காரியம் உனக்கு வந்து நேரிடாது காத்துக்கொள்வார். அல்லேலூயா!

## பயப்படாதிருங்கள் நீங்கள் விசேஷித்தவர்கள்!

கிறிஸ்து இயேசுவுக்குள்ளான நம்முடைய வாழ்வு வளம்பெற, நாம் பயமின்றி இவ்வுலகில் வாழ்ந்து பூரண இரட்சிப்படைந்து நித்தியஜீவனில் நிறைவு பெற, நம் ஒவ்வொருவரையும் கர்த்தர் எவ்வளவாக நேசிக்கிறார் என்பதையும், நாம் எவ்வளவாக கர்த்தருக்கு அருமையானவர்கள், விசேஷித்தவர்கள் என்ற உண்மையையும் எப்பொழுதும்

நினைவிற்கொள்ள அழைக்கப்படுகிறோம். இதை உள்ளத்தில் விசுவாசிக்கிற நாம் கிறிஸ்துவின் அன்பை வாழ்வின் ஒவ்வொரு வேளையிலும் உணர்ந்து, இதைக் கிரியைகளில் வெளிப்படுத்துகிறவர்களாக செயல்பட நம்மை அர்ப்பணிப்போம்.

நம்முடைய தேவனாகிய கர்த்தர், எந்த நிலையிலும் நம்மை மறவாமல், நம்முடைய அற்பமான சிறு தேவைகளிலுங்கூட மிகுந்த கவனம் செலுத்தி, தம்முடைய அன்பை அனுதினமும் நமக்கு வெளிப்படுத்துகிறார். நீ என் தாசன்; இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை (ஏசாயா 44 : 21) என்றும்; ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை (ஏசாயா 49 : 15,16) என்றும் கர்த்தர் சொல்லுகிறார். என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார் (சங்கீதம் 27:10) என்று தாவீதும் எழுதி வைத்திருக்கிறார். பயப்படாதிருங்கள், நீங்கள் விசேஷித்தவர்கள் !

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்மை என்றும் மறவாத, எப்பொழுதும் கைவிடாத, அதிகமாக நேசிக்கிற கர்த்தருக்குப் பயந்திருங்கள். கர்த்தருக்கு பயப்படுதல் ஆயுசு நாட்களைப் பெருகப்பண்ணும் (நீதி. 10:27); கர்த்தருக்கு பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும் (நீதி. 15 : 33); தாழ்மைக்கும் கர்த்தருக்கு பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம் (நீதி. 22 :4) என்று எழுதப்பட்டிருக்கிறது. அதே நிலையில் மனுஷருக்கும் சூழ்நிலைகளுக்கும் பயப்படாதிருங்கள். மனுஷருக்கு பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும் (நீதி. 29 : 25), பொல்லாப்பிற்குட்படுத்தும்.

## நீ என்னால் மறக்கப்படுவதில்லை!

இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக ஊழியத்தின் நாட்களில் ஓர்நாள், அநேகமாயிரம் ஜனங்கள் ஒருவரையொருவர் மிதிக்கத்தக்கதாக கூடி வந்திருந்தார்கள். முதலாவது இயேசு தம்முடைய சீஷர்களுக்கு உபதேசிக்கையில், தேவனாகிய கர்த்தர் எவ்வளவாக நம்மை நேசிக்கிறார் என்பதையும், நம்மை அவர் மறப்பதில்லை என்பதையும், நாம் அவருக்கு மிகவும் அருமையானவர்கள், விசேஷித்தவர்கள் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தார்.



இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகள் விற்கிறார்கள் அல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுவதில்லை. உங்கள் தலையிலுள்ள முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாய் இருக்கிறீர்கள் (லூக்கா 12 : 6,7) என்று இயேசு அவர்களுக்குச் சொன்னார்.

அந்நாட்களில் அடைக்கலான் குருவிகள் எளிய மக்களின் உணவாகப் பயன்பட்டது. இந்தக் குருவிகள் மிகவும் மலிவான விலைக்கு சந்தை வெளிகளில் விற்கப்பட்டது. ஒரு காசுக்கு இரண்டு குருவிகள்; இரண்டு காசுக்கு வாங்குவோருக்கு நான்கு குருவிகளோடு இலவசமாக விலையில்லாமல் ஒரு குருவியும் கொடுப்பார்களாம். விலையில்லாத அந்தக் குருவியுங்கூட தேவனால் மறக்கப்படுவதில்லை என இயேசு தெளிவாக எடுத்துரைக்கிறார்.

மேலும், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள், மேலானவர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நம்முடைய தலையிலுள்ள முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறதாம். என்னதொரு அருமையான ஆறுதலளிக்கும் நிச்சயமான வாக்குறுதி! நம்முடைய வாழ்வின் மிகவும் அற்பமான தேவைகளையுங்கூட, கர்த்தர் கூர்ந்து கவனித்து, ஏற்றவேளையில் நம் தேவைகளைச் சந்தித்து நம்மை பரவசப்படுத்துகிறார். அல்லேலூயா!

## கர்த்தர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ?

கால் பந்தாட்ட வீரர் ஒருவர் தன் வாலிப நாட்களில் உலகத்தோடு இசைந்து வாழ்ந்து வந்தார். எதிர்பாராதவிதமாய் 1999ஆம் ஆண்டு வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டபோது, அவரது இடது கால் பழுதடைந்தது. பலவித மருத்துவ சிகிச்சைப் பெற்றும், கால் ஊன்றி நடக்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டார். 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒருநாள் இரவில் கால் வேதனையில் கண்ணீரோடு “ என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?” என்று சொல்லி ஜெபித்தாராம். நண்பர் ஒருவரும் இந்நிலையில் இவருக்காக ஜெபிக்கும்படி ஒரு

சகோதரியிடம் சொல்லியிருந்தார். பின்னர் சகோதரரும் அவர்களிடம் ஜெபிக்க சென்றார். அந்த சகோதரி ஜெபித்து கர்த்தருடைய வார்த்தையை வெளிப்படுத்தினார்கள்.

இரவில் கண்ணீரோடு சகோதரர் ஜெபித்ததையும், மருத்துவர் ஒருவரிடம் சகோதரர் சிகிச்சைப் பெற்று துரிதமாக சுகமடைவார் என்றும், காலின் ஒரு நகமும் கீழே விழாது என்றும், கர்த்தருடைய வார்த்தையை அந்த சகோதரி அறிவித்தார்கள். ஆனால் மருத்துவரை அணுகினபோது, காலின் ஒரு பகுதியை வெட்டி எடுக்கவேண்டும் என்று முதலில் சொன்னார். பின்னர், ஒரே நாள் சிகிச்சையில் சகோதரர் பூரண சுகம்பெற்றார்; காலின் ஒரு நகமும் எடுக்கப்படவில்லை.

கர்த்தர் சொன்னபடியே சகோதரர் அற்புத சுகம் பெற்றார். அல்லேலூயா! தற்போது இந்த சகோதரர் சென்னை நகரில் இளைஞர் இடையே முழுநேர அருட்பணி ஆற்றி வருகிறார். உங்கள் தலையிலுள்ள முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது; பயப்படாதிருங்கள், நீங்கள் விசேஷித்தவர்கள்!

## பயத்திலிருந்து தப்பிப் பிழைக்க வழி

கர்த்தருடைய பார்வைக்கு அருமையானபடியால் கனம் பெற்ற தேவஜனம், மனிதர்களாலும் சூழ்நிலைகளாலும் நெருக்கங்களுக்குட்பட்டு, கலங்கி தவித்து நிற்கும் போது பயத்தின் பிடியிலிருந்து தப்பி பிழைப்பது எவ்வாறு? வேதாகமத்தில் தாவீது நெருக்கங்களுக்குட்பட்டு இவ்விதமாக பயத்தினால் பாதிக்கப் பட்டிருந்தபோது, எவ்விதத்தில் கர்த்தர் அவரைத் தப்புவித்தார் என்று சங்கீதம் 56இல் விவரிக்கப்பட்டிருக்கும் சாட்சி, இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பதைப் போன்று அமைந்துள்ளது.

கர்த்தருடைய வார்த்தையின்படி, சாமுவேல் தீர்க்கதரிசி தாவீதை ராஜாவாக அபிஷேகம்பண்ணினார். இதனிமித்தம் ராஜாவாயிருந்த சவுல், தாவீதைக் கொன்றுபோட தீர்மானித்தான். தாவீது சவுலுக்குத் தப்பியோடி, பெலிஸ்தரின் தேசத்துக்கு காத்தின் ராஜாவாகிய ஆகிசிடத்தில் போனான். ஆகிசின் ஊழியக்காரர் தாவீதைப் பார்த்து: தேசத்து ராஜாவாகிய தாவீது இவன் அல்லவோ? சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இவனைக் குறித்தல்லவோ ஆடல் பாடலோடே கொண்டாடினார்கள் என்றார்கள்.



எந்த காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பெலிஸ்திய வீரனைக் கொன்று இந்தப் பாடலைப் பெற்றானோ, அதே காத் ஊரில் தாவீது கொடிய நெருக்கத்திற்குட்பட்டான்; காத்தின் ராஜாவுக்கு மிகவும் பயந்தான். அவர்கள் கண்களுக்கு முன்பாக பித்தங்கொண்டவன்போல காண்பித்து, பயித்திய சேஷ்டை செய்து அங்கிருந்து தப்பினான் (1 சாமுவேல் 21:10-15). பெலிஸ்தர் தாவீதைக் காத் ஊரிலே பிடித்தபோது தாவீது பாடின பாடலே சங்கீதம் 56 ஆகும்.

இந்தப் பாடலை தாவீது சிறப்பு போதனையாக (மிக்தாம்), அந்நிய தேசத்தில் அமைதிப்புறா (Silent Dove in Distant Lands) என்ற இசைக்கேற்ப பாடி, இராகத் தலைவனுக்கு ஒப்புவித்ததாக சங்கீதம் 56இன் தலையங்கம் தெரிவிக்கிறது. எப்பக்கத்திலும் பகைஞர் சூழ்ந்து நிற்பதால் மிகவும் பயந்து, நெருக்கங்களுக்கு உட்பட்டு தாவீது திகைத்து நின்றான். அப்பொழுது தேவனை நம்பி, அவரை நோக்கிக் கூப்பிட்டு, மனுஷன் எனக்கு என்ன செய்வான்? என்று தனது நம்பிக்கையை அறிக்கை செய்து, சத்துருக்களைப் பின்னிட்டு திரும்பச் செய்தான். இந்தச் சம்பவமே சாட்சியாக சிறப்பு போதனையாக விண்ணப்பமாக தாவீதால் எழுதப்பட்டிருக்கிறது.

## நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்

தன் நெருக்கத்திலே தாவீது: நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன். தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன். தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்? (சங்கீதம் 56:3,11) என்று கர்த்தர் பேரில் உள்ள தனது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்.

மேலும் தாவீது: என் அலைச்சல்களைத் தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது? நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்; தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன் (சங்கீதம் 56:8,9) என்றும்; நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி, நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கால்களை இடறுதலுக்கும் தப்புவியாதிருப்பீரோ? (சங்கீதம் 56:13) என்றும்

உறுதியான நம்பிக்கையோடே தாவீது விண்ணப்பிக்கிறதைக் காண்கிறோம்.

வாழ்வின் நெருக்கங்களில், கர்த்தருடைய ஆலோசனையையும் சத்திய வார்த்தைகளையும் முற்றிலும் கடைப்பிடித்து செயல்படுவது, பயத்தை நீக்குகிறது; விசுவாசத்தை, தேவன் பேரிலும் அவருடைய வார்த்தையிலும் உள்ள நம்பிக்கையை, வாழ்வில் பெருகச் செய்கிறது. அல்லேலூயா !

## கர்த்தரை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்!

தாவீது அந்நிய தேசத்திலே அடைக்கலம் புகுந்ததுபோல, தேவனுடைய பிள்ளைகள் சிலரும், அந்நிய தேசங்களுக்குச் சென்று அமைதியான ஜீவனம்பண்ணி தங்களுக்கு நன்மையுண்டாக பிரயாசப்படுகிறார்கள்; மிகவும் நல்லது. ஆனாலும் அங்கு எதிர்பாராத நெருக்கங்களுக்கு உட்படும்போது, செய்வதறியாது கலங்கித் தவிக்கிறார்கள். பயம் அவர்களைச் சூழ்ந்துகொள்ளுகிறது.

முற்றும் மாறுபட்ட கலாச்சாரம் மக்கள் மொழி மற்றும் பல புதிய சூழ்நிலைகள் நிமித்தம் வரும் கலக்கங்கள் உண்டு. இவற்றிற்கிடையே, சரியான வேலை அமையாததினாலும், நாட்டின் குடியுரிமை கட்டுப்பாடுகளினாலும், தனிமையினாலும், உறவினரின் அளவுக்கு மிஞ்சிய எதிர்பார்ப்புகளினாலுங்கூட அவதியுற்று செய்வதறியாது திகைத்து நிற்பவர்களும் உண்டு.

தாவீதைப் போன்று நெருக்கங்களில் சிக்கித் தவிக்கின்ற அனைவருக்கும் வேதாகமம் காட்டும் வழி, கர்த்தரை நோக்கிப் பார்ப்பதேயாகும். நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே; நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் (ஏசாயா 41:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவே வழியும், நம்பத்தக்கவரும், வாழ்வளிக்கிறவருமாயிருக்கிறார். நலமான நல்வாழ்வைக் காண முயற்சிக்கும் தேவனுடைய பிள்ளைகள் சிலர், இவ்விதமான நெருக்கங்களினால், கவலையிலும் கண்ணீரிலும் பயத்துடன் வாழ்வதை நம்மில் அநேகர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.



## கர்த்தர் பயத்தை நீக்கித் தப்புவிக்கிறார்

பல ஆண்டுகளுக்கு முன்னர் அந்நிய தேசத்தில் இவ்வகையான நெருக்கங்களில் சிக்குண்டவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் அன்பை, அவர் அருளும் விடுதலையை எடுத்துரைக்கும் கிருபையைக் கர்த்தர் சகோதரர் ஒருவருக்கு சில ஆண்டுகள் கொடுத்தார். கிறிஸ்துவை அறியாத அநேகரும் ஆதரவற்ற நிலையில், வேலை பிரச்சனைகளாலும், குடியுரிமை கட்டுப்பாடுகளினாலும், கலங்கி தவித்து செய்வதறியாது அந்நிய தேசத்தில் திகைத்து நின்றபோது, இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பார்க்க ஆலோசனைப் பெற்றார்கள்; இயேசுவின் அன்பை அறிந்தார்கள். ஆறுதலான இயேசுவின் வார்த்தைகளும் சாட்சிகளும், அவர்கள் அறிந்தவிதத்தில் மொழியில், இயேசுவை நோக்கி மன்றாட உதவி செய்தது.

வாக்கு மாறாத தேவன் எல்லாத் தருணங்களிலும் அவர்களுடைய அலைச்சல்களை எண்ணி, கண்ணீரைக் கண்டு, அவர்களைத் தப்புவித்தார். இவ்வாறு தப்புவிக்கப்பட்ட அநேகர், இந்நாளில் உலகின் பல நாடுகளில், இயேசுவின் அன்பை பறைசாற்றி வருகிறார்கள். அல்லேலூயா!

## நீர் என்னைத் தப்புவியாதிருப்பீரோ?

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, நீயும் உன் வாழ்வில் கொடிய நெருக்கங்களுக்கு உட்பட்டு, சூழ்நிலைகளாலும் எதிராளிகளாலும் பாதிக்கப்பட்டு, மிகுந்த பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாயா? பயப்படாதே! சிறப்பு போதனையாக எழுதி வைக்கப்பட்டிருக்கிற ஆலோசனைகளுக்கு, கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, தேவனை நோக்கிக் கூப்பிடு.

தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்? என்று கர்த்தர் பேரில் உள்ள உன் நம்பிக்கையை, விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிடு. அப்பொழுது கர்த்தர் உன் ஆத்துமாவை மரணத்துக்கும், உன் கால்களை இடறுதலுக்கும் தப்புவிப்பார். நீயும் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடப்பாய்; தேவனுக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துவாய். அல்லேலூயா! ஆமென்.

## சங்கீதம் 56

தேவனே, எனக்கு இரங்கும்; மனுஷன் என்னை விழுங்கப்பார்க்கிறான்,
நாள்தோறும் போர்செய்து, என்னை ஒடுக்குகிறான்.
என் சத்துருக்கள் நாள்தோறும் என்னை விழுங்கப்பார்க்கிறார்கள்;
உன்னதமானவரே, எனக்கு விரோதமாய் அகங்கரித்துப் போர் செய்கிறவர்கள் அநேகர்.

நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்.
தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்;
தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?
நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள்;
எனக்குத் தீங்குசெய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது.

அவர்கள் ஏகமாய்க் கூடி, பதிவிருக்கிறார்கள்;
என் பிராணனை வாங்க விரும்பி, என் காலடிகளைத் தொடர்ந்து வருகிறார்கள்.
அவர்கள் தங்கள் அக்கிரமத்தினால் தப்புவார்களோ?
தேவனே, கோபங்கொண்டு ஜனங்களைக் கீழே தள்ளும்.

என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்;
என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்;
அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?

நாம் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்;
தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்.
தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்;
கர்த்தரை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்.

தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?
தேவனே, நான் உமக்குப் பண்ணின பொருத்தனைகள் என்மேல் இருக்கிறது;
உமக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துவேன்.
நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி,
நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கால்களை இடறலுக்கும் தப்புவியாதிருப்பீரோ?

**இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகள்!**

# 10. கர்த்தர் பெரியவர்! மிகவும் புகழப்படத்தக்கவர்!

*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும்*
*மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான*
*ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத்*
*தந்தருளவேண்டுமென்றும், ... அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள*
*மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்.*
(எபேசியர் 1: 17,19)

தேவனுடைய செய்கைகளையும், அவருடைய பயங்கரமானதும் வியக்கத்தக்கதுமான கிரியைகளையும் கண்டுணர்ந்த தேவஜனம், தேவனை அறிகிற அறிவைப் பெற கர்த்தர் விரும்புகிறார். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார். அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது என்கிற உண்மையை எடுத்துரைக்கும் ஸ்தோத்திர சங்கீதமான 145ஆம் சங்கீதத்தை, தாவீது இதற்கெனவே பாடியிருப்பதைப் போன்று தோன்றுகிறது. இந்தச் சங்கீதத்தைச் சார்ந்த செய்தி, அடுத்த பொக்கிஷமாக இந்தப் புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ளது.

### ஸ்தோத்திர பாடல்

வேதாகமத்தில் சங்கீதங்களின் தொகுப்பு, ஆறு துதி மற்றும் ஸ்தோத்திர சங்கீதங்களுடன் நிறைவு பெறுகிறது. தாவீது பாடின ஸ்தோத்திர சங்கீதம், இவற்றில் முதலாவதாக இடம் பெற்றுள்ளது. இது எபிரெய எழுத்துக்களின் வரிசையில் இயற்றப்பட்ட ஒரு சிறப்பான ஸ்தோத்திர பாடலாகும். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது (சங்கீதம் 145:3) என்ற வசனத்தை மையமாக வைத்து சங்கீதம் 145 எழுதப்பட்டிருக்கிறது.

தேவனுடைய பிள்ளைகள் நாடோறும் தேவனை ஸ்தோத்திரித்து, அவருடைய நாமத்தைத் துதித்துப் பாட இந்த சங்கீதம் பேருதவியாக இருக்கிறது.

கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர் என்று சங்கீதம் 139:1இல் விளம்பின தாவீது, சங்கீதம் 145:3இல் கர்த்தருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது என்கிறார். நம்மை ஆராய்ந்து அறிந்திருக்கிற நம் தேவன், வாழ்வின் நெருக்கங்களில், உண்மையாய் அவரை நாம் நோக்கிக் கூப்பிடுகிற வேளையில், நமக்கு சமீபமாயிருக்கிறார். அவர் நம்முடைய விருப்பத்தின்படி செய்து, நம்முடைய கூப்பிடுதலைக் கேட்டு இரட்சிக்கிறார்.

சர்வத்தையும் சிருஷ்டித்தவர், பாதுகாத்து பராமரிப்பவர், எளிமையும் சிறுமையுமான நம்மையும் நோக்கிப் பார்த்து இரட்சிக்கும் அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது. இந்த கர்த்தருடைய மகத்துவங்களை நினைவுகூர்ந்து, நம்முடைய தேவனுடைய வல்லமையையும், அன்பையும் மன உருக்கத்தையும் கிருபையையும், பரிசுத்தத்தையும் எண்ணி, உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவரைத் துதிப்போம், ஸ்தோத்திரிப்போம். அல்லேலூயா!

## கர்த்தர் எல்லா சூழ்நிலைகளுக்கும் போதுமானவர்

ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன் (சங்கீதம் 145:1) என்று தாவீது ராஜா கர்த்தரை தெய்வமாக கண்டறிந்து துதிக்கிறார்.

வல்லமையில் கர்த்தர் பெரியவர் என்பதை தன் வாழ்வில் அனுபவித்த தாவீது தேவனை ஸ்தோத்திரிக்கிறார். ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள் (வசனம் 6) என்றும்; உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள் (வசனம் 4) என்றும்; உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள் (வசனம் 12) என்றும் எழுதியிருக்கிறார்.

இரக்கத்தில், மன உருக்கத்தில் கர்த்தர் பெரியவர் என்றறிந்து; கர்த்தர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர் (வசனம் 8) என்று



அறிக்கையிடுகிறார். தாவீது தன் வாழ்வில் நெருக்கங்களுக்கும் உபத்திரவங்களுக்கும் உட்பட்டபோது, தேவனாகிய கர்த்தர் அவருக்கு போதுமானவராக இருந்தார். கர்த்தராகிய தேவன் தம்முடைய வல்லமையுள்ள செய்கைகளினாலும், மிகுந்த கிருபையினாலும் தாவீதை இரட்சித்தார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, நீயும் ஒருவேளை வாழ்வின் நெருக்கத்தினாலும் உபத்திரவங்களின் நிமித்தமும் பாதிக்கப்பட்டு, தனிமையிலும் பயத்திலும், ஆவியில் நொறுக்கப்பட்டு காயப்பட்டு, கலங்கி தவித்துக் கொண்டிருக்கலாம். கலங்காதே! தாவீது தன் வாழ்வில் கர்த்தரே தெய்வம் என்று கண்டுணர்ந்து விடுவிக்கப்பட்டு, துதித்து ஸ்தோத்திரித்து மகிழ்ந்த அதே தேவன் இன்றும் ஜீவிக்கிறார்; அவர் மாறாதவராயிருக்கிறார், உன்னையும் விடுவிப்பார்.

கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமா யிருக்கிறார்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது, அவர் தமக்கு பயந்தவர்களாகிய நம்முடைய விருப்பத்தின்படி செய்து, நம்முடைய கூப்பிடுதலைக் கேட்டு நம்மையும் இரட்சிப்பார். அப்பொழுது நாமும் உள்ளத்தில் அவருடைய மேன்மையையும் மகிமையையும் உணர்ந்து அனுபவித்து அவரைத் துதிப்போம். ஸ்தோத்திரிப்போம்; அல்லேலூயா!

## கர்த்தரே தெய்வம் – இயேசுவே தேவகுமாரன்

ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன் (சங்கீதம் 145:1) என்று எழுதின தாவீது, அதற்கு முந்தின சங்கீதத்தின் கடைசி வசனத்தில்: கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது (சங்கீதம் 144:15) என்று எழுதியிருக்கிறார். கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாக கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது (சங்கீதம் 33:12) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

எலியா தீர்க்கதரிசி, கர்மேல் பர்வதத்தில் கூடி வந்து நின்ற ஜனங்கள் எல்லோரும், கர்த்தரே தெய்வம் என்று அறிக்கையிடச்செய்த நிகழ்வை, வேதாகமத்தில் 1 இராஜாக்கள் 18ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

எலியா கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கியமாயிருந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் இரண்டு நினைவுகளினால் அலைக் களிக்கப்பட்டபோது, கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றும்படியாக அவர்களுக்கு ஆலோசனைச் சொன்னான். அதன்படியே, பாகாலின் தீர்க்கதரிசிகளும், எலியாவும் தாங்கள் தெரிந்துகொண்ட காளைகளைத் துண்டித்து, நெருப்புப்போடாமல் விறகுகளின் மேல் வைத்து, அவரவர் தங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடும்போது, அக்கினியால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான். பாகாலின் தீர்க்கதரிசிகள் முதலாவதாக, தங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி வெகு நேரமாக உரக்க சத்தமாய்க் கூப்பிட்டும் ஒன்றும் நடக்கவில்லை.

எலியா பின்னர், சகல ஜனங்களும் அவன்கிட்டே வந்தபோது தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்டு விறகுகளை அடுக்கி, காளையைத் துண்டித்து, விறகுகளின் மேல் வைத்தான். சர்வாங்க தகனபலியின்மேலும், விறகுகளின் மேலும் தண்ணீரை ஊற்றச் செய்தான். பின்னர் எலியா தேவனை நோக்கி: நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும், இன்றைக்கு விளங்கப்பண்ணும், என்னைக் கேட்டருளும் என்றான். அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி அந்த சர்வாங்க தகனபலியையும் விறகுகளையும், கற்களையும் மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜனங்கள் எல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள் (1 இராஜாக்கள் 18:38,39).

## இயேசுவே தேவனுடைய குமாரன்

கர்மேல் பர்வதத்தில் எலியா தீர்க்கதரிசி, கர்த்தரே தெய்வம் என்று ஜனங்களை அறிக்கையிடச் செய்ததுபோல, எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் பின்னர் வந்த யோவான் ஸ்நானகன், இயேசுவே தேவனுடைய குமாரன் என சாட்சி கொடுத்தார். யோவான் ஸ்நானகன் பிறப்பதற்கு முன்னரே, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் (லூக்கா 1:17) என்று அவனைக் குறித்து தேவதூதனால் முன்னறிவிக்கப்பட்டது.



தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருந்த ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோவான் 1:18) என்பதை நாம் அறிவோம். குமாரனாகிய இயேசுவே அந்நாட்களில் எதிர்பார்த்து காத்திருந்த கிறிஸ்து என்னும் மேசியா என்று யோவான் ஸ்நானகன் சாட்சிப்பகர்ந்தார். மேலும், இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான் (யோவான் 1:34) என்று எழுதப் பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, நீயும் உன் வாழ்வில் கர்த்தரே தெய்வம், இயேசுவே தேவனுடைய குமாரன் என்ற உண்மையை, உள்ளத்தில் அறிந்து, உன் வாழ்வை அவருக்கு அர்ப்பணிப்பாயா? விசுவாசமுள்ளவராய் இயேசுவை ஏற்றுக்கொண்டு செயல்படும்போது, அவருடைய அதிசயமான கிரியைகள் உன்னிலும் விளங்கும். நீயும் கர்த்தர் பெரியவர் என்பதை தாவீதைப் போன்று அறிக்கையிட்டு, அவரைத் துதித்து ஸ்தோத்திரிப்பாய். அல்லேலூயா!

## கர்த்தர் எங்களைத் தப்புவிக்க வல்லமையுள்ளவர்

கர்த்தர் பெரியவர் என்று சாட்சிப்பகர்ந்த தாவீது: ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள்; உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன் (சங்கீதம் 145:6) என்று எழுதிவைத்திருக்கிறார். கர்த்தருடைய வல்லமையையும் மகிமையையும் தங்கள் வாழ்வில் அனுபவிக்கிற தேவனுடைய பிள்ளைகள், கர்த்தர் பெரியவர் என்று அவருடைய மகத்துவங்களை அறிவித்து, அவரைத் துதித்து ஸ்தோத்திரிப்பார்கள்.

வேதாகமத்தில் தானியேல் 3ஆம் அதிகாரத்தில் எபிரெய வாலிபர்களின் வைராக்கியமான சாட்சி விவரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ள மறுத்து, நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் என்று சாட்சி பகர்ந்தார்கள். ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து, கீதவாத்தியங்களின் சத்தத்தை ஜனங்கள் கேட்கும் போது, தாழவிழுந்து பொற்சிலையைப் பணிந்துகொள்ள கட்டளைப்

பிறப்பித்தான். பணிந்துகொள்ளாமற்போனால், அந்நேரமே அவன் எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவான் என்று அறிவித்தான். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற யூதரான வாலிபர் ராஜாவை மதிக்கவில்லை என்றும், ராஜா நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் என்றும் ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது.

அவர்களை கூப்பிட்டு ராஜா விசாரித்தபோது அவர்கள்: நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள் (தானியேல் 3:17,18). அப்பொழுது நேபுகாத்நேச்சார் கடுங்கோபங்கொண்டு, அக்கினிச் சூளையை ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவு கொடுத்தான். அவர்கள் எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள். அவர்களை தூக்கிக்கொண்டு போன புருஷரை அக்கினி ஜுவாலையானது கொன்றுபோட்டது.

மூன்று புருஷரும் கட்டுண்டவர்களாய் அக்கினிச்சூளையின் நடுவிலே விழுந்தார்கள். அப்பொழுது ராஜா பிரமித்து; இதோ நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன். அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை, நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான். ராஜா அக்கினிச்சூளையின் வாசலண்டைக்கு வந்து; உண்மையான தேவனுடைய தாசராகிய சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் வெளியே வாருங்கள் என்றான் (தானியேல் 3:28,29).

கர்த்தரை அறியாத ராஜாவும் ஜனங்களும் கர்த்தரே உன்னதமான தேவன் என்றும்; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை என்றும் அறிக்கையிட்டனர். நம்முடைய தேவன் அவர்களைத் தப்புவிக்க வல்லவராயிருந்தார். இவ்விதமாக அவர்கள் கர்த்தருடைய மகிமையையும் வல்லமையையும் தங்கள் வாழ்வில் விளங்கச்செய்து, அவருடைய



வல்லமையுள்ள செயல்களை வெளிப்படுத்தினார்கள். கர்த்தருடைய வல்லமை சாட்சியாக வெளிப்பட்டதின் நிமித்தம், கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார் என்றறிந்து, புறஜாதியினரும் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்தனர். அல்லேலூயா!.

## இயேசு செய்கையிலும் வாக்கிலும் வல்லவர்

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவும் நம்மைப் போலொத்த மனிதனாக இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில், அவர் தேவனுக்கு முன்பாகவும், ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாகவும், செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியா யிருந்தார் (லூக்கா 24:19).நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் (அப்போஸ்தலர் 10:38). வல்லமையுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்து செய்தவைகள் எல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் என்றும் பேதுரு அந்நாளில் பிரசங்கித்தார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய வாழ்விலும் கர்த்தருடைய மகிமையும் வல்லமையும் தோன்றி சாட்சியாக விளங்க நம்மை அர்ப்பணிப்போம். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்கிற வாலிபர்களைப் போன்று மாசற்றவர் களாகவும் கறை, திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமானவர்களாய், கர்த்தருக்குப் பிரியமாக வாழவும், வாழ்வினாலும் போஜனத்தினாலும் தீட்டுப்படாமல் சாட்சியாக ஜீவிக்கவும் அர்ப்பணிப்போம். அவர்கள் வாழ்வில் காணப்பட்ட உறுதியான விசுவாசமும், தைரியமும், வைராக்கியமும், நம் வாழ்விலும் காணப்பட்டு கர்த்தருடைய வல்லமையுள்ள செய்கைகளுடன் வெளிப்பட்டு, கர்த்தருடைய நாமம் மகிமையுடன் உயர்த்தப்பட ஒப்புக்கொடுப்போம். அல்லேலூயா!

## கர்த்தர் நல்லவர் கிருபை மிகுந்தவர்

கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர் (சங்கீதம் 145:8) என்றும்; ஆண்டவரே நீர்

நல்லவரும் மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர் (சங்கீதம் 86:5) என்றும் தாவீது ராஜா எழுதி வைத்திருக்கிறார். தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவராகக் காணப்பட்டார். எனக்குச் சித்தமானவைகளை எல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்து தேவன் சாட்சியும் கொடுத்தார்.

தாவீது ராஜா உரியாவின் மனைவியான பத்சேபாளிடத்தில் பாவத்திற்குட்பட்டான். அதற்கு பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவன் செய்த பாவங்களை உணர்த்தினான். அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில்; நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்றான். நாத்தான் தாவீதை நோக்கி; நீ சாகாதபடிக்கு கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார்; ஆனாலும், இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும் என்று சொல்லி நாத்தான் தன் வீட்டுக்குப் போய்விட்டான் (2 சாமுவேல் 12:13,14).

ஆம் பிரியமானவர்களே, கர்த்தர் நல்லவர் மன்னிக்கிறவர்; இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார் (ஏசாயா 55:7) என்று எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா யிருக்கிறார் (1 யோவான் 1:9). கர்த்தர் தாவீதின் பாவங்களை மன்னித்து, தமது மிகுந்த இரக்கங்களின்படி அவனுடைய மீறுதல்கள் நீங்க அவனைச் சுத்திகரித்து, அவனுடைய உண்மையை, நம்பகத்தன்மையைக்குறித்து சாட்சியும் பகிர்ந்தார்.

தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்று தவிர, தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல் அவர் பார்வைக்கு செம்மையானதைச் செய்து வந்தான் (1 இராஜாக்கள் 15:5). ராஜாவாகிய தாவீது அதனிமித்தமே கர்த்தர் நல்லவர் என்றும், கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர் என்றும்; தன் வாழ்வில் அனுபவித்து,



மேலான மன்னிப்பை நினைவுகூர்ந்து, கர்த்தரை ஸ்தோத்திரித்து சங்கீதம் பாடினார். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத் தக்கவருமாயிருக்கிறார்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது என்று துதியோடும் ஸ்தோத்திரத்தோடும், எப்பொழுதும் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார். அல்லேலூயா!

## கர்த்தர் மன்னிக்கிறவர் – இரக்கம் செய்கிறவர்

வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டின் காலத்திலும் இதைப்போலொத்த ஒரு நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நாட்களில் சபையைத் துன்பப்படுத்தின சவுலை, தமஸ்கு பாதையில் இயேசு சந்தித்ததை அப்போஸ்தலர் 9ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். சவுல் என்பவன் இயேசுவின் மார்க்கத்தாரை பிடித்து வரும்படி எருசலேமிலிருந்து பிரயாணமாய்ப்போய் தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஓர் ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. சவுல் அந்த ஒளியின் மகிமையிலே பார்வையற்றுப் போனான்.

கர்த்தரின் வார்த்தையின்படி பட்டணத்திற்குள்ளே போனான். தமஸ்குவிலே அனனியா என்னும் சீஷன், சவுலின் மேல் கைவைத்து பார்வையடைவாயாக என்றான். பார்வையடைந்த பின்பு சவுல், எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று பாவங்கள் போகக் கழுவப்பட ஆலோசனைப் பெற்றான் (அப்போஸ்தலர் 22:16). தாமதமின்றி சவுல், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்.

முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும் நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன் (1 தீமோத்தேயு 1;13) என்றும்; பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்பிற்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான் (1 தீமோத்தேயு 1:15) என்றும் பவுல் அறிக்கையிடுகிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன்னுடைய வாழ்வில் நீ கர்த்தரை அறிய

வேண்டிய பிரகாரம் அறிந்து, கர்த்தரை பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாய் உன்னுடைய உள்ளத்தின் ஆழத்தில் உணர்ந்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் அவரைத் துதித்து ஸ்தோத்திரித்து மகிழுகிறாயா? அல்லது இதற்கு மாறாக, உன்னுடைய வாழ்வில் இன்னும் மன்னிக்கப்படாத பாவங்களினிமித்தம், அக்கிரம சிந்தையின் நிமித்தம், உன்னுடைய துதியும் பாடல்களும் ஸ்தோத்திரமும் மாய்மாலமான சடங்காக, வெறும் கைத்தட்டலாக, உன் வாழ்வில் வெளிப்படுகிறதா? அப்படியானால், இன்றே மனந்திரும்பி, தாவீதைப் போன்று இரக்கத்திற்காக காத்திருக்கவும், சவுலைப் போன்று இயேசுவினால் பாவங்கள் கழுவி சுத்திகரிக்கப்படவும் ஒப்புக்கொடுக்க, உன்னைக் கர்த்தர் அழைக்கிறார். அழைப்பை ஏற்று அர்ப்பணிக்கின்ற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

## கர்த்தரைத் துதி ஸ்தோத்திரி

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இனிக் காலம் செல்லாது (வெளி: 10:6) என்று கர்த்தர் உன்னை எச்சரிக்கிறார். உன் ஜெபநேரத்தில், ஆராதனை வேளையில், கர்த்தரோடு நீ தனித்திருக்கும்போது, உன் உள்ளத்தின் ஆழத்தில் கர்த்தரே தெய்வம் என்று அறிக்கையிட்டு தேவனைத் துதி.

உன் வாழ்வில் வெளிப்பட்ட கர்த்தருடைய மகிமையும் வல்லமையுமான கிரியைகளையும் செய்கைகளையும் நினைவு கூர்ந்து கர்த்தரை ஸ்தோத்திரி.

எல்லாவற்றிற்கும் மேலாக, அவருடைய இரக்கம், மன உருக்கம், நீடிய சாந்தம், மிகுந்த கிருபையின் நிமித்தம் நல்லவராக மன்னிக்கிறவராக உன் வாழ்வில் கர்த்தர் வெளிப்பட்டதின் நிமித்தம், தேவனை உயர்த்தி, எப்பொழுதும் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்திரி. கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார். அல்லேலூயா! ஆமென்.



# சங்கீதம் 145

ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை
எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன். நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து,
எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன்.

கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார்;
அவருடைய மகத்துவம் ஆராய்ந்துமுடியாது.
தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி,
உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்.

உம்முடைய சிறந்த மகிமைப் பிரதாபத்தையும், உம்முடைய அதிசயமான
கிரியைகளையுங்குறித்துப் பேசுவேன். ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின்
வல்லமையைச் சொல்லுவார்கள்; உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன்.

அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி,
உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள். கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமும்,
நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்;
அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது.

கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்;
உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள்.
மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும்,
உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப்பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு;

உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக்குறித்துப் பேசுவார்கள்.
உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம்,
உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது.

கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகிறார்.
எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது.
ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்.
நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்.

கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம்
கிருபையுள்ளவருமாயிருக்கிறார். தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும்,
உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து,
அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.
கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.
என் வாய் கர்த்தரின் துதியைச் சொல்வதாக; மாம்சதேகமுள்ள யாவும்
அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கக்கடவது.

**கர்த்தர் பெரியவர்! மிகவும் புகழப்படத்தக்கவர்!**

# 11. உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன்!

*என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே*
*அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே,*
*கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.*
*அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து,*
*உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு*
*விலக்கிமீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,*
*நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்;*
*கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது.*
(சங்கீதம் 103:1-5)

விசுவாச வாழ்வில் நமக்கு முன்னேபோய், கோணலானவைகளைச் செவ்வையாக்கும் கர்த்தர், நம்மைப் பெயர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறார். அவர் நமக்குத் தந்தருளியிருக்கும் ஆயுசுநாட்களின் நிறைவைக் கண்டு, வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படியாக, தேவனுடைய மனிதனாகிய மோசே ஏறெடுத்த ஜெபம் சங்கீதம் 90ஆக வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கீதத்தைச் சார்ந்த செய்தி, இந்தச் செய்தி தொகுப்பின் அடுத்த பொக்கிஷமாக இடம் பெற்றுள்ளது.

## ஆயுசு நாட்கள்

இவ்வுலகில் பிறக்கிற ஒவ்வொரு மனுஷனும், தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற நாள்வரையில் வாழ்ந்து மரித்து, நியாயந்தீர்க்கப்படும்படியாக இயேசுகிறிஸ்துவின் முன்பாக நிறுத்தப்படுவர் என்பது வேதாகமம் போதிக்கும் உண்மை. தன்னுடைய ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை, மரணநாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை (பிரசங்கி 8:8). அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு



நியமிக்கப்பட்டிருக்கிறது (எபிரெயர் 9:27) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

மனுஷராகிய நம் ஒவ்வொருவருடைய ஆயுசு நாட்களும் கர்த்தரால் முன் குறிக்கப்பட்டிருக்கிறது. பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல என்ற வசனத்தின்படி, மரண நாளும் ஆயுசு நாட்களுங்கூட நம்மில் அநேகருக்கு மறைக்கப்பட்டே இருக்கிறது. இதனிமித்தமே தேவனுடைய மனிதனாகிய மோசே, நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும் (சங்கீதம் 90:12) என்று ஜெபம்பண்ணினார்.

சங்கீதக்காரனாகிய தாவீதும்: கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும். இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாதது போலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம் (சங்கீதம் 39:4,5) என்று எழுதி வைத்திருக்கிறார். முன் குறிக்கப்பட்டிருக்கிற நம்முடைய ஆயுசு நாட்களையும், மரண நாளையும் நாம் அறியாதிருக்கிறோம். ஆகையால் தாமதமின்றி, நம் பாவ வாழ்விலிருந்து மனந்திரும்பி, பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பைப் பெற்று, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டு இரட்சிப்படைய நம்மை அர்ப்பணிப்போம்!

## தேவனுடைய சிருஷ்டிப்பில் சாவாமை

சிருஷ்டிப்பின் தேவனாகிய பரிசுத்தப் பிதாவைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல்: ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக (1 தீமோ. 6:16) என்று எழுதியிருக்கிறார். சாவாமையுள்ள தேவன், தம்முடைய சாயலாகவே மனுஷனைச் சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். முதல் மனிதர்களான

ஆதாமும் ஏவாளும், சதாகாலமும் வாழும்படியாக சாவாமையுள்ளவர்களாகவே சிருஷ்டிக்கப்பட்டனர்.

ஏதேன் தோட்டத்தில் அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் தேவன் தந்தார். ஆனாலும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார் (ஆதி. 2:17). சாத்தானின் தந்திரமான செயலினால், சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்டு ஏவாளும் ஆதாமும் தேவனுடைய கட்டளையை மீறி பாவத்திற்குட்பட்டார்கள். அவர்களுடைய சரீரமும் சிந்தையும் தேவசாயலை இழந்து மாற்றத்திற்குட்பட்டது; சாவாமையை இழந்து, அழிவுள்ளதும் சாவுக்கேதுவானதுமான சரீரத்தைத் தரித்துக்கொண்டார்கள்.

ஏதேனின் வஞ்சகம் துவங்கி, நோவாவின் காலத்திலுண்டான பெருவெள்ளம் வரையிலான காலக்கட்டத்தில் (சுமார் 1500 ஆண்டுகள் 10 தலைமுறைகள்) ஆதாம் துவங்கி நோவா வரை (ஏனோக்கு நீங்கலாக) சாவாமையை இழந்த மனுக்குலத்தின் சராசரி ஆயுசு காலம் 912 வருடங்களாக இருந்தது. ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் காணப்படாமற் போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார் (ஆதி. 5:24).

## சாவாமையை இழந்த மனுக்குலம்

ஏதேன் தோட்டத்தில் கீழ்ப்படியாமையினால் சாபத்தைச் சவதரித்து, சாவாமையை இழந்த மனுக்குலத்தின் ஆயுசு நாட்கள் முன்குறிக்கப்பட்டது. இந்தக் காலக்கட்டத்தில், மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கின தற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது (ஆதி. 6:5,6). அப்பொழுது கர்த்தர் என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார் (ஆதி. 6:3).

நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்துக்குப் பின்னர், மனுஷரின் ஆயுசுநாட்கள் இன்னும் குறைக்கப்பட்டு, நூற்றிருபது வருஷங்களாக குறிக்கப்பட்டது. இது நோவாவின் குமாரனாகிய சேம் முதல் ஆபிரகாம் வரையிலான காலத்தில் (10 தலைமுறைகள்) படிப்படியாக குறைந்ததாக வேதாகமத்தில் காண்கிறோம். ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசு நாட்கள் 175 வருஷம்; யாக்கோபு 147 வருஷம்; தேவனுடைய மனிதனாகிய மோசே மரிக்கிறபோது 120 வயதாயிருந்தான். இதன் பின்னர் மனுஷரின் ஆயுசுநாட்கள் இன்னும் குறைவாகவே இருந்ததாக வேதாகமத்தில் வாசிக்கிறோம்.



## அழிவுக்குத் தப்பின தேவ மனிதர்கள்

கர்த்தரால் முன்குறிக்கப்பட்ட ஆயுசு நாட்களின் நிறைவான வருடங்களுக்கும் அப்பாற்பட்டு, சாவாமையைப் பெற்றுக்கொண்ட தேவனுடைய மனிதர்களையும் நாம் வேதாகமத்தில் காணமுடிகிறது. நோவாவின் காலத்து பேரழிவுக்கு முன்னர், ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்.

இதைப்போலவே, கர்த்தர் எலியா தீர்க்கதரிசியைச் சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டார். எலியா, எலிசாவோடேகூடக் கில்காலிலிருந்து புறப்பட்டுப்போனான். அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில், அக்கினிரதமும் அக்கினிக்குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது. எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான் (2 இராஜாக்கள் 2:1,11) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஆசாரியனாகிய யோய்தா தேவனுக்காகவும், அவருடைய ஆலயத்திற்காகவும், இஸ்ரவேலுக்கு நன்மைசெய்தான். தன் பணியை நிறைவு செய்யும்படியாக கர்த்தர் அவனுக்கு 10 வருடங்கள் ஆயுசு நாட்களில் கூட்டிக் கொடுத்தார். யோய்தா தீர்க்காயுசுள்ளவனாய் முதிர்வயதில் மரித்தான்; அவன் மரணமடைகிறபோது நூற்றுமுப்பது வயதாயிருந்தான் (2 நாளாகமம் 24:15).

சீஷர்களில் இயேசுவுக்கு அன்பாயிருந்த யோவானைக் குறித்த ஒரு சம்பவத்தை வேதாகமத்தில் யோவான் 21:21-23 வசனங்களில் வாசிக்கிறோம். இங்கு யோவானைக் குறிப்பிட்டு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன? என்று கேட்கிறார். இதனிமித்தம் யோவான் சீஷன் மரிப்பதில்லை என்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று.

ஆனாலும் இங்கு யோவான் மரிப்பதில்லையென்று இயேசு சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்னவென்றே சொன்னார்.

இவ்விதமாக வேதாகமத்தில் குறிப்பிடப்படாமல், கர்த்தரால் நியமிக்கப்பட்ட ஆயுசு நாட்களைக் கடந்து, கர்த்தருக்காகவும் அவருடைய சித்தம் நிறைவேறவும் வாழ்ந்தவர்களும் உண்டு. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில், தேவனுடைய ஊழியரான சாது சுந்தர்சிங், தன்னுடைய நேபாள தேசத்து ஊழிய பயணத்தின்போது, இமாலய மலைப்பகுதியில் சந்தித்த கைலாச மகாரிஷியைப்பற்றி குறிப்பிடுகிறார். மகாரிஷி இமாலய மலைப்பகுதியில் பல நூறு ஆண்டுகளாக தங்கியிருந்து, கர்த்தருடைய ஆணையின்படி, ஆவியில் உணர்த்தப் படுவோருக்காக, பூமியிலிருந்து ஜெபம்பண்ணும்படியான பொறுப்பை பெற்றிருந்ததாக சொல்லப்படுகிறது.

தேவ மனிதர்கள் அழிவிலிருந்து மீட்கப்பட்டு, கர்த்தருக்காக அவருடைய சித்தம் நிறைவேற, தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியைச் செய்தார்கள்; செய்துகொண்டும் இருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாமுங்கூட, கர்த்தரால் நமக்கு நியமிக்கப்பட்ட பணிகளைச் செய்து முடிக்க, கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நம் வாழ்வில் முழுமையாகப் பெற்று நம் ஆயுசு நாட்கள் பூரணப்பட, விசுவாசத்தோடே காத்திருப்போம்!

## வாக்குத்தத்தங்கள் பூரணப்பட காத்திருப்போம்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர் களாய் அவரை ஏற்றுக்கொண்டு, மனந்திரும்பி, பாவங்களை அறிக்கையிட்டு, இயேசுகிறிஸ்துவின் திருஇரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்ட நாம், தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம். இந்த உறவின் நிலையில் இயேசுவை இவ்வுலகுக்கு வெளிப்படுத்தி, அவருக்கு சாட்சியாக ஜீவிக்க, அவருடைய சித்தம் செய்ய, நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம். ஏதேன் தோட்டத்து சூழ்ச்சியினால் வஞ்சிக்கப்பட்டு, சாவாமையை இழந்து, பின்னர் நோவாவின் காலத்தின் பேரழிவிற்குட்பட்ட மனுக்குலத்தின் எஞ்சிய சிலரின் சந்ததியரான நம்முடைய ஆயுசின் நாட்கள், முன் குறிக்கப்பட்டுள்ளது என்று பார்த்தோம்.



நமக்கு முன் குறிக்கப்பட்ட ஆயுசு நாட்களில், தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு கிறிஸ்து இயேசுவுக்குள் அருளப் பட்டிருக்கிற வாக்குத்தத்தங்களை பூரணமாக விசுவாசித்து நமக்கு சொந்தமாக்கிக்கொள்ள அழைக்கப்படுகிறோம். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறது. இவ்வுலகில் நம்முடைய ஆயுசு நாட்களைக் குறித்த வாக்குத்தத்தங்களையும் அவற்றின் உண்மையையும் தெளிவாக அறிந்து உணர்ந்து, அவை நம் வாழ்வில் நிறைவேற, விசுவாசத்துடன் காத்திருக்க அழைக்கப் படுகிறோம்.

## ஆயுசு நாட்களைக் குறித்த வாக்குத்தத்தங்கள்

முதலாவதாக, மீட்கப்பட்ட தேவஜனமாகிய நம் ஒவ்வொருவருடைய காலங்களையும், அதாவது ஆயுசு நாட்களையும் நமது குடியிருப்பின் எல்லைகளையும் கர்த்தர் முன் தீர்மானித்து குறித்திருக்கிறார் (அப். 17:26). நமக்கென்று நியமிக்கப்பட்ட எல்லைகளில், கர்த்தரால் முன் குறிக்கப்பட்ட காலம் நிறைவுபெறும் வரை, சாட்சியாக வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். மேலும் கர்த்தர்: உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன் (யாத்.23:26) என்றும் வாக்கருளியிருக்கிறார். பூரணப்படுத்துதல் என்பது காலத்தின் நிறைவு என்பதை மாத்திரம் குறிக்காமல், ஆயுசு நாட்களில் கர்த்தரால் அருளப்படும் ஆசீர்வாதம், பாதுகாவல், சரீர சுகம், சமாதானத்தையும் உள்ளடக்கியதாகவே உள்ளது.

அடுத்ததாக, கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து அதன்படிச் செய்ய அர்ப்பணித்திருக்கிற நம்முடைய முதிர்வயது வரைக்கும், ஆயுசு நாட்களின் நிறைவுவரை, கர்த்தர் நம்மை அவருடைய கரங்களில் ஏந்தி சுமந்து சகலவிதமான விக்கினங்களிலிருந்தும் தப்புவிப்பார் என்று வாக்கருளியிருக்கிறார். யாக்கோபின் சந்ததியாரே, இஸ்ரவேல் சந்ததியில் மீதியாகிய சகல ஜனங்களே, எனக்குச் செவிகொடுங்கள், தாயின் வயிற்றில் தோன்றினது முதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன். உங்கள் முதிர் வயது வரைக்கும் நான் அப்படிச் செய்வேன்; நரை வயது மட்டும் நான் உங்களை தாங்குவேன்; நான் அப்படிச் செய்துவந்தேன்;

இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன் (ஏசாயா 46:3,4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சங்கீதக்காரன், கர்த்தருடைய செய்கைகளில் மகிழ்ந்து அவருடைய கரத்தின் கிரியைகளின் நிமித்தம் ஆனந்த சத்தமிடுகிறதாக சங்கீதம் 92இல் வாசிக்கிறோம். மேலும் அவர்: கர்த்தருடைய ஆலயத்தில் நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும் விளங்கப் பண்ணும்படி, அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள் (சங்கீதம் 92:13-15) என்று எழுதி வைத்திருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன் ஆயுசு நாட்களையும் கர்த்தர் முன் குறித்திருக்கிறார்; அவர் அதை பூரணப்படுத்துவார். உன் வாழ்வின் சகலவிதமான விக்கினங்களிலிருந்தும், கர்த்தர் உன்னை ஏந்தி சுமந்து தப்புவிப்பார். உன் வாழ்வு செழிக்கும்; உன் முதிர்வயதிலுங்கூட நீ கனிதந்து புஷ்டியும் பசுமையுமாயிருப்பாய், இந்த கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் உன் வாழ்வில் சம்பூரணமாக நிறைவேற, உன் ஆயுசு நாட்கள் பூரணப்பட்டு வாழ்வு செழிக்க, கர்த்தரிடத்தில் உன்னை அர்ப்பணிப்பாயா? கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து ஒப்புக்கொடுக்கிற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! அல்லேலூயா!

## கடைசிக்கால வஞ்சகம்

இந்தக் கடைசி நாட்களில் கர்த்தர் பேரில் விசுவாசம் உள்ளவர்களாய், அவருடைய வசனங்களையும் வார்த்தைகளையும் தெளிவாக அறிந்து உணர்ந்து, வாழ்வின் நிறைவை பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம். அதே நிலையில், பலவிதமான தவறான போதகங்களை, உண்மை என்ற பெயரில் கர்த்தருடைய வசனங்களிலிருந்தே எடுத்துரைக்கும் வஞ்சகங்களை அடையாளங்கண்டு, அவற்றைத் தவிர்த்து தேவசித்தத்தை நிறைவேற்ற எச்சரிக்கப்படுகிறோம்.

இவ்வகையான கள்ளப்போதகங்கள், தேவனுடைய பிள்ளைகள் தங்கள் வாழ்வில் நிறைவான ஆசீர்வாதங்களைப்



பெற்று, அவர்கள் வாழ்வில் கர்த்தர் நியமித்திருக்கிற ஆயுசு நாட்கள் பூரணப்பட தடையாக உள்ளது. ஏன், சில வேளைகளில் ஆசீர்வாதங்களுக்கு பதிலாக, சஞ்சலத்தையும் வருத்தத்தையும் கூட தருகிறது.

பிசாசானவன் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான். ஏதேன் தோட்டத்தின் வஞ்சகத்தினால் நம்முடைய சாவாமையை இழக்கச் செய்த பிசாசானவன், இந்தக் கடைசி காலங்களில், தவறானப் போதனைகளினாலே தேவனுடைய பிள்ளைகளை வஞ்சிக்கிறான்; திசைதிருப்பி விடுகிறான். அவர்கள் வாழ்வில் நிறைவைக் காணாது தங்களுடைய தவறான விசுவாசத்தினாலே, ஆயுசு நாட்களை வருத்தத்தோடும் சஞ்சலத்தோடும் கழிக்கிறார்கள்.

## மோசேயின் ஜெபம்

இதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக, தேவனுடைய மனிதனாகிய மோசேயின் ஜெபம் (சங்கீதம் 90) வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஜெபத்தில் மோசே, மனுஷருடைய நிலைவரமற்றத் தன்மையை அறிக்கையிட்டு, எடுத்துரைத்து தன் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, கர்த்தருடைய கிருபையால் தன்னைக் கர்த்தர் திருப்தியாக்கும்படியாக வேண்டுகிறார்.

மனுஷருடைய வாழ்வின் சஞ்சலத்தையும், அற்பமான ஆயுசுநாட்களையும் பாவநிலையையும் வெளிப்படுத்தும்படியாக: காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்: அது காலையிலே முளைத்துப் பூத்து மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம் (சங்கீதம் 90:5,6) என்றும்; எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும் எங்கள் அந்தரங்க பாவங்களை உமது வெளிச்சத்திலும் நிறுத்தினீர் (சங்கீதம் 90:8) என்றும் அறிக்கையிடுகிறார்.

மனுஷருடைய அக்கிரமம் மற்றும் அந்தரங்க பாவத்தின் விளைவாகவே மேலும் அவர்: எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய் கடந்து போகிறது, நாங்களும் பறந்து போகிறோம் (சங்கீதம் 90:10) என்று மோசே அறிக்கையிடுகிறார்.

நிலையற்ற வாழ்வும், கர்த்தர் குறித்த நாட்களுக்கு குறைவான ஆயுசு நாட்களும், வருத்தமும் சஞ்சலமும், அக்கிரமம்

மற்றும் அந்தரங்க பாவத்தின் நிமித்தமே மனுஷரைப் பற்றிப்பிடிக்கிறது. இதற்கு முற்றிலும் மாறாக, நற்சாட்சியோடு வாழுகின்ற விசுவாசமார்க்கத்தாரும் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் நிலையற்ற அற்பமான ஆயுசு நாட்களையும் பெற்றுக்கொள்ளுவார்கள் என்று போதிப்பது வஞ்சகமே.

## தவறான விசுவாசம்

நம்மில் அநேக தேவனுடைய பிள்ளைகளும், இந்த வார்த்தைகளை, வாழ்வின் அடிப்படை சத்தியம் என நம்பி வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய ஆயுசு நாட்கள் எழுபது அல்லது எண்பது வருஷம்தான் என்று எண்ணுகிறது மாத்திரமல்லாமல், இந்த வார்த்தைகளை விசுவாசிப்பதன் மூலம், (தவறான விசுவாசம்) தங்கள் வாழ்வில் வருத்தமும் சஞ்சலமும் வர காத்திருக்கிறவர்களாக காணப் படுகிறார்கள். மேலும், இவ்வகையான பாதகங்கள் தங்கள் வாழ்வில் வந்தால் பொறுமையோடு சகித்துக்கொள்ளவும் பழகிக்கொள்ளுகிறார்கள். என்னதொரு அவல நிலை!

கர்த்தர் நியமித்திருக்கிற ஆயுசின் நாட்கள் பூரணப்பட்டு எல்லா நிலையிலும் நிறைவாகக் காணப்படுவதை இழந்து, வஞ்சகத்தால் தவறாக விசுவாசித்து மோசம்போகும் நிலை. இது பிசாசானவனின் தந்திரம் என்று தேவனுடைய பிள்ளைகள் உணரும்போது, விசுவாசத்தோடு ஜெபித்து அவற்றை எளிதாக மேற்கொள்ளுகிறார்கள். அல்லேலூயா!

மோசே தன்னுடைய ஜெபத்தில் தொடர்ந்து, நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும் (சங்கீதம் 90:14) என்று வேண்டுகிறார். கர்த்தர் மோசேயின் வேண்டுதலைக் கேட்டு, எல்லா வகையிலும் அவரை ஆசீர்வதித்து, அவருடைய ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துகிறதை. வேதாகமத்தில் வாசிக்கிறோம். மோசே மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருந்தான்; அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை (உபாகமம் 34:7) என்று எழுதப்பட்டிருக்கிறது. அல்லேலூயா!

## பூரணப்படுத்தும் தேவன்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, எல்லா நிலையிலும், நம் ஆயுசு நாட்களின் எல்லா காலக்கட்டங்களிலும்,



நம்மைப் பூரணப்படுத்தும் தேவன் நமக்கு இருக்கிறார். அவரை வாஞ்சையாக தேடும் நம் ஒவ்வொருவரையும், நீடித்த நாட்களால் திருப்தியாக்குவேன் என்று வாக்கருளியிருக்கிறார். கர்த்தருக்கு பயப்படுதல் ஆயுசு நாட்களைப் பெருகப்பண்ணும். கர்த்தருக்கு பயந்து உயிரோடிருக்கும் நாளெல்லாம் கர்த்தர் விதிக்கிற அவருடைய எல்லா கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளுகிறதினாலே வாழ் நாட்கள் நீடித்திருக்கும் (உபாகமம் 6:1) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆயுசு நாட்கள் எழுபது அல்லது எண்பது வருஷம் என்றும், அதின் மேன்மை வருத்தமும் சஞ்சலமும் என்றும் கர்த்தர் சொல்லவே இல்லை. அது உலக வழக்காக, நம்பிக்கையாகவே உள்ளது என்று மோசே குறிப்பிடுகிறார். தவறான விசுவாசத்தை விட்டொழித்து, இயேசுவையே வாஞ்சித்து தேடுவோம்! கிறிஸ்துவுக்குள் நமக்கு நியமிக்கப்பட்ட ஆயுசு நாட்கள், 20 வருடங்கள் ஆனாலும், எழுபதோ, எண்பதோ, ஆனாலும், வருத்தமும் சஞ்சலமுமின்றி, வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, கர்த்தருடைய கிருபையால் திருப்தியாக்கப்பட ஒப்புக்கொடுப்போம்!

முதிர் வயது வரைக்கும் தேவனுடைய பிள்ளைகளை, ஏந்தி சுமந்து தப்புவிக்கிற தேவன் நமக்கு உண்டு! முதிர் வயதிலும் அவர்கள் செழித்திருப்பார்கள்; கனி தந்து புஷ்டியும் பசுமையுமா யிருப்பார்கள்! தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், அக்கிரமங்கள் அந்தரங்க பாவங்களிலிருந்து விடுபட்டு, கர்த்தரோடுள்ள உறவில் பூரணப்பட்டு, கர்த்தர் மேல் விசுவாசமுள்ளவர்களாய் செயல்படுவோம்!

தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும், இவ்விதமாக சோர்வடையச்செய்து, கர்த்தருடைய ஆசீர்வாதங்களை இழக்கச்செய்யும் இப்பேர்ப்பட்ட கடைசிக் கால வஞ்சகங்களை, கள்ளப்போதகங்களை இனங்கண்டு தவிர்த்திடுவோம்! விசுவாச மார்க்கத்தாரிடையே இந்த எச்சரிப்பின் சத்தம் தெளிவாய் தொனிக்கட்டும், எதிரொலிக்கட்டும்!. கர்த்தர் தாமே இந்த வசனங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென். அல்லேலூயா!

## சங்கீதம் 90

ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்.
பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும்,
நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.
நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்.

உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும்
இராச்சாமம்போலவும் இருக்கிறது. அவர்களை வெள்ளம்போல்
வாரிக்கொண்டுபோகிறீர்; நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள்;
காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.
அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம்.

நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உமது உக்கிரத்தினால் கலங்கிப்போகிறோம்.
எங்கள் அக்கிரமங்களை உமக்குமுன்பாகவும்,
எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்.
எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது;
ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்.

எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம்,
பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும்,
அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே;
அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்.
உமது கோபத்தின் வல்லமையையும்,
உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்துகொள்ளுகிறவன் யார்?

நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி,
எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.
கர்த்தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்?
உமது அடியாருக்காகப் பரிதபியும்.

நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி,
காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.
தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட
வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்.

உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும்,
உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக.
எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக;
எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்;
ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்.

**உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன்!**

# 12. தேவனே உம்மைப்பார்க்க ஆசை!

*கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்;*
*நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும்,*
*அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும்,*
*நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில்*
*தங்கியிருப்பதையே நாடுவேன்* (சங்கீதம் 27:4)

தேவனோடுள்ள உறவின் நிறைவாக, தேவனுடைய வல்லமையும் மகிமையும் நம்முடைய வாழ்வில் தோன்றி சாட்சியாக வெளிப்பட கர்த்தர் நமக்கு கிருபையருளுகிறார். இந்த தேவனைப்பார்க்க நமக்குள்ளான ஆவலைப்பற்றி சங்கீதம் 63இல் வாசிக்கிறோம். **ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களின்** நிறைவான பொக்கிஷமாக 63ஆம் சங்கீதத்தைச் சார்ந்த இச்செய்தி அமைந்து பூரணப்படுததுகிறது.

### உம்முடைய மகிமையை எனக்குக் காண்பியும்

கர்த்தர் தமக்கென தெரிந்துகொண்ட இஸ்ரவேல் புத்திரரை, எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர், அற்புத அடையாளங்களோடும், ஓங்கிய புயத்தினாலும், பலத்தக் கரத்தினாலும் மீட்டெடுத்தார். வாக்களிக்கப்பட்ட பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்துக்கு, கர்த்தர் அவர்களைப் பிரயாணமாய் வனாந்தரத்தின் வழியாக அழைத்துச் சென்றார். அப்பொழுது கர்த்தர், தேவனுடைய மனுஷனாகிய மோசேயை நோக்கி: அவர்கள் (இஸ்ரவேல் புத்திரர்) நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக (யாத்திராகமம் 25:8) என்றார்.

கர்த்தருடைய வார்த்தையின்படியும், கர்த்தர் மோசேக்கு காண்பித்த மாதிரியின்படியும் அமைக்கப்பட்ட பரிசுத்த

ஸ்தலத்துக்கு, மோசே “ ஆசரிப்புக்கூடாரம்” என்று பேரிட்டான். மோசே இந்த பரிசுத்த ஸ்தலமாகிய கூடாரத்துக்குள் பிரவேசிக்கையில் மேகஸ்தம்பம் இறங்கி, கூடார வாசலில் நின்றது, கர்த்தர் மோசேயோடே பேசினார். ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார் (யாத்திராகமம் 33:9,11).

மோசே கர்த்தர் பேசுகிறதையும், அவருடைய வார்த்தை களையும் சத்தத்தையும் கேட்டிருந்தாலும், தேவனுடைய முகத்தையும் அவருடைய மகிமையையும் அம்மட்டும் காணாதிருந்தார். கர்த்தர் மோசேயை நோக்கி: என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது, உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார். அப்பொழுது மோசே: உம்முடைய மகிமையை எனக்கு காண்பித்தருளும் என்றார். அதற்கு கர்த்தர், நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது என்றார் (யாத்திராகமம் 33:17,18,20).

பின்னர் கர்த்தர், இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு, நீ அங்கே கன்மலையில் நில்லு. என் மகிமை கடந்து போகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்து போகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன். பின்பு என் கரத்தை எடுப்பேன், அப்பொழுது என் பின்பக்கத்தைக் காண்பாய் என் முகமோ காணப்படாது என்றார் (யாத்திராகமம் 33:21-23). அப்படியே கர்ததர் ஒரு மேகத்தில் இறங்கி, அங்கே அவன் அருகே நின்று, கர்த்தருடைய நாமத்தைக் கூறினார்.

கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது அவர்: கர்த்தர், கர்த்தர் இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும் மகா தயையும் சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்.



## இயேசுவே தேவனை வெளிப்படுத்தினார்

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோவான் 1:18) என்று யோவான் எழுதியிருக்கிறார். தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்சூரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது (கொலோசெயர் 1:15, 2:9) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து நம்மைப் போலொத்த மனிதனாக வாழ்ந்த நாட்களில் தாம் செய்தக் கிரியைகளின் மூலமாக நமக்கு, பரிசுத்தப் பிதாவின் தன்மைகளை வெளிப்படுத்தினார். இப்பூமியில் வாழ்ந்த நாட்களில், அவர் என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள், இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார் (யோவான் 14:7). மோசேயும், தாவீதும் இன்னும் பல தேவமனிதர்களும், தேவனுடைய மகிமையைத் தங்கள் வாழ்வில் கண்டுணர்ந்து வேதாகமத்தில் சாட்சியாக எழுதிவைத் திருக்கிறார்கள்.

## தாவீதுக்கு தேவனைப்பார்க்க ஆசை

சங்கீதக்காரனாகிய தாவீது, தன்னுடைய வாழ்வின் நெருக்கத்தில், வறண்டு விடாய்த்துப்போன நிலையில், யூதாவின் வனாந்தரத்திலிருக்கையில், தேவனைப்பார்க்க வாஞ்சித்து பாடின பாடல் சங்கீதம் 63ஆக வேதாகமத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. தேவனே, நீர் என்னுடைய தேவன், அதிகாலமே உம்மைத் தேடுகிறேன். வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே, என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன் (சங்கீதம் 63:1,2) என சாட்சியாக எழுதிவைத்திருக்கிறார்.

தேவனே, நீர் என்னுடைய தேவன் என்று சொந்தம் பாராட்டி சொல்லுகிறது, தாவீதுக்கு தேவனோடுள்ள உறவின் நிச்சயத்தையும் நெருக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. இதை வாசித்து தியானிக்கும் நம்மில் அநேகருங்கூட, இவ்வகையான வறண்ட விடாய்த்த நிலைகளில், நெருக்கங்களில் இருக்க வாய்ப்புண்டு. இந்நிலைகளில் நாமும், தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்மை மீட்டெடுத்திருக்கிற இயேசுகிறிஸ்துவின் மூலமாக, பரிசுத்தப் பிதாவாகிய தேவனோடுள்ள உறவில் இணைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகயிருக்கிறது. நாமுங்கூட அப்பொழுது தாவீதைப் போன்று தேவனே, நீர் என்னுடைய தேவன் என நம்முடைய வாழ்வின் வறண்ட நிலைகளில் தேவனை நோக்கிக் கூப்பிடமுடியும். அல்லேலூயா!

அதிகாலமே உம்மைத் தேடுகிறேன் என்பது, இயேசு கிறிஸ்துவின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட உறவு, அனுதினமும் அவரை நாடித்தேடி பராமரிக்கப்படுகிறதைக் காட்டுகிறது. அதிகாலமே என்பது காலையில் எழுந்தவுடன் முதலாவது தேவனைத் தேடுகிறதை மட்டுமல்லாமல், தன் வாழ்வில் எல்லாவற்றைக் காட்டிலும் கர்த்தருக்கே முதலிடத்தை தாவீது அளித்ததை வெளிப்படுத்துகிறது. கர்த்தர்மேல் உள்ள வாஞ்சை வேட்கை தாகம், அதிக நேரம் கர்த்தருடைய சந்நிதானத்தில் காத்திருக்க, பிரதானமான மிகச்சிறந்த நேரத்தை கர்த்தருக்கென கொடுத்து, அவரோடுள்ள உறவில் நிலைத்திருக்க நம்மை ஏவுகிறது.

தாவீது இப்படியே பரிசுத்த ஸ்தலத்திலே தேவனைப் பார்க்க ஆசையாயிருந்து, தேவனுடைய வல்லமையையும் அவருடைய மகிமையையும் கண்டேன் என சாட்சியாக எழுதிவைத்திருக்கிறார். பரிசுத்த தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் கண்டமாத்திரத்தில், அவருடைய சரீரம் முழுமையும் உள்ளிந்திரியங்களும், தேவனைப் போற்றி துதித்து ஸ்தோத்தரித்தது. தாவீதின் ஆத்துமாவும் சிந்தையும், கைகளும் கண்களும் உதடுகளும், வாயும் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் தேவனைப் போற்றினது. அல்லேலூயா!

## உருமாற்றத்தை ஏற்படுத்திய தேவப்பிரசன்னம்

தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் கண்டமாத்திரத்தில், தாவீதை அந்நாளில் சுற்றியிருந்த யூதாவின்



வனாந்தரத்தைப் போன்றே வறண்டு விடாய்த்து இருந்த அவருடைய ஆத்துமா, நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல திருப்தியானது. தாவீதின் ஆத்துமா சோர்ந்து போகாமல், இளைப்படையாமல் தேவனைத் தொடர்ந்து பறறிக்கொண்டது. வறண்டு விடாய்த்த தண்ணீரற்ற நிலைமாறி, கர்த்தருடைய வல்லமையும் மகிமையும் துரிதமாய் தந்தருளின விடுதலையின் வார்த்தைகள் சாட்சியாக வெளிப்பட்டது.

நீர் எனக்குத் துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன். உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது. என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்ளோ, பூமியின் தாழ்விடங்களில் இறங்குவார்கள். அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள். நரிகளுக்கு இரையாவார்கள் (சங்கீதம் 63:7-10) என்று தன் வாழ்வில் உண்டான மாற்றத்தை தாவீது சாட்சியாக எழுதிவைத்திருக்கிறார். தேவனோடுள்ள உறவின் நிறைவினால், அவருடைய பிரசன்னத்தால், தாவீதின் வாழ்வில் தோன்றி வெளிப்பட்ட தேவனுடைய வல்லமை மகிமையினால், அவருடைய நெருக்கங்கள் மாறினது; தாவீது ராஜா தேவனில் களிகூர்ந்தார். இந்த சாட்சியைக் கேட்ட யாவரும் கர்த்தருடைய நாமத்தைக்குறித்து மேன்மை பாராட்டி மகிழ்ந்தார்கள். அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, வாழ்வின் நெருக்கங்களில் செய்வதறியாது கலங்கித்தவிப்போருக்கு, தாவீதின் இந்தப்பாடல் தெளிவானதொரு வழியைக் காட்டுகிறது. கிறிஸ்து இயேசுவின்மூலம் தேவனோடுள்ள உறவு ஸ்தாபிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்ட நிலையில், அனுதினமும் அதிகாலமே அவரைத்தேடி அந்த உறவு பராமரிக்கப்படுகையில் கர்த்தர் நம்முடைய வாஞ்சைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுகிறார். தேவனுடைய பிள்ளைகள் தேவனைப் பார்க்க கொண்டிருந்த ஆசையை நிறைவுசெய்து, தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் கண்டுணரச் செய்கிறார். அதனால்வரும் இரட்சிப்பை, விடுதலையை நாளுக்கு நாள் நற்செய்தியாக அறிவித்து, நம்முடைய சரீரங்களும் உள்ளிந்திரியங்களும் ஒருங்கிணைந்து தேவனைப் போற்றி துதித்து மேன்மைப்பாராட்ட கிருபையருளுகிறார். அல்லேலூயா!

அநேக ஆண்டுகளுக்கு முன்னர், சகோதரர் ஒருவர் வாழ்வின் நெருக்கங்களுக்குட்பட்டபோது, தேவனைத்தேடி தேவனிடத்தில் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார். சற்றும் எதிர்பாராதவகையில், மிகவும் ஆச்சரியப்படும் வண்ணமாக அவர் ஜெபம்பண்ணி எழுந்தபோது, தனக்கருகே இருந்த இருக்கையிலிருந்து இயேசுகிறிஸ்துவே அம்மட்டும் அமர்ந்திருந்து விண்ணப்பங்களைக் கேட்டு எழுந்து போனதைக் கண்டார். முழுமையாக இயேசுவைக் காணும் சிலாக்கியம் கிட்டாதபோதும், அவருடைய வஸ்திரத்தைக் கண்டார். அந்தக்காட்சியே, தெய்வீக பிரசன்னமே, அவருடைய நெருக்கத்தை, வேதனையை அந்நாளிலே மாற்ற வல்லமையுள்ளதாயிருந்தது. அல்லேலூயா!

## சேனைகளின் கர்த்தரைக்கண்ட ஏசாயா

ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கக்கண்டேன், அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது (ஏசாயா 6:1) என்று ஏசாயா தீர்க்கதரிசி வேதாகமத்தில் எழுதிவைத்திருக்கிறார். அந்த உன்னதமான காட்சியைக் கண்டமாத்திரத்தில், ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றான் (ஏசாயா 6:5). அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து ஒரு நெருப்புத்தழலை எடுத்து ஏசாயாவின் வாயைத்தொட்டு, இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான். மகிமையான தேவனுடைய பிரசன்னத்தில், மகத்துவமுள்ள அவருடைய வார்த்தைகளைப் பெற்றுக்கொண்டார்.

பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே என்ற வார்த்தையின்படி, அக்கிரமம் நீங்கி பாவம் நிவிர்த்தியானபோது, தேவனுடைய மகிமையைக் காணவும், வார்த்தைகளைக் கேட்கவும், ஏசாயா தீர்க்கதரிசி கிருபை பெற்றார். இதைப்போன்றே இப்பொழுது கிருபையின் நாட்களில் வாழும் தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய மகிமையையும் வல்லமையையும் காணும் கிருபையை பெற பாவமற சுத்திகரிக்கப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. நம்முடைய



பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா யிருக்கிறார். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது என்று 1 யோவான் 1:9 மற்றும் 7 ஆம் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இயேசுவைப்பார்க்க வகைதேடின சகேயு

சகேயு என்ற ஒரு மனுஷன் இயேசுவைப் பார்க்க விரும்பினதையும், அதனிமித்தம் அவனும் வீட்டாரும் இரட்சிக்கப்பட்டதையும் பற்றிய சம்பவம் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, எரிகோ என்னும் பட்டணத்தில் பிரவேசித்து, அதன் வழியாக நடந்து போகையில், ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகை தேடினான். அவன் குள்ளனானபடியால் ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்திமரத்தில் ஏறினான் (லூக்கா 19: 1-4).

இயேசுவைப்பற்றி கேள்விப்பட்ட சகேயு, இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்க்க ஆசையாயிருந்தான், வகைதேடினான். சகேயு ஆயக்காரருக்குத் தலைவன் Chief Tax-Collector என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நாட்களில் ஆயக்காரர்கள் ஜனங்களிடத்தில் வரிவசூலிப்பதில் செய்துவந்த முரண்பாடுகளினால், அவர்கள் பாவிகள் என்றே முத்திரைப் பெற்றிருந்தனர். எரிகோவில் பிரபலமான ஐசுவரியவானாக இருந்தபோதிலும், சகேயுவுக்குள்ளிருந்த இயேசுவைக் காணவேண்டும் என்கிற ஆசையின் மிகுதியால், சமுதாயத்தில் தனக்கிருந்த அந்தஸ்தையும் பொருட்படுத்தாமல், ஒரு சிறுவனைப்போல சகேயு மரத்தில் ஏறினான். இருதயத்தைப் பார்க்கிற கர்த்தர் சகேயுவின் உள்ளத்தின் வாஞ்சையைக் கண்டு, அவன் வீட்டில் தங்கவேண்டும் என்றார்.

அதைக்கண்ட ஜனங்கள் யாவரும், பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்.

இயேசு சகேயுவின் வீட்டிற்குச் சென்றபோது, இயேசுவைக் கண்ட உடனே, அங்கே ஒரு விடுதலை, உருமாற்றம் உண்டாகிறது. மகிமையுள்ள கர்த்தரின் மகத்துவமுள்ள பிரசன்னம், சகேயுவை, ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்; நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திருப்பிச் செலுத்துகிறேன் என்று சொல்லச் செய்தது. இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார் (லூக்கா 19:8-10).

தாவீது தேவனோடுள்ள உறவின் நிறைவில், அவரை நாடித்தேடினபோது, தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் கண்டார்; அவருடைய வாழ்வின் நெருக்கங்கள் மறைந்தது. ஆனால் சகேயுவின் வாழ்வில் குறைவுகளுக்கும், தாறுமாறுகளுக்கும் இடையிலும், அவன் இயேசுவைப் பார்க்கக்கொண்டிருந்த தீராத வாஞ்சையின் நிமித்தம், இயேசுவே அவரைத் தேடிவந்து இரட்சிப்பையருளினார். இந்த நிகழ்வு நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பாவிகளை இரட்சிக்கவே உலகத்தில் வந்தார் என்கிற அவரது நோக்கத்தை தெளிவாக எடுத்துரைக்கிறது. இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே, மனுஷகுமாரன் வந்திருக்கிறார். அல்லேலூயா!

## ஏரோதுக்கும் இயேசுவைப்பார்க்க ஆசை

தன்னுடைய பாவ வாழ்வினிமித்தம் யோவான் ஸ்நானகனால் கடிந்துரைக்கப்பட்டபோது, காற்பாங்கு தேசாதிபதியாகிய ஏரோது, அவனைக் கொலைசெய்ய மனதாயிருந்தான். பின்னர், யோவான்ஸ்நானகனைச் சிரச்சேதம் பண்ணி கொலைச்செய்தான். யோவானை நான் சிரச்சேதம் பண்ணினேன், இயேசு இப்படிப்பட்டவைகளைச் செய்கிறார் என்று கேள்விப்படுகிறேனே, இவர் யார்? என்று ஏரோது சொல்லி இயேசுவைப் பார்க்க விரும்பினான் (லூக்கா 9:9).

அந்நாட்களில் சில பரிசேயர் இயேசுவினிடத்தில் வந்து, ஏரோது இயேசுவையும் கொலைசெய்ய மனதாயிருக்கிறான் என்பதாக சொன்னார்கள். அதற்கு இயேசு: நான் இன்றைக்கும்



நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன். இன்றைக்கும் நாளைக்கும், மறுநாளைக்கும் நான் நடமாட வேண்டும். எருசலேமுக்கு புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்து போவதில்லையென்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள் (லூக்கா 13:31-33) என்றார்.

ஏரோது இயேசுவைக்குறித்து அநேகக்காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்டபோது மிகவும் சந்தோஷப்பட்டான் (லூக்கா 23:8) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டிருந்த ஏரோது, இயேசுவைப் பார்க்க ஆசைகொண்டதன் நோக்கம் தவறானதாகவே இருந்தது. மனுஷருள்ளத்திலிருப்பதை இயேசு அறிந்திருந்தபடியால் மனுஷரைக்குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை (யோவான் 2:26). இயேசு ஏரோதின் உள்ளான நோக்கத்தை அறிந்திருந்தபடியால், நரி என்று அவனைக் குறிப்பிடுகிறார். தந்திர குணமுள்ள நரியைப் போன்றே, நயவஞ்சத்துடனேயே ஏரோது இயேசுவைப் பார்க்க ஆவலாயிருந்தான். இயேசு அவனுக்கு மறுமொழியாக ஒன்றும் சொல்லவில்லை; ஏரோதின் ஆசை நிறைவேறாமல் போனது.

## தேவனே உம்மை நெருங்கி சேர்வதே என் ஆவல்

தேவனே நான் உமதண்டையில், இன்னும் நெருங்கி சேர்வதே என் ஆவல் பூமியில் என பக்தன் வாஞ்சித்துப் பாடின பாடலை நம்மில் அநேகரும் பாடி தேவனைத் துதிக்கிறோம். தேவனைப் பார்க்க நமக்குள்ளான ஆசையை வெளிப்படுத்துகிறோம். இந்தக் கடைசி நாட்களில், மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் அநேகருடைய வாஞ்சையும் தாகமும், தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் தங்கள் வாழ்விலும் அனுபவித்துணர வேண்டும் என்பதாக இருக்கிறது. மிகவும் நல்லது!

இந்நாட்களில் அநேக தேவமனிதர்களுடைய செய்திகளும் சாட்சிகளுங்கூட தேவனோடுள்ள உறவை பிரதானப்படுத்தி, தேவனுடைய பிரசன்னத்தை நாம் நாடித்தேட நம்மையும் ஏவுகிறது. மோசே தாவீது ஏசாயா போன்ற தேவமனிதர்கள் தேவனைப்பார்க்க கொண்டிருந்த ஆசையும், அவர்களது அனுபவங்களும், அவர்கள் வாழ்வில் தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் கண்டறிய வகைசெய்தது எனப்பார்த்தோம். இதனிமித்தம் அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து வாக்குத்தத்தங்களையும், விடுதலையையும் வழிநடத்துதலையும் பெற்றுக்கொண்டார்கள். ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார். தாவீது பரிசுத்தஸ்தலத்திலே தேவனைப்பார்க்க ஆசையாயிருந்து, அவருடைய வல்லமையையும் மகிமையையும் கண்டார். ஏசாயா தீர்க்கதரிசி, கர்த்தருடைய மகிமையுள்ள பிரசன்னத்தில் ஊழிய அழைப்பைப் பெற்றார்.

சகேயுவின் வாழ்வில் இதே ஆசையை சற்று வித்தியாசமானக் கோணத்தில் காண்கிறோம். முந்தின தேவமனிதர்கள், தேவனோடுள்ள உறவின் நிறைவாக தங்கள் வாஞ்சைகளை வெளிப்படுத்தி ஆசீர்வதிக்கப்பட்டனர். ஆனால் சகேயுவின் வாழ்விலே, இயேசுவைக் காண வேண்டும் என்ற ஆசை, வாஞ்சை தேவனோடு அவனுக்கு உறவை ஏற்படுத்தியது. சகேயுவும் அவன் வீட்டாரும் இரட்சிக்கப்பட்டார்கள். அல்லேலூயா!

காற்பாங்கு தேசாதிபதியான ஏரோதின் வாழ்வில் காணப்பட்ட ஆசை, இரட்சிப்பிற்கோ ஆசீர்வாதங்களுக்கோ வழிவகுக்கவில்லை. அநேக காரியங்களைக் குறித்து ஏரோது இயேசுவினிடத்தில் வினாவினான். ஆனால் அவரோ மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை.

## உங்களுடைய ஆவல் என்ன?

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, பரிசுத்தமும் அன்பும் உண்மையும் உள்ளவர்களாய், இயேசுகிறிஸ்துவை நோக்கிப்பார்த்து, அவருடைய மகிமையுள்ள பிரசன்னத்தால் நிரப்பப்பட்டு, நம்மில் அநேகர், வாழ்வின் நெருக்கங்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம். அவராலே கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய அழைப்பைப் பெற்று, வழிநடத்தப்



படுகிறோம். பாவங்களுக்கும் சாபங்களுக்கும் உலகத்திற்கும் அடிமைப்பட்ட நிலையில், இயேசுவை கண்டறிய வேண்டும் என ஆவலாய் அவரைத் தேடுகிறபோது, அநேகர் வீட்டாரோடு இரட்சிக்கப்படுகிறார்கள்.

இவைகளுக்கு முற்றிலும் மாறாக, இயேசுவைக் கண்டுணர்ந்து, அந்த உறவின் நிறைவாக அருளப்படும் கிருபையின் வரங்களை தங்களுடைய சுய மேன்மைக்காகவும், தற்பெருமைக்காகவும், பிழைப்பிற்கடுத்தவைகளுக்காகவும் உபயோகிக்க விளைகிறவர்கள் ஏரோதைப்போன்று கர்த்தரிடத்தில் யாதொன்றையும் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. இருமன முள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக என யாக்கோபு தன் நிருபத்தில் சொல்லியிருக்கிறார்.

தந்திரமான குணத்துடன் நரியைப்போன்று நயவஞ்சகத்துடன் செயல்படும் இவ்வகையான ஊழியர்களையும் ஊழியங்களையும் குறித்து இந்நாட்களில் அநேக தேவமனிதர்கள் எச்சரித்திருப்பதை நாம் அறிவோம். அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ் செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள் (மல்கியா 3:18) என்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

## பொல்லாங்காய்த் தோன்றுகிறவற்றை விட்டுவிலகு

அசலுக்கும் நகலுக்கும், உண்மையோடும் அன்போடும் பரிசுத்தத்துடனும் தேவனுடைய நாம மகிமைக்கென செய்யப்படும் ஊழியங்களுக்கும், இதற்கு மாறான தன்மைகளோடுள்ள ஊழியங்களுக்கும் ஊழியர்களுக்கும் மனுஷருக்குமுள்ள வித்தியாசங்களை கர்த்தர் வெளிப்படுத்தும் கடைசி நாட்களில், கொடிய காலங்களில் நாம் இருக்கிறோம்.

இந்தக் காலக்கட்டத்திலே மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், தூஷிக்கிறவர்களாயும், நன்றியறியாதவர் களாயும், கீழ்ப்படியாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், துரோகிகளாயும் இருப்பார்கள் என்பது போன்ற ஒரு பெரிய

பட்டியலையே பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் (3:1-5) குறிப்பிடுகிறார். நிறைவாக, மனுஷர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக் கிறவர்களாயும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு என்று தெளிவாக ஆலோசனையருளியிருக்கிறார். அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. அதற்கு முன்னர், உனக்கருளப்பட்டிருக்கிற சொற்பகாலத்தில், பரிசுத்தத்துடன் வாஞ்சையோடு தேவனை நோக்கிப்பார்ப்பாயா? தேவனுடைய பிரசன்னத்தால், வாழ்வு பிரகாசமடைந்து, விடுதலையோடு இயேசுவை சாட்சியாக அறிவிக்க உன்னை நீ அர்ப்பணிப்பாயா? ஒப்புக்கொடுக்கிற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. தேவனோடுள்ள உறவின் நிறைவாக, தேவனுடைய வல்லமையும் மகிமையும், உன் வாழ்வில் தோன்றி வெளிப்பட, கர்த்தர் கிருபையருள்வாராக. ஆமென். அல்லேலூயா!



# சங்கீதம் 63

தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்;
வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே
என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது,
என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.

இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து,
உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன்.
ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது;
என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.

என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து,
உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்.
நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்துமா திருப்தியாகும்;
என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்.

என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது,
இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்.
நீர் எனக்குத் துணையாயிருந்ததினால்,
உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்.

என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறது;
உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது.
என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்களோ,
பூமியின் தாழ்விடங்களில் இறங்குவார்கள்.

அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்; நரிகளுக்கு இரையாவார்கள்.
ராஜாவோ தேவனில் களிகூருவார்;
அவர்பேரில் சத்தியம்பண்ணுகிறவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள்;
பொய் பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும்.

**தேவனே உம்மைப்பார்க்க ஆசை!**

# புத்தகத்தைப் பற்றி ...

இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட நாட்கள் துவங்கி இம்மட்டும், நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும், வேதாகமத்தின் சங்கீதங்கள் நமக்கு அரியதொரு பொக்கிஷமாக இருந்து வருகிறது. சங்கீதங்கள், சத்தியவசனங்களை அனுபவ சாட்சிகளுடன் தெளிவாக எளிய முறையில் எடுத்துரைக்கிறது.

முந்தினகாலத்தில் கர்த்தர் நடப்பித்த கிரியைகளின் சரித்திர உண்மைகள்; இவைகள் எழுதப்பட்ட நிகழ்காலங்களில், ஏறெடுக்கப்பட்ட ஜெபங்கள், துதி ஸ்தோத்திரங்கள், சாட்சிகள் மற்றும் வருங்கால சம்பவங்களை எடுத்துரைக்கும் தீர்க்கதரிசன வசனங்களும் சங்கீதங்களில் இடம் பெற்றுள்ளது.

இயேசுகிறிஸ்துவுக்காக வாழ அர்ப்பணித்திருக்கும் சகோதரர் வாழ்வின் பல நிலைகளில் காலங்களில், கர்த்தர் இடைபட்டு தெளிவுபடுத்தின சங்கீதங்களைச் சார்ந்த செய்திகளின் தொகுப்பே இந்த புத்தகமாகும். **ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்**களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சாட்சியின் வார்த்தைகளில் சில பொக்கிஷங்கள், இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

- தேவனுடைய செய்கைகளை வந்துபாருங்கள்.
- கர்த்தரிடத்தில் கிருபையும் திரளான மீட்பும் உண்டு.
- தேவனே உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்.
- அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம்!
- இயேசு நம்மை ஒருபோதும் கைவிடார்!
- உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்.
- ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்!
- நீ அசைக்கப்படுவதில்லை!
- இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகள்!
- கர்த்தர் பெரியவர்! மிகவும் புகழப்படத்தக்கவர்!
- உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன்!
- தேவனே உம்மைப் பார்க்க ஆசை!

பிரியமானவர்களே, இந்தச் செய்தி தொகுப்பை வாசித்து பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு தியானித்து பயன்பெறுங்கள். உங்களால் கூடுமானால், வாஞ்சையாயிருப்பவர்களுக்கு இதைப் பகிர்ந்து உதவுங்கள், அறிமுகப்படுத்துங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!